# தெய்வீக இயல் / இறையியல்

# Theology / Theology Proper

தேவனை / இறைவனை பற்றிய வேதாகம கல்லூரியின் பாடங்கள்

# Table of Contents

*1. இறைவனை அறிந்துகொள்ளுதல்*.................................................................... 3

*2. இறைவனின் தன்மையை அறிந்துகொள்ளுதல்*.............................................. 12

*3. இறைவனின் குணாதிசயங்களை அறிந்து கொள்ளுதல்*.................................. 17

*4. இறைவனின் சித்தத்தை அறிந்து கொள்ளுதல்*.............................................. 36

*5. இறைவனின் திரித்துவத்தை அறிந்து கொள்ளுதல்*........................................ 43

*6. இறைவனின் சிருஷ்டிப்பை அறிந்து கொள்ளுதல்*......................................... 62

# 1. இறைவனை அறிந்துகொள்ளுதல்

இறைவனை அறிந்துகொள்ளுவதே மனிதனுடைய இன்றி அமையாததும் அடிப்படையுமான தேவையாகும். காரணம், இவ்வுலகில் வாழும் காலத்தில் ஒருவன் உண்மையான தெய்வத்தை அறிந்து கொள்ளாது விட்டால் அதன்பின் என்றுமே அவனால் அந்த இறைவனை அறிந்துகொள்ள முடியாது.

எனினும் இன்றைய உலகை அவதானிக்கையில், இவ்வாறு இறைவனை அறிந்து கொள்வது அர்த்தமற்றது என்றும் அவசியமற்றது என்றும் மக்கள் கருதி வருவதைக் கண்டிட இயலும். இறைவனை அறிந்துகொள்வது அர்த்தமற்றது என எண்ணுவோர் கற்பிக்கும் காரணம். அவர் அறியப்பட முடியாதவராயிருக்கிறார் என்பதாகும். ஆனால் அவசியமற்றதென வாதிடுவோர் கூறும் காரணம் இறைவன் என்றொருவர் இல்லையாதலால் இல்லாத ஒருவரை இருப்பதாக எண்ணி அவரை அறிய முற்படுவது அவசியமற்றது என்பதேயாகும். முன்னையது அறியொணாமைக் கொள்கை (Agnosticism) என அழைக்கப்படுகின்றது. பின்னையதை நாம் "அறிவிலிக் கொள்கை" என அழைக்கலாம். காரணம் இறைவன் இல்லை என அறிவற்றவர்கள் சொல்வார்கள் என வேதம் கூறுவதினால் (சங்.14:1) இதனை இறைவனை மறுதலிக்கும் கொள்கை (Atheism) என நாம் அழைப்பதில் தவறில்லை.

## அறியொணாமைக் கொள்கை

இக்கொள்கை, மனிதனுடைய குறுகிய மட்டுப்படுத்தப்பட்ட வரையறைக்குட்பட்ட அறிவை அடிப்படையாய்க் கொண்டதாகும். இயற்கைக்கு அப்பால், எல்லை கடந்து காணப்படுபவற்றை மனிதனால் அறிந்து கொள்ள முடியாதென்பது இவர்களது வாதமாகும். ஆ.கி. தர்மராஜ் இதைப்பற்றி எழுதும்போது: கடவுள் முற்றிலும் துல்லியமாக அறியப்படக்கூடாதவர் என்று அறியொணாமைக் கொள்கை யினருடன் சேர்ந்து ஒத்துக் கொள்ளவேண்டும். கடவுள் கடவுளே மனிதன் மனிதனே. ஆகவே கடவுளை எங்ஙனம் முற்றிலும் கடவுளாகவே அறிந்து கொள்ள முடியும். மனிதனாக இருக்கும் மட்டும் தன்னுடைய எல்லை வரையறைக்குள் நின்றுதான் அவன் அறியமுடியும் இன்னும் அதிகமாக அறியவேண்டுமாயின், இறைவன் தாமே மனிதனுடைய எல்லை

வரையறையைத் தாண்டி வந்தாலொழிய அது கூடாததாகும். அதுவரை சமய சிந்தனையில் அறியொணாமைக் கொள்கைக்கு இடமுண்டு. தெர்ஸ்டீகனும் மனித அறிவாற்றல் ஒரு எல்லைக்கப்பால் செல்லக்கூடாது ஆகையால் கடவுளைப் பற்றிய கேள்விகளுக்கு விடை கொடுப்பது சாத்தியமற்றது என்று. அறியொணாமைக் கொள்கையினர் கூறுவது சரிதான் என்றார்.

இறைவன் இருப்பதை நம்மால் திட்டமாய் அறிந்து கொள்ள முடியாதென்பதே அறியொணாமைக் கொள்கையின் *Berkhof* தாற்பரியமாகும். சுட்டிக்காட்டியது. போல இவர்கள் "தம்மை நாஸ்திகர்கள் என காட்டிக்கொள்ள விரும்புவதில்லை. இறைவன் இருப்பதை அவர்கள் மறுதலிக்காத போதிலும், அவர் இருக்கிறாரா என்பதைப்பற்றி நமக்கு தெரியாது என வாதிடுவதோடு, அப்படியே இறைவன் இருந்தாலும் அவரை உண்மையாய் அறிந்துகொள்ள முடியாதென கருதுகின்றனர்." சுருங்கச் சொல்லின், மனிதனுக்கு இறைவனைப்பற்றிய உண்மையான அறிவில்லை. அத்தகைய அறிவைப் பெற்றுக்கொள்வதும் இயலாத காரியம் என்பதே

இவர்களது வாதமாகும்.

## அறிவிலிக் கொள்கை

அடிப்படையாக இருந்து வந்தது. இப்பொழுதோ அது மறைந்து விட்டது.ஆ.கி.தர்மராஜின் கருத்துப்படி," உண்மையிலேயே இம்முறை யாகச் சொல்லப்போனால் *Tillich* போன்ற பெரிய ஞானிகூட கடவுள் மாண்டு விட்டார் என்று எண்ணியதாகத் தோன்றுகின்றது. அவர் கடவுளை "நிலை பேறுடைய நமது உயிருருவின் அடித்தளம்' என்று வரையறுக்கிறார். ஆகவே *Allan Richardson* என்ற மற்றொரு ஞானி *Tillich* என்பவருடைய நோக்குநிலையை "சமய சார்பு கொண்ட நாத்திகம்'' என்று குறிப்பிடுகிறார்.

உலகின் எப்பாகத்திலும் கடவுள் இறந்துபோனார் என்ற எதிரொலி கேட்கிறது. கடவுள் மாண்டால், கடவுளுடன் எவ்வித மதச்சார்புடைய அனுபவமும் கிடைத்தல் கூடாத காரியம். ஆள்தன்மை சார்ந்த ஆன்ம உறவும் இருக்க முடியாது. கடவுள் உயிருள்ளவராய் இருப்பின் மக்கள் ஒரு உயிருள்ள ஆவியான ஆண்டவனுடன் மட்டுமே ஆன்மீக உறவு

கொள்ள முடியும். கடவுள் இல்லையென வாதிடும் நாத்திகர்கள் மக்களிடமுள்ள கடவுள் நம்பிக்கையைப்பற்றி கருதுவது என்ன என நாம் வினவலாம். பின்வரும் கருத்துக்களை அவர்களுடைய வாதங்கள் அறியத் தருகின்றன.

### 1கடவுள் "கற்பனையே"

*அச்சத்தாலும் ஐயத்தாலும் அமிழ்த்தப்பட்ட மனிதன் தப்பவகைதேடி ஒரு கடவுளைக் கற்பனையில் படைத்துக் கொள்கிறான். எனினும் சமய உணர்வு கற்பனையல்ல, உண்மையான அனுபவம். Rudolph Otto சுட்டிக்காட்டியதுபோல "ஆரம்பத்தில் அது பகுத்தறிவுக்குக் கட்டுப்படாத உணர்ச்சியாக உருக்கொண்டு, பகுத்தறிவுக்கும் அறநெறித் தத்துவத்திற்கும் கட்டுப்பட்டதொரு அந்தரங்க விசுவாசமாக வளர்ச்சியடைகின்றது.*

*கடவுள் மனிதனுடைய கற்பனையில் படைக்கப்பட்டவரல்ல. என்பதற்கான மற்றுமொரு வாதம், தர்மராஜின் வார்த்தையில்; "மனிதன் ஒரு பரிசுத்த இறைவனைப் படைத்தால், அங்ஙனம் படைத்தவன் பரிசுத் தத்தையே நாடுபவனாக இருத்தல் வேண்டும். ஆனால் அதுவல்ல நாம் காண்பது; மனிதன் பாவத்தை விட்டு விலக வேண்டுமென்ற அவாவினால் தூண்டப்படுவது எளிதன்று. பரிசுத்த மெய்ப்பொருளோ பாவத்தை விடுத்து. பரிசுத்தத்தை நாடுவதை விரும்புகின்றது. ஆகவே பரிசுத்தரான இறைவனை பாவப்பிடிப்பிற்கு அடிமையான மனிதன் படைப்பது முடியாத காரியம். பாவ மனிதன் கடவுளைப் படைத்ததுண்டானால் அக்கடவுள் பாவத்தை வெறுக்கும் பரிசுத்த கடவுளாகப் படைக்கப்படுவது அரிது. கடவுள் நம்பிக்கையுள்ள பக்தர் பரிசுத்தத்தை விரும்பி, பாவத்தை விட்டு விலக வேண்டும் என்கிற சித்தம் கொள்ளும் இறைவனை நம்புகின்றனர். ஆதலால் கடவுள் மானிட விளைவாகக் கற்பிக்கப்பட்டவர் என்பது தவறு.*

### 2 சுயநலத்தின் உருவாக்கம்

*ஆசாரியர்களினதும் அரசர்களினதும் சுயநலத்தின் காரணமாக*

*அவர்கள் கடவுள் என்றொருவரை உருவாக்கி அதன் மூலம் வாழ்க்கை நடத்தினர் என வாதிடுகின்றனர். எனினும் வயிற்றுப் பிழைப்புக்காக இதைவிட வேறு இலகுவான வழிகள் இல்லையோ என நாம் திருப்பிக் கேட்கவேண்டும். மக்களை மயக்கி, அடிமை ஆட்சியை நீடிப்பதற்கென்று*

மன்னரும் அவருடைய அலுவலரும் சமயத்தைப் பயன்படுத்தினர் என்று உரைப்பாரு முள்ளனர். அரசனுக்கடங்கி நடக்கும்படி ஆசாரியர் ஆலோசனை கூறினால் அரசரிடம் ஆசாரியர் ஆதாயம் பெறுவர். ஆகவே அரசரும் ஆசாரியரும் சேர்ந்து சமய வழிபாட்டுக்கூடாக மக்களை

ஏமாற்றினர் என கூறுவதுண்டு.

இறைவழிபாட்டில் எக்காலத்திலும் குறைபாடுகள் இல்லாமயில்லை. அவைகளை நிவிர்த்திக்கவென்று, அப்போதைக்கப்போது சீர்திருத்த வாதிகள் எழும்புவதை நாமறிவோம். ஆதலால் கடவுள் மக்களை ஏமாற்றும் சுயநலவாதிகளின் கற்பனைக் கருவி என்று முடிவுகட்டுதல் தவறு.

### *3 துயரங்களின் அடைக்கலம்*

உலகியல் ரீதியான மறுப்பு வருமா:- குழந்தைகள் தங்களுடைய பெற்றோரைக் கண்டு, பழகி, அந்த அனுபவத்தினின்று கடவுளின் சாயலைப் புனைந்து கொள்கின்றனர். குழந்தைப் பருவத்தில் அவர்கள் பெற்றோரின் ஆதரவு இன்றி வாழ இயலாதவர். அன்னார் தேவைகளைனைத்தையும் பூர்த்தி செய்பவர் பெற்றோர். வளர்ந்த பின் சமூக அல்லலுக்குள் அகப் பட்டுத் திகைக்குங்கால் பராமரிக்கும் துணையைக் காண நாட்டம் பிறக் கின்றது. நாள் செல்லச்செல்ல, துன்பங்கள் பெருக, துணைவராலும், பெற்றோராலும் உறவின் முறையாராலும் பெரும்பான்மையான அல்லல்கள் நீக்கப்படுகின்றன. எஞ்சிய துன்பங்களை நாட்டின் சட்டத்தின் மூலம் போக்கிக் கொள்ள முயல்கின்றனர். இன்னும் காலம் செல்லச் செல்ல, பெற்றோரும். மற்றோரும் நாட்டின் சட்ட நிபுணரும், நீதிபதிகளும் தீர்க்க வொண்ணா கடுந்துயரங்கள் வந்து மோதுங்கால், தீமையினின்று இரட்சிக்கக் கூடிய மகாபெரிய தெய்வத்தந்தையை உருவாக்கி, அவரே தன் கோட்டை யும் கேடகமும் அடைக்கலமும் என்று சரண்புகும் நிலையை அடை கின்றான்.

ஆனால் மனிதன் துன்ப காலத்தில் மட்டும் இறைவனை நினைத்து இன்ப நேரத்தில் அவரை அவமதிப்பது உண்மையானால் இவ்வெதிர்ப்பு நிற்கும். ஆனால் மக்கள் இன்ப துன்ப நேரத்திலும் அன்புள்ள ஆண்டவனை எண்ணித் துதித்தல் யாவருமறிந்ததே. Alexander Pope கூறும் வண்ணம் சொற்ப அறிவு ஆபத்தையே விளைவிக்கும் இவ்வுண்மையின்படி சொற்ப

அறிவு படைத்த மனிதன் அறிவுக்கெல்லாம் ஊற்றும் எல்லையுமான இறைவனையே மறுக்கக் கூடிய நிலைக்கு வந்திருக்கிறான். விஞ்ஞானமும் தத்துவ ஞானமும் மாறிக்கொண்டே இருப்பன. அவை முடிவான நிலையை அடைவதில்லை. ஆதலால் அவை எப்பொருளைப் பற்றியும் இறுதியான முடிவுக்கு வரமுடியாது. விஞ்ஞானம் முடிவுகட்டுவதெல்லாம் அதன் முடிவுக்கு முரணான இன்னொரு முடிவு வெளிவரும்வரை உண்மையென வழங்கக் கூடியதேயன்றி வேறில்லை. விஞ்ஞானத்திற்கு நிரூபணம் இல்லை அதற்கு மாறான ஒரு உண்மை தோன்றும் வரை அது நீடித்திருக்கக் கூடும். ஆ.கி.தர்மராஜ் சுட்டிக்காட்டியதுபோல, "நவீன விஞ்ஞான முன்னேற்றம் தீவிரமாய் சென்றிடினும் விஞ்ஞானம் இன்னும் குழந்தைப் பருவத்தில் தான் இருக்கின்றதென்று சொல்லவேண்டும். உண்மை, அழகு ஆகிய நன்மைகள் உண்டென்று நம்புகிறோம். ஆனால், நாம் நமது புலனுணர்வால் அவற்றை அறிந்து கொள்ளவில்லை.

அறியொணாமைக் கொள்கையும் அறிவிலிக் கொள்கையும் இறைவனை அறிய முடியாதென்றும், அறிந்து கொள்வதற்கு அப்படிப்பட்ட ஒருவர் இல்லையென்றும் வாதிட்டாலும், உண்மையான தெய்வத்தை அறியாத மக்கள் போலியான தெய்வக் கொள்கைகளை உடையவர்களாய் இருப்பதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

சமய வளர்ச்சி என்பது, ஒரு வழியில் மனிதன் கடவுளைப் பற்றிப் பெறும் கருத்துப் படிவத்தின் வளர்ச்சியாகும். இக்கருத்துப் படிவம் கடவுளைப்பற்றிய உணர்ச்சி நிலையில் வளர்ச்சியுடன் சேர்ந்தே விருத்தியடையும். இவ்வுணர்ச்சி நிலை மூன்று முதன்மையான படிவங்களில் காணப்படுகின்றது . அனைத்திறைக் கொள்கை (Pentheism) அருள் வெளிப்பாட்டை ஏற்காத இறையுண்மைக் கொள்கை (Deism) இயற்கை கடந்த கடவுருயிர்த் தொடர்புக் கொள்கை (Theism).

### 1 அனைத்திறைக் கொள்கை

இயல்பான யாவும், இறையுரு இயலுலகில் சஞ்சாரம் செய்வனவெல்லாம் மொத்தமாகக் கடவுள் என்று கொள்ளுதல். சடப் பொருள் சார்ந்த இயற்கை கடவுளின் ஒரு பாகமாகும். இதுவரையில் கண்டு பிடிக்கப்பட்டதும் இனிமேல் கண்டுபிடிக்கப்பட இருக்கிறதுமான இயலுக்கு அனைத்தும் கடவுளே. நானும் கடவுளின் ஒரு பாகம், நானே

கடவுள்.ஆ.கி.தர்மராஜ் சுட்டிக்காட்டியதுபோல, 'சிறிதும் விட்டுக் கொடுக்காத அனைத்திறைக் கொள்கைக்காரர்கள், 'உம்மண்டை தேவனே நான் சேரட்டும் என பாட முடியாது. ஏனெனில் ஏற்கனவே அவன் கடவுளின் ஒரு பாகம். கடவுள் உள்ளேயே உறைபவன்.

**2 இயற்கைச் சமய வாதம்**

இது அருள் வெளிப்பாட்டை ஏற்காத இறையுண்மைக் கொள்கை. இதில் கடவுளும் இயற்கையும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. இது கடவுளுக்கும் இயற்கைக்கும் மனிதனுக்கும் தொடர்பு இல்லை எனும் அடிப்படையில் தோன்றிய கொள்கை. பகுத்தறிவின் ஆய்வுக்கு உகந்த தாக எழுந்த இக்கொள்கை ஆன்மீக உணர்ச்சியை புறக்கணித்தது. 18ஆம் நூற்றாண்டின் முடிவுக்குள்ளாக ஒழிந்து போனது. ஆனால் மறுபடி யும் இக்கொள்கை J.S.Mill என்பாரின் கடவுளைப்பற்றிய விளக்கத்தில் புத்துயிர் பெற்றது. இப்படி தனித்திருக்கும் கடவுளைப்பற்றி Thomas Cavlyle என்பார். "இப்படிப்பட்ட கடவுள் வராத கடவுள் (absente God) உடனுறையாத கடவுள் முதல் ஓய்வு நாளில் இருந்து இதுகாலும் வீணாகக் காலங்கடத்தித் தான் படைத்த இயலுருக்கு வெளியே சோம்பலாக அமர்ந்து அது இயங்குவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் கடவுள்" என்றார்.

3 இறைமைக் கொள்கை

அனைத்திறைக்கொள்கை கடவுள் அந்தரியாமியமாய் எங்கும் நிறைந்துள்ளார் என்று நம்புகின்றது. இயற்கை சமயவாதம் கடவுள் கட்டு வரம்புகளற்ற அநாதித்தனிமுதல் (transcendent Reality) என்று நம்புகிறது. இறைமைக் கொள்கை, இவ்விரண்டு முரண்களையும் இணைக் கின்றது. கடவுள் எல்லாம் கடந்தவர் ஆயினும் அவர் இயலுலகிலும் வியாபித்திருப்பவர் என காட்டுகிறது.

இறைவனை அறிந்திட வேண்டுமாயின் இறைவன் என்றொருவர் இருப்பதை நம்ப வேண்டும். நாத்திகம் கடவுள் இல்லையென வாதித்தாலும், பொதுவாக கடவுள் என்றொருவர் இருக்கிறார் எனும் எண்ணம் அல்லது உள்ளுணர்வு பொதுவாக எல்லா மனிதருக்கும் உண்டு என்பதனை மறுப்பதற்கில்லை. திருமறை கற்பிப்பதுபோல பொதுவான வெளிப்படுத்தல் மூலம் எல்லா மனிதருக்கும் தன்னைப்பற்றி தேவன்

வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாயுள்ளது (ரோமர் 1:19-20).எனினும் அவர்கள் தங்கள் சிந்தைகளில் வீணராகி தேவனை அறிய முடியாதவர்களாகினர் (1:21-23). பொதுவாக இறைவன் இருப்பதை மூன்று வகைகளில் அறிந்து கொள்ளலாம். இறையியலாளர் பல தர்க்க ரீதியான அறிவியல் வாதங் களின் அடிப்படையில் இறைவன் இருக்கிறார் எனும் முடிவுக்கு வரலாமென கூறுகின்றனர். இதைத்தவிர ஆண்டவருடைய வார்த்தை மூலமும், அனுபவ ரீதியாகவும் இறைவனை அறிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது.

## அறிவியல் வாதங்களின் விடைகள்

கடவுள் உண்டா என்ற கேள்விக்கு பகுத்தறிவின் மூலம் மெய்ப்பித்துக் காட்டும்படிவிவாத முறையில் அனுமானிக்கும் விடைகள் இவை.

### (அ) மெய்ப்பொருள் மூல ஆய்வு வாதம் - *Ontological Argument*

சம்பூரணம் என்று நீ எவ்வளவு தூரம் நினைக்கக்கூடுமோ அவ்வளவு தூரம் நினைத்துக்கொள் அதுவே கடவுள். இவ்வாதம் பிரபல ஞானிகளால் எடுத்தாளப்பட்டது. எனினும் *Anselm* மட்டுமே இதை சிறப்பான முறையில் விளக்கினார். *Anselm* கடவுள் இல்லை என்று சொல்பவர்களுக்கு அவர் உண்டென்று நிரூபிக்க முயற்சிக்கவில்லை. தான் கொண்ட நம்பிக்கையைத் தன்

அறிவுக்கு உசிதமானது என்று காட்டும் நோக்கத்துடன் வாதிக் கின்றார். கடவுளைக் காட்டிலும், சம்பூரணர் எவரையும் மனிதன் எண்ணிப் பார்க்கக் கூடாததாகையால், மனிதன், கடவுள் என்ற பூரணர் ஒருவர் உண்டு என்று நம்ப வேண்டியதாயிருக்கிறது. ஒருவன் தன்னை மிஞ்சிய ஒரு கருத்தைத் தன்னை மிஞ்சிய ஒரு ஆற்றலின் தூண்டுதலின்றி சிந்திக்க இயலாது. ஆகவே சம்பூரணர் என்ற கருத்து. அந்த சம்பூரணர் உளதா யிருந்தால்தான் மனித சிந்தனையில் இடம் பெறுகின்றது என்பதே மெய்ப் பொருள் மூல ஆய்வு வாதம்.

கடவுள் ஒருவர் இருக்கிறார் எனும் உள்ளுணர்வு இயற்கை யாகவே இருப்பதனால் அவர் உண்மையிலேயே இருக்கவேண்டும். *Berhof* குறிப்பிட்டதுபோல, 'கடவுளைப்பற்றிய எண்ணமொன்று எனக்குண்டு. எனவே அவரை என்னால் அனுபவிக்க முடியும்" என்பதே இவ்வாதத்தின் தாற்பரியமாகும்..

## (ஆ) இயலுலகு படைப்புக்கோட்பாட்டு வாதம் - *Cosmological Argument*

நமது அனுபவத்தின் கீழ்வருவதெல்லாம் தானாக உற்பத்தி யானவை அல்ல. தன்னைத்தானே இயக்குவது கூடாது. ஒவ்வொரு காரியத் துக்கும் ஒரு காரணம் இருக்க வேண்டும். இப்படியாகக் காரண காரியங் களின் தொடர்பின் ஆதிமூல காரணம் ஒன்றிருத்தல் வேண்டும். அக்காரணம் மற்ற எல்லாவற்றையும் இயக்கும் பொருளாகும். அப்பொருள் அவசியமாக இருத்தல் வேண்டும். எல்லாக் காரியங்களும் மாறி மாறி வளரும், தேயும், இடம் பெயரும். ஆனால் ஆதிமூலக் காரணம் எல்லா வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும் இயக்கத்திற்கும் முதற்காரணமாகும். இது காரணமாக மட்டுமல்ல.உயிருள்ள காரணம் பொருளாயிருத்தலும் வேண்டும். ஏனெனில் எல்லா உயிருக்கும் மூலமாக உள்ளது. எல்லா அறிவுக்கும், மனதுக்கும் மேம்பட்ட முதல் மனமாயிருக்க வேண்டும்.

எதுவுமே தானாக உருவாகுபவை அல்ல. எல்லாவற்றிற்கும் காரணம் ஒன்றுண்டு. அக்காரணம் காரியத்தைவிட கூடியதாயுமிருக்க வேண்டும். இப்பிரபஞ்சமும் தானாக அல்ல, இது உருவாக காரணராய் உள்ள ஒருவராலேயே உருவாயிற்று அந்த ஒருவரே இறைவன் என்பதே இந்த வாதமாகும்.

## (இ) இயல் திட்ட வாதம் - *Teleological Argument*

இறுதி விளைவை நோக்கித் திட்டமிடப்பட்ட இயலுக்கு தற்செய லாய்ப் பிறந்ததன்று. நோக்கமின்றி உருவானவை. திட்டமின்றி தற்செயலாய் உருவாகக்கூடும். எதுவும் நோக்கமின்றி செய்யப்படவில்லை. இப்படியாக தெய்வீக முன்நோக்கமும், முன்நடத்தலும் எல்லா நிகழ்வுகளிலும் உண்டு. இது இயற்கையில் உள்ள ஒழுங்கு, அமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. இது ஞானமுள்ள ஒருவரால் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டது என்பதை அறியத்தருகின்றது. அந்த ஒருவர் இறைவன். அவர் ஒழுங்கு, நோக்கம் என்பவற்றைக் கொண்டு உலகை அமைத்துள் ளார். காரணம் ஒழுங்கும் பயனுள்ள அமைப்பும், உருவாக்கத் திற்கு மூலகாரணராயிருப்பவரின் புத்திசாதூரியத்தையும் நோக்கத்தையுமே புலப்படுத்துவதாயிருக்கும்.

**குறிப்பு:-**

இதைப்போன்ற இன்னும் பல வாதங்கள் உண்டு. இவையெல்லாம் உண்மையை நிரூபிக்கக்கூடிய வாதங்களன்று உண்மையை நோக்கி சிந்தனையைத் திருப்பவல்ல ஏதுக்கள் மட்டுமே.

### (அ) அவருடைய வார்த்தையில் அறிந்துகொள்ளுதல்

வேதவியல் பாடத்தில் நாம் கற்றுக்கொண்டதன்படி, தேவன் தன்னை, தன்னுடைய வார்த்தையின் மூலமாகவே வெளிப்படுத்தியுள்ளார் என்பது உண்மையே, எனவே அவரை அறிந்துகொள்ள அறிவியல் ரீதியான வாதங்கள் உதவி புரியாது. தேவன் ஒருவர் இருக்கிறார் என்ப தை அவை நமக்கு எடுத்துரைத்தாலும் அத்தேவன் யார் என்பதை அவை நமக்கு அறியத்தராது.

தேவனைப்பற்றி எவராலும் சுயமாக அறிந்துகொள்ள முடியாது (யோபு.11:7, 1தீமோ.6:15,16, யோ.4:24, ஏசா.40:28)அவர்கள் தேவனை அறிய முடியாதவர்களாயிருக்கின்றனர் (ரோமர் 1.21-23, எபே.4:18). மானிட சிந்தைக்கும் தேவ சிந்தைக்கும் இடையே பாரிய பிளவுள்ளது (ஏசா.55:8- 11).மௌனம் மனதிலுள்ளவைகளை மறைத்து விடுவதுபோல, தேவன் தன் மனதில் உள்ளவைகளை வெளிப்படுத்தாவிட்டால் நம்மால் அவரை அறிந்து கொள்ள முடியாது.

Donald & Ronald Harris கடவுள் தம்முடைய வார்த்தையின் வாயிலாகத் தம்மை வெளிப்படுத்துச் சித்தம் கொள்வாராயின், வேத வெளிப்பாட்டின் வாயிலாகவே நாம் மெய்யாக அவரை அறிந்துகொள்ள முடியும் Berkhof கடவுள் தன்னை எந்த அளவுக்கு வெளிப்படுத்தி யுள்ளாரோ அந்த அளவுக்கு மட்டுமே அவரை அறிந்துகொள்ள முடியும். தன்னைப்பற்றிய அறிவை மனிதனுக்கு கொடுப்பது கடவுளே Barth கடவுள், சுயவெளிப்படுத்தல் மூலமாக மனிதனிடம் வரும்போது மட்டுமே அவரை அவனால் அறிந்துகொள்ள முடியும்.

# 2. இறைவனின் தன்மையை அறிந்துகொள்ளுதல்

*இறைவனின் நாமங்களினூடாக அவர் எப்படிப்பட்டவர் என்பதை ஓரளவுக்கு அறிந்துகொண்ட நாம், அவருடைய தன்மைகளை இம்முறை ஆராய்ந்து பார்ப்போம். அவர், தான் எப்படிப்பட்டவர், தன்னுடைய தன்மை எப்படிப்பட்டது என தன்னுடைய வார்த்தையில் வெளிப்படுத்தியுள்ளார்.*

*வில்பிரட் கார்ட் குறிப்பிட்டதுபோல, கடவுளை முழுவதுமாய் நாம் அறிய இயலாதிருந்தும் அவரை உண்மையாய் அறியக்கூடும். எந்த அளவிற்கு நாம் திருமறையை நமது ஆராய்ச்சிக்கு ஆதாரமாய்க் கொள்கின்றோமோ அந்த அளவுக்கு நமது மதக்கருத்துக்கள் உண்மையானவைகள். 'எனவே தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து பார்ப்பது அவரது தன்மை களை அறிந்துகொள்ள நமக்கு உதவுவதாயுள்ளது.*

## (அ) அவர் ஆவியாயிருக்கிறார்

*தேவன் ஆவியாயிருக்கிறார் (யோ.4:24) என இயேசு தெரிவித்துள் ளார். கிரேக்க மொழியில் article எதுவும் இல்லாமலிருப்பதனாலும் பெயர்ச் சொல்லான ஆவி, பெயருரிச்சொல்லாக (adjective) எடுத்துக் கொள்ளப்பட வேண்டியிருப்பதனாலும், ஆவி என்பது தேவனுடைய தன்மையை வர்ணிக்கும் பதமாயுள்ளது.*

*1. தேவன் ஆவியாயிருக்கிறார் என்னும்போது அவர் சடப்பொரு ளாகவும் மாம்சமாகவும் இல்லாமலிருக்கிறார். ஆவிக்கு எலும்பும் மாமிச மும் இராது என இயேசு தெளிவாகத் தெரிவித்துள்ளார் (லூக்.24:39) எனினும் அவருக்கு கைகள் (ஏசா. 65:2,எபி.1:10) பாதங்கள் (ஆதி.3:8 சங்.8:6) கண்கள் (1இரா.8:29, 2நாளா. 16:9) காதுகள் (நெகே.1:6 சங். 34:15) இருப்பதாக வேதம் கூறுகிறதே என நாம் வினவலாம், அவை மனிதர்கள் புரிந்து கொள்ளுமுகமாக மனுவுருவாக (Anthropomorphic) மொழியில் எழுதப்பட்டவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது.*

*2.தேவன் ஆவியாயிருப்பதனால் மானிட கண்களுக்கு புலனாகாத வராக இருக்கிறார். அவர் அதரிசனமான தேவனாயிருக்கிறார் ரோமர்.1:20, கொலோ.1:15, 1தீமோ.1:17). இதனாலேயே தேவனை ஒருகாலும் ஒருவனும் கண்டதில்லை (யோ.1:18). அவர் மனுஷரில் ஒருவரும்*

கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறார் (1தீமோ.6:16). எனினும் மீட்கப்பட்டவர் களுக்கு அவரைக் காணும் பாக்கியம் ஒரு நாள் கிட்டும் (சங்.17:15, மத்.5:8, எபி. 12:14 வெளி.22:4). கடவுளை காண்பது சாத்தியமாகக் கூடியதல்லவென்றால் சில வேதப்பகுதிகள் பக்தர்கள் தேவனைக்கண்டதாக தெரிவிக்கின்றதே என நாம் வினவலாம். (ஆதி.32:30, யாத். 3:6, 24:9-10, எண்.12:6-8) உபா.34:10, ஏசா.6:1) இதற்கு Torrey என்பார் பின்வருமாறு பதிலளிக்கின்றார். கண்ணாடியில் தன்னுடைய விம்பத்தை ஒருவன் பார்க்கலாம். அதன் பின் நான் என் முகத்தைப்பார்த்தேன் என்றோ என் முகத்தைப் பார்க்கவில்லை என்றோ பதிலளிக்கலாம். இரண்டும் சரியான பதில்களே. எனவே தேவனுடைய மகிமையின் விம்பத்தை மக்கள் கண்டிருக்கிறார்கள். ஆனால் அவரைக் கண்டதில்லை (யாத்.33:21-23 எபி. 1:3). அவரைக் காண்பவர்கள் உயிர் வாழ்வதரிது. (யாத்.33:20) பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய தூதனானவர். தெய்வத்தின் கட்புலனாகும் உருவமாகும் (ஆதி.16:7-14, 22:11-18, யாத்.3:2- 5. நியா.6:11-23, 1இராஜா.19:5-7, 2இராஜா.19:35, ஆதி.18:13-33).

3 அவர் ஆவியாயிருப்பதனால் ஜீவனுள்ளவராக இருக்கிறார். ஆவி ஜீவனைக் குறிப்பதாயுள்ளது. அவர் ஜீவனுள்ள தெய்வம் என அழைக்கப்பட்டுள்ளார் (யோ.3:10, 1சாமு.17:26, சங்.84:2, மத்.16:16, 1தெச.1:9).ஜீவனானது உணர்ச்சி, வல்லமை செயற்பாடு என்பவற்றை உள்ளடக்கியது. சகல உயிர்களின் மூலமாக இருப்பவர் அவரே (யோ. 5:26, சங்.36:9) தேவன் ஜீவனுள்ளவராயிருக்கையில் விக்கிரங்கள் ஜீவனற்றவைகளாக உள்ளன (சங்.115:3-9).

4. அடுத்து தேவன் ஆவியாயிருப்பதனால் அவர் ஆள்தத்துவ முடைய நபராகவும் இருக்கிறார். அநேக தத்துவ ஞானிகள் அவர் ஆள்தத்துவமற்ற ஆவி என்று வாதிட்டாலும் ஆவியான ஒருவர் ஆள்தத்துவ மற்றவராயிருக்க முடியாது என்பதை நமக்கு அறியத்தருவதாயுள்ள மானிட ஒப்புவமை இதற்கான ஆதாரமாயுள்ளது. ஆவியுடைய மனிதர்கள் ஆள்தத்துவமுடைய நபர்களாயிருப்பது போலவே ஆவியாகிய தேவனும் ஆள்தத்துவமுடைய நபராயிருக்கிறார். H. C. Thiessen சுட்டிக் காட்டியது போல, மானிட ஆவி ஆள்தத்துவமுடையதாயிருப்பதனால் தேவ ஆவியும் அத்தகையதாகவே இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர் மனிதனை விட தாழ்வானவராகவே இருப்பார். "இதனாலேயே

அவர் சுய உணர்வுடைய (யாத்.3:14, ஏசா.45:5, 1கொரி.2:10) மன உறுதியுடைய (யோபு.23:13. ரோமர்.9:11, எபி.6:17) தேவனாகவும் இருக்கிறார். மட்டுமல்ல அவர் ஆள்தத்துவத்தின் உளவியல் கூறுகளையுடையவராகவும் இருக்கிறார். அறிவு (ஆதி.18:19, யாத்.3:7, அப்.15:18) உணர்வு (ஆதி.6:6, சங்.103:8- 13.யோ.3:16) சித்தம் (ஆவி. 3:15, சங்.115:3, யோ.6:38) என்பவை அவருக்குண்டு. அத்தோடு அவர் பேசுபவராகவும் (ஆதி.1:3) பார்ப்பவராகவும் (11:5) செவிமடுப்பவராகவும் (சங்.94:9) மனஸ்தாபப்படுபவராகவும் (ஆதி.6:6) கோபமடைபவராகவும் (உபா.1:37) பொறாமைப்படுபவராகவும் (யாத்.20:5) இரக்கமுடையவராகவும் (சங்.111:4) இருப்பதனால் அவர் ஆள்தத்துவ முடைய நபர் என்பதை கொள்ளக்கூடியதாயுள்ளது.

## (ஆ) அவர் தாமாகவே இருப்பவர்

உலகத்திலிருக்கிற ஒவ்வொரு பொருளும் வேறு யாராவது ஒருவரையாகிலும் வேறு ஏதாவது ஒன்றையாகிலும் சார்ந்திருக்கிறது. ஆனால் தேவனோ எவரையும் எதையும் சார்ந்திருக்கிறவர் அல்ல. உலகம் தோன்றுமுன் அவர் தாமாகவே இருந்தவர். அவர் தம்மில் தாமே ஜீவனு டையவர் (யோ.5:26) இருக்கிறவராகவே இருக்கிறேன் (யாத்.3:14) என அவர் கூறியது அவர் தாமாகவே இருக்கிறவர் என்பதை புலப்படுத்துகிறது. *Berkhof* குறிப்பிட்டதுபோல அவர் தாமாக இருப்பது மட்டுமல்ல, மற்ற அனைத்தும் தன்னைச் சார்ந்திருக்கும்படி செய்துள்ளார். ஆனால் அவர் எதையும் சார்ந்திருப்பவரல்ல. யெகோவா எனும் தேவனுடைய பெயர் இத்தன்மையை புலப்படுத்துவதாயுள்ளது (சங்.94:7, ஏசா. 40:18, அப்.7:25, ரோமர்.11:36). அவர் எதையும் சாராதிருக்க மற்றவையனைத்தும் அவரினூடாகவே இருக்கின்றன. என்பதை சுட்டிக் காட்டுகின்றது (ரோமர்.11:33-34, தானி.4:35, ரோமர்.9:19, எபே.ஃ.1:5, வெளி.4:11,சங்.115:3, சங்.33:11 பார்க்கவும்).

## (இ) ஆதியும் அந்தமுமற்றவர்

தேவன் நித்தியர் அவருக்கு ஆரம்பமும் முடிவும் இல்லை. காலத்தால் கட்டுப்படுத்தப்படக்கூடியவர் அல்ல நம் தேவன், அவர் சதாகால முள்ள தேவனாகிய கர்த்தர் (ஆதி.21:23). தலைமுறை தலைமுறையாக நமக்கு அடைக்கலமானவர் அநாதியாய் என்றென்றைக்கும் தேவனா யிருப்பவர்

*(சங்.90:1-2) அவருடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை (102:27) நித்தியவாசி (ஏசா.57:15) சாவாமையுள்ளவர் (1தீமோ.6:16).*

*கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும் ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கின்றது (2பேது 3:8). அவர் கால வரையறைகளினால் நம்மைப் போல கட்டுப்படுத்தப்பட்டவரல்ல, இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்பனவெல்லாம் அவருக்கு கிடையாது. அவர் நித்தியர் எப்போதும் இருக்கிறவராகவே இருக்கிறவர்.*

## (ஈ) எங்கும் இருப்பவர்

*தேவன் எங்குமிருப்பவர் எனும்போது அவர் எல்லாவற்றிலும் இருப்பவர் எனும் அனைத்திறைக்கொள்கையின் பிழையான கருத்திலிருந்து*

*இதனை நாம் வேறுபடுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். சடப்பொருட்கள் கடவுள் அல்ல என்பதனால், அவர் எல்லா விடத்திலும் இருக்கிறார் என்று கூறும்போது நம் கூற்றுக்கு நாம் போதிய விளக்கம் கொடுக்கவேண்டும். உலகம் தேவன் இல்லையென்று கூறினாலும் அவர் உலகின் எல்லா இடங்களிலும் இருப்பவர்.*

*வானாதி வானங்களும் அவரைக் கொள்ளாது (1இராஜா.8:27 2நாளா.2:6). அவர் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ (எரே.23:24). வானம் அவருக்கு சிங்காசனம் பூமி அவருக்கு பாதபடி (ஏசா.66:1. அப்.7:49). வானத்திலும் பாதாளத்திலும் சமுத்திரத்திலும் அவர் இருக்கிறார் (சங்.139:8-10). அவர் சமீபத்துக்கு மாத்திரமல்ல தூரத்திற்கும் தேவன் (எரே.23:23-24) அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே (அப்.17:27).*

*கடவுள் எங்குமிருப்பவர் எனும்போது, அவருடைய ஒரு பகுதி ஓரிடத்திலும் மற்றைய பகுதி வேறொரு இடத்திலும் உள்ளதெனக் கருதலாகாது. அவர் எல்லாவிடங்களிலும் ஒரே சமயத்தில் முழுமையா யிருக்கிறார். அத்தோடு அவர் பூகோள ரீதியாக எவ்வித வரையறைக்கும் உட்பட்டவரல்ல. எப்பகுதியும் அவர் இல்லாத இடம் என கூறமுடியாது. எப்பகுதியிலும் அவர் முழுமையற்றிருக்கிறார் என்றும் வாதிட முடியாது.*

*கடவுள் எங்குமிருக்கிறார் என்பதை நம்மால் கிரகித்துக்கொள்ள முடியாதிருப்பதற்கான காரணம் அவர் ஆவியாயிருப்பதும், இட*

வரையறை யற்ற நிலையை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாமலிருப்பது மேயாகும்.

# 3. இறைவனின் குணாதிசயங்களை அறிந்து கொள்ளுதல்

கடவுளின் தன்மைகளை அறிந்து கொண்ட நாம் அடுத்து அவருடைய குணாதிசயங்களைப் பற்றியும் அறிந்திடவேண்டும். அப்போது மட்டுமே அவர் எப்படிப்பட்டவர் என்பதைப் பற்றி முழுமையாக அறிந்திட லாம். *Thomas Watson* குறிப்பிட்டது போல், "கடவுளின் மகிமை" அவருடைய தன்மையிலேயே தங்கியுள்ளது. அவரது குணவியல்புகள் ஒவ்வொன்றும் அதன் பிரகாசமான ஒளிக்கதிர்களாகும்.

இறைவனுடைய குணவியல்புகளை அல்லது அவரது தன்மைகளை நாம், அறிந்துகொள்ளவேண்டுமாயின், அவருடைய வார்த்தை யை ஆராய்ந்து பார்ப்பதன் மூலமே சாத்தியமாகும். அவருடைய ஒரு சில தன்மைகளை இயற்கையினூடாக (அப்.19:1, ரோமர். 1:20) அறிந்து

கொள்ளக்கூடியதாயிருப்பினும், அவரைப்பற்றி சரியாக அறிந்து கொள்ள வேண்டுமாயின், நாம் வேதபுத்தகத்திடமே வரவேண்டும். காரணம் தேவன் தன்னுடைய தன்மைகளை, தன்னுடைய வார்த்தையிலேயே வெளிப் படுத்தியுள்ளார்.

## 1. இறைவனின் அறிவு - *Knowledge of God*

இறைவன் எல்லாமறிந்தவர் (*Omniscient*) எவ்விடத்திலும், எக்காலத்திலும் உள்ள எல்லாவற்றையும் எப்போதும் அவர் அறிவார். முக்காலமும் அவர்முன் மறைவானவையல்ல. எக்காலமும் அவர் அறிந்ததே. மூவுலகிலுமுள்ள அனைத்தையும் அவர் அறிவார். அவருடைய கண்களுக்கு மறைவானது எதுவுமேயில்லை. எதையுமே அவரிடமிருந்து மறைத்துவிடமுடியாது. உண்மையில் இறைவனுடைய இத்தகைய அறிவு "நமக்கு மிகுந்த ஆச்சரியமானதாயுள்ளது (சங்.139:6). அவருடைய அறிவு அவரிலேயேயுள்ள அறிவாகும். அதாவது, அவதானம் ஆராய்ச்சி என்பவை களினாலோ, அன்றி வேறெங்குமிருந்தோ பெற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

அவருடைய அறிவு பூரணமானது குறைவற்றது, அவரே அறிவுமய மானவர். மற்றவையனைத்தும் அவரிடமிருந்தே அறிவைப் பெற்றுக் கொள்ளவேண்டியுள்ளது. அவருடைய அறிவு பிழையற்றது. தவறாது.

*இறைவன் எங்குமிருப்பவர் (Omnipresence) ஆதலால் எல்லா இடங்களிலுமுள்ள எல்லாவற்றையும் அறிந்தவராயிருக்கிறார். "கத்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது (நீதி.15:3). H.C. Thiessen ஆதிமுதலிருந்தே முழுமையாகவும் உண்மையாகவும் அவர் அனைத்தையும் அறிவார்.(ஏசாயா.46:10 பார்க்க) அவருடைய அறிவு அளவில்லாதது (சங்.147:5).*

***(அ) மனிதனுடைய நடைகளையெல்லாம் அவர் அறிவார்(உபா.2:7).***

*நாம் போகும் வழியை அவர் அறிவார் (யோபு.23:10). அவர் நம் வழிகளையெல்லாம் எண்ணுகிறவர் (31:4).நம் வழிகளெல்லாம் அவருக்கு முன்பாக இருக்கின்றது (சங்.119:168). நாம் வாழுமிடங்களையும் (சங்.33:13) நம் வாழ் நாட்களின் காலத்தையும் (37:18) அவர் அறிந்திருக்கிறார். நம்முடைய உருவம் இன்னதென்றும் அவர் அறிவார் (சங்.103:14). நம் வழிகளெல்லாம் அருக்குத் தெரியும் (சங்.139:3).*

***(ஆ) மனித மனதில் எழும் சிந்தனைகளை அவர் அறிவார் (எரே.11:5).***

*நம் நினைவுகளை தூரத்திலிருந்தே அவர் அறிவார் (சங்.139:2). நம்முடைய தேவைகளை அவர் அறிவார் (மத்.11:27). அவர் இருதயங் களைப் பார்க்கிறவர் (1சாமு.16:7). உள்ளந்திரியங்களையும் இருதயங் களையும் ஆராய்கிறவரும் (வெளி 2:23) சோதிக்கிறவருமாயிருக்கிறார் (எரே.17:10).அவர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார் (1நாளா.28:19). நம் நாவில் சொல் பிறவாததற்கு முன்பே அவர் அதையெல்லாம் அறிந்திருக்கிறார் (சங்.139:4). நம் நினைவுகளை அறிவார் (ஏசா.66:18). Thomas Watson வார்த்தைகள் நம் செவிகளில் பேசுவது போல, மானிட நினைவுகள் கடவுளின் செவி களில் பலமாக பேசும்.*

***(இ) மனிதர்கள் இரகசியமாய் செய்யும் காரியங்கள் அனைத்தையும் அவர் அறிவார்.***

*நான் அவர்கள் கிரியைகளை அறிந்திருக்கிறேன் என அவரே கூறியுள்ளார் (ஏசா.66:18). (உ-ம் ஆகானின் களவு ஆபேலின் கொலை, சாராளின் நகைப்பு, தாவீதின் பாவம்)'எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடயங்களில் ஒழித்துக் கொள்ளக் கூடுமோ என்று கர்த்தர் சொல்கிறார் (எரே.23:24). (சங்கீதம்.139:1-2, 7-10 ஒப்பிட்டுப்*

பார்க்கவும்). ஆம் அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை சகலமும் அவருடைய கன்களுக்கு முன்பு நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது.(எபி.4:13). அவருக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது (சங்.139:12). இருளில் இருக்கிறதை அவர் அறிவார் (தானி 2:22).

**(ஈ) இனி நடக்க இருக்கும் அனைத்தையும் அவர்அறிவார்.**

இதனால்தான் இஸ்ரவேலின் எதிர்காலத்தை அவர் அறிந்திருந்தார் (ஏசா. 46:10, தானி.2,7, மத்.24:25, அப்.15:18). இஸ்ரவேல் எடுக்கும் பிழையான மார்க்கம் (உபா.31:20) ஆட்சி (ஏசா.44:26, 45:7) மேசியாவின் வரவு (மீகா.5:2) துன்மார்க்கர் அவரை சிலுவையில் அறைதல் (வெளி.13:8, அப்.2:23, 3:18), என்பவற்றையெல்லாம் அறிந்திருந்தார். மனிதர்களின் தீய செயல்கள் அனைத்தையும் அவர் முன்பே அறிந்தவர். உதாரணமாக ஆதாம் பாவம் செய்வான் என்பதை அவனைப் படைப்பதற்கும் முன்பே அறிந்திருந்தார். “உலகத்தோற்ற முதல் தேவனுக்கு தம்முடைய கிரியையெல்லாம் தெரிந்திருக்கிறது" (அப்.18:19).

ஆகார் குறிப்பிட்டது போல அவர் "நம்மைக் காண்கிற தேவனாக இருக்கிறார்" (ஆதி.16:13). A.W. Pink கடவுளை நம்மால் பார்க்க முடியாதிருப்பினும் அவரால் நம்மைப் பார்க்கக் கூடியதாயுள்ளது. என் தீய எண்ணங்கள் பாவச் செயல்கள் கீழ்ப்படியாமை, பின்மாற்றம், அனைத் தையும், அறிந்திருந்தும் அவர் என்னை நேசிக்கிறார் என்பது எத்தனை அதிசயமானது. என் கவலைகள் கஷ்டங்கள் கண்ணீர்கள் மனக்கசப்புகள் போராட்டங்கள் யாவற்றையும் அறிந்தவர் என்பது நமக்கு எத்தனை ஆறுத லானது. நான் செல்லுமிடங்களையெல்லாம் செய்யும் காரியங்களை யெல்லாம் சிந்தனைகள் கனவுகளையெல்லாம் அவர் அறிபவராயிருக்கிறார் என்பதை அறிந்து கொள்வது நமக்கு எத்தனை அவசியமானது.

## 2. இறைவனின் மாறாத தன்மை - *Immutability of God*

இத்தன்மை இறைவனை மற்றெல்லா உயிர்களில் இருந்தும் வேறுபடுத்தும் தன்மையாகும். மற்றயவையனைத்தும் மாறுபவையாகவும் நிலையற்றவையாகவும் உள்ளன. ஆனால் அவர் இருக்கிறவராகவே இருக்கிறேன் (யாத்.3:14). நான் கர்த்தர், நான் மாறாதவர் (மல்.3:6) என

கூறுகிறார். உண்மையில் "அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை (யாக்.1:17). அவர் நித்திய ராஜா (எரே. 10:10) அழிவில்லாதவர் (ரோமர்.1:23) சாவாமையுள்ளவர் (1தீமோ.6:16). அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருப்பவர் (சங்.90:2). நிலைத்திருப்பவர் (சங்.102:26) மாறாதவர் அவருடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை (102:27) முந்தினவரும் பிந்தினவருமான அவர் (ஏசா.48:12) அழியாத ஜீவனுள்ளவர் (எபி.7:17) ஆம் அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி.13:8). A.M. Pink அவர் ஆரம்பமும் முடிவுமற்றவராயிருப்பதனால் மாற்றமடையாதவராயிருக்கிறார்.

இறைவன் மாறாதவர் என கூறும்போது அவர் மாறாமலிருப்பது மட்டுமல்ல. அவருடைய வார்த்தை (ஏசா.40:6, சங்.119,89,152) வழிகள் அதாவது அவருடைய நடவடிக்கைகள் நோக்கம் (யோபு.23:13, ஏசா. 46:10)ஆலோசனைகள் (சங்.33:11, எபி.6:17) அவருடைய கிருபை வரங்கள் மக்களை அழைத்த அழைப்பு (ரோமர்.11:29) அன்பு (எரே.31:3, யோ.13:1) இரக்கம். (சங்.100:5) என்பவையனைத்தும் மாறாதவையாயுள்ளன. அவர் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்றவாறு மனிதர்கள் மாறுவது போல மாறிக் கொண்டிருப்பவரல்ல (எண்.23:19, 1சாமு.15:29) Thomas Watson பச்சோந்தி போல மாறிக்கொண்டிருப்பவரல்ல அவர்.

கர்த்தர் சமயத்திற்கேற்றவாறு மாறுபவரல்ல A.W.Pink சுட்டிக்காட்டியது போல, "அவர் எல்லாவற்றையும் அறிந்திருப்பதனால் தன்னுடைய திட்டங்களை மாற்ற வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படாது. அவர் மனம் மாறாத தேவன் எனினும் சில வசனங்கள் அவர் தான் செய்த காரியங்களைப் பற்றி மனஸ்தாபப்பட்டார் (ஆதி.6:6, 1சாமு.15:17, 2சாமு. 24:16, யோனா.3:10. யோ.2:13). என கூறுகின்றதே என நாம் கேட்கலாம் இவ்வசனங்கள் உண்மையில் அவர் மனம் மாறினார் (repented) என்றே கூறுகின்றன. ஆனால் அவர் மாறாத தேவன் என்பதை இவ்வசனங்கள் மறுதலிக்கின்றன. என கூறமுடியாது. J.I.Packer இதை பின்வருமாறு விளக்குகிறார். இவ்வசனங்கள் தேவனுடைய நடவடிக்கை மாறியுள்ளதை குறிப்பதாயுள்ளன. அதாவது தேவனுடைய முதல் நடவடிக்கை காரணமாக மக்களின் நடவடிக்கை மாறியதன் விளைவாக தேவனுடைய நடவடிக்கை யும் மாறியதாக விளக்குகின்றது. எனினும் இத்தகைய மாற்று நடவடிக் கையை தேவன் முன்பே அறியாதிருந்தார்.

என்று எண்ணுவது தவறாகும். அதேபோல மனிதனுடைய நடவடிக்கை தேவனை ஆச்சரியப்படுத்தியது என்றோ அவருடைய அனாதித்தீர்மானத்திலே அனுமதிக்கப் பட்டிருக்க வில்லை என்றோ அர்த்தம் அல்ல. மனிதனுடனான நடவடிக கையை தேவன் மாற்றி வேறுவிதமாக செயல்பட்டார் என்பது, அவருடைய மனம் மாறியதனால் தன்னுடைய அனாதித் தீர்மானத்தையே மாற்றிவிட்டார் என்பது அர்த்தமல்ல; *Berkhof.* இவ்வசனங்கள் மறுவுருவமொழியை உபயோகித்துள்ளன. உண்மையில் மாற்றம் தேவனில் அல்ல மனிதர் களிலேயே ஏற்பட்டுள்ளது. அதாவது அவர்கள் தேவனோடு கொண்டிருந்த உறவும் *H.C. Thiessen* இறைவனுடைய மாறாத்தன்மையும் அவர் எப்போதுமே நீதியாக நடந்துகொள்வதும், மனிதர்களுடைய செயல்களுக் கேற்றவாறு அவர்களை நடத்துவதை உள்ளடக்கியுள்ளது (எரே.18:8, யோவேல்.2:13). அதாவது தேவனுடைய பயமுறுத்தல்கள் அனைத்தும் நிபந்தனைக்குட்பட்டவை (யாத்.32:9-10,14 யோனா.1:2,3,4,10). *Thomas Watson* அவரின் செயலில் மாற்றமிருப்பினும் சித்தத்தில் மாற்றமேற்பட வில்லை. மாற்றம் அவருடைய செயலாயிருக்கும் ஆனால், சித்தம் மாற்றமடைவதல்ல....தேவன் தன்னுடைய திட்டத்தை மாற்றிக்கொண்டிருப் பாரானால் அவர் பின் நடப்பவைகளை முன்பே அறியக்கூடிய முன்னறிவு (foreknowledge) கொண்டவராயிருக்கமுடியாது. மனிதர் தங்கள் திட்டங்களை மாற்ற இதுவே காரணம். ஆனால் உலகத்தோற்றமுதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறமையால் (அப்.15:19) அவர் தன்னுடைய திட்டத்தை மாற்றுவதற்கு அவசியமேற்படுவதில்லை.

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்றால். அவர் மனிதனாக வந்தபோது அவரில் மாற்றங்கள் ஏற்பட்டன என நாம் வாதிடலாம். *Thomas Watson* இதை பின்வருமாறு விளக்குகிறார். தெய்வீகத்தன்மை மனிதத்தன்மையாக மாற்றமடைந்திருந்தால், அவருடைய தன்மை மாறிவிட்டது என நாம் கூறலாம். ஆனால் அவர் மாம்சமாகியபோது. இப்படியொரு மாற்றம் ஏற்படவில்லை. அவர் முழுக்க முழுக்க தேவனா கவும் மனிதனாகவும் இருந்தார். சூரியனை மறைக்கும் மேகம் சூரியனை மாற்றிவிட்டதுபோல நமக்கு

தென்படுவதுபோலவே மானிட தன்மை அவருடைய தெய்வீக தன்மையை மூடியது. ஆனால் தெய்வீகத்தன்மை மாற்றமடையவில்லை.

இறைவன் மாறாதவர். நான் மாறினாலும் அவர் என்மீது வைத்திருக்கும் கிருபை மாறாததாயுள்ளது. "மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும் என் கிருபை உன்னை விட்டு விலகாமலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகிற கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா. 54:10) *Thomas Watson* நான் எல்லாவற்றையும் இழந்து விடலாம்; ஆனால் தேவனை அல்ல. அவர் மாறாதவர் இறவாதவர்." என் வாழ்வுக்கென கடவுள் வைத்துள்ள திட்டம் மாறாதது. அவர் எப்போதும் ஒரே மாதிரியான வராயிருப்பதனால், மற்றெல்லாமே மாறும் போதும் அவர் மாறாதவரா யிருப்பதனால், அவரை முற்றிலுமாய் நம்பி சார்ந்து வாழக்கூடியதாயுள்ளது.

### 3. இறைவனின் அன்பு - *Love of God*

தேவன் அன்பாகவே இருக்கிறார் (1யோவா.4:8,16). *A.W. Pink* தேவன் அன்பு செலுத்துபவர் என்பது இதன் அர்த்தமல்ல. அவரே அன்பாக இருக்கிறார்.*John Stott:* அன்பு செலுத்துவது அவருடைய செயல்களின் ஒன்று என்பதல்ல, அவருடைய சகல நடவடிக்கைகளும் அன்பினால் செய்யப்படுபவை என்பதே அதன் அர்த்தம்.

நமக்கு அருளப்பட்டிருக்கிற பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கின்றதெனும்போது. (ரோமர். 5:5) *J.I.Packer* சுட்டிக் காட்டியதுபோல, "தேவன் மீது நாம் வைத்திருக்கும் அன்பல்ல, மாறாக நம் மீது அவர் வைத்திருக்கும் அன்பை அறிந்து கொள்வதற்கான அறிவே அதுவாகும்."

(ஆ)தேவனுடைய அன்பு எதையும் சார்ந்திருப்பதோ, எதிலும் தங்கியிருப்பதோ அல்ல. அவருடைய தன்மையே அன்பாயிருப்பதனால், (1யோ.4:9.16) அவர் நம்மை நேசிக்கிறார். அநாதி சிநேகத்தால் நம்மை நேசித்த அவர் (எரே.31:3) நம்மை நேசிப்பதற்கு நம்மில் எதுவுமே கவரவில்லை. அதாவது நம்மில் எதையும் கண்டதினால் அவர் நம்மில் அன்பு செலுத்த ஆரம்பிக்கவில்லை. நம்மீது அன்பு செலுத்துவது அவருக்கு பிரியமாயிருந்தமையினாலேயே அவர் நம்மை நேசித்தார்.

(உபா.7:7-8). அவ்வன்பை நம்முடைய முயற்சியினால் சம்பாதித்துக்கொள்ள முடியாது.

J.I. Packer அன்பற்ற, அன்பு செலுத்தப்பட அருகதையற்ற மக்கள் மீதே தேவன் அன்புள்ளவராயிருக்கிறார் அவருடைய அத்தகு அன்புக்கு ஆதாரமாக மக்களில் எதுவுமேயில்லை. அவர் நம்மை நேசிக்க காரணம் அது அவரது சித்தமாயும் விருப்பமாயுமிருந்தது. நம்மை நேசிக்க வேண்டும் எனும் சித்தம் கொண்டிருந்தமையினாலேயே அவர் நம்மை நேசித்தார்.

அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது (1யோ.4:7). நாம் தேவனிடத் தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து. நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. (4:10). அவர் தம்முடைய குமாரனைக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம் (3:16).

(ஆ)தேவனுடைய அன்பு வரையறைகளுக்குட்பட்டதல்ல, அது எல்லை கடந்தது, எல்லாரையுமே நேசிப்பது, அவருடைய அன்புக்கு பாத்திரவான்களாகாதவர்கள் எவருமேயில்லை. அவர் முழு உலகத்தையும் நேசிப்பார் (யோ.3:16).

(இ)தேவனுடைய அன்பு நிபந்தனைகளுக்குட்பட்டதுமல்ல. இத்தகு அன்பையே இயேசு மத். 5:43-48 இல் விளக்கியுள்ளார்.

(ஈ) தேவனிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலு மில்லாதிருப்பது போலவே (யாக்.1:17) அவருடைய அன்பும் மாற்றமடை யாத, கூடிக்குறையாத அன்பாக உள்ளது. மாற்றமடையாத, கூடிக்குறையாத அன்பாக உள்ளது. எதனாலுமே பிரிக்கவோ (ரோமர்.8:35- 39) தணிக்கவோ (உன்.8:6-7) முடியாத அன்பாக உள்ளது. தேவன் மீது யாக்கோபு வைத்திருந்த அன்பு மாறிய போதிலும் அவனை சிநேகித்த தேவன் (ரோமர்.9:13) கடைசி வரை அவனை நேசித்தார். இயேசுவும் தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே (ஒருவன் தன்னை மறுதலிக்கப்போகிறான். இன்னுமொருவன் தன்னைக் காட்டிக்கொடுக்கப் போகிறான் என்பதை

அறிந்தும்) முடிவுபரியந்த மும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார் (யோ.13:1).

## 4.இறைவனின் கிருபை - Grace of God

கிருபை என்பது, பெறத்தகுதியற்றதை கொடுக்கும் இறைவனின்

செயலாகும். இது பாவிகள் மீது அவர் கொள்ளும் அன்பின் அடையாள மாகும். தேவ நீதியின்படி பாவத்தின் சம்பளம் மரணம், (ரோமர்.6:23 ஆனால் அவர் அந்த மரணமெனும் தண்டனையைக் கொடுக்காமல், பாவிகள் பெற்றுக்கொள்ளத் தகுதியற்ற நித்திய ஜீவனைக் கொடுக்கிறார். இதுவே அவரது கிருபை J.I. Packer குறிப்பிட்டது போல "குற்றமுள்ள பாவிகள் மீதான தேவனுடைய இலவச அன்பே கிருபை. அதுவும் அந்த அன்பை பெற அருகதையற்றவனுக்கு கிட்டும் வரப்பிரசாதம், கடுமையாக நடத்தப்பட வேண்டியவனுக்கு, அத்தகு தண்டனையை மட்டுமே எதிர்பார்க்க வேண்டியவனுக்கு, கிட்டும் தேவனுடைய அனுக்கிரகம்."

பாவிகளை, அவர்கள் செய்கையின் பலனுக்கேற்றபடி நடத்தாமல், அதற்கு முற்றிலும் எதிரான விதத்தில் நடத்துவதே கிருபையென்றாலும் (A.W.Pink) சுட்டிக்காட்டியது போல, "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (Elect மீது மட்டுமே தேவன் கிருபையாயிருக்கிறார். பழைய புதிய ஏற்பாடுகளில் எந்தவொரு வசனமும் கிருபை பொதுவாக எல்லா மனிதருக்குமான அருள் என்பதாக குறிப்பிடவில்லை. இதனால் கிருபை அவருடைய இரக்கத்தில் இருந்து வேறுபட்டது என்பதையும் அறிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது. ஏனெனில் அவர் மனிதர் மீது இரக்கமாயிருக்கிறார். ஆனால் அவர் எல்லார் மீதும் கிருபையாயிருக்கவில்லை. அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட அபாத்திரமான பாவிகளுக்கே இவ்வருள் கிட்டுகிறது. தேவன் "எல்லார் மீதும் கிருபையாயிருக்கவேண்டும் எனும் நிபந்தனைக் குட்பட்டவரல்ல யாத்.33:19. ரோமர். 9:14.23 பார்க்கவும்.

கிருபை கேட்டுப் பெற்றுக்கொள்ளக்கூடியதோ, சம்பாதித்துக் கொள்ளக் கூடியதோ அல்ல. அப்படிப்பட்டது கிருபையாயிராது. மனிதன் விரும்பி நாடாமலும் முயன்று தேடாமலும், ஜெபித்துக் கேட்காமலும் கிடைப்பதொன்று. அதுவும் அதைப் பெற எவ்விதமான தகுதியுமற்ற மக்களுக்கே கிடைப்பதாகும்.

கிருபையும் இரட்சிப்பும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டது கிருபை யினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல; தேவனுடைய ஈவு (எபே.2:8). மட்டுமல்ல கிருபை கிரியைக்கு முற்றிலும் எதிரானது" ஒருவனும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினாலே உண்டானதல்ல (எபே.2:9). அப்படிப்போல இக்காலத் திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்து கொள்ளுதலின்படி, ஒரு பங்கு மீதியாயிருக்கிறது. அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது. அப்படியல்லவென்றால் கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது; அப்படியல்லவென்றால் கிரியையானது கிரியை யல்லவே (ரோமர்.11:5-6) (ரோமர்.4:4-5 பார்க்கவும்) (எபேசியர் 1:6-7, 2:7-9 தீத்து 2:11, 3:4-7).

தேவனுடைய கிருபை நித்தியமானது. கிருபை கொடுக்கப்படும் முன்பேயே அது திட்டமிடப்பட்டது. 'அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல் தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார் (2தீமோ.1:9).

தேவனுடைய கிருபை இலவசமானது. எவரும் அதை சம்பாதிக்க வேண்டியதில்லை. "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறோம்" (ரோமர்.3:24).

தேவ கிருபை சுயாதிபத்தியமுடையது "கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கேதுவாக ஆண்டு கொண்டது (ரோமர். 5:21). A.W. Pink கிருபை ஆளவேண்டுமானால் அது சிங்காசனத்தில் இருக்க வேண்டும். சிங்காசனத்தில் இருப்பவர் சுயாதிபத்தியமுடையவர். அது கிருபாசன மாயுள்ளது (எபி.4:16).

கிருபை இயேசுவில் வெளிப்பட்டது அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார் (யோ.1:14). எனினும் அதன் முன் தேவன் மக்கள் மீது கிருபையாயிருக்கவில்லை என்பது அர்த்தமல்ல (ஆதி.6:8,

யாத்.33:19).தேவனுடைய கிருபை கிறிஸ்துவிலேயே வெளிப்பட்டது. சிலுவையில் அதன் தாற்பரியம் புலப்பட்டது (ரோமர்.5:15-17). பார்க்கவும் 2கொரி.8:9 அப்.14:3, 18:27, ரோமர்.4:16, யோ.1:16, 2தெச.2:16 இறைவன் கிருபை

நிறைந்தவர். இதனால் எனக்கு எதைக் கொடுக்கவேண்டுமோ அதைக் கொடுக்காமல் (நான் பாவி என்பதனால் அதற்கான தண்டனையான மரணத்தைத் தராமல்) எனக்கு எதைக் கொடுக்கக் கூடாதோ நான் எதைப் பெறத் தகுதியற்றவனோ அதை அவர் எனக்குத் தந்துள்ளார். (அதாவது நித்திய ஜீவனை)

## 5. இறைவனின் இரக்கம் - *Mercy of God*

தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர் (எபே.2:4) அவர் மிகுந்த இரக்கமும் உருக்கமும் உள்ளவர் (யாக்.5:11) அவர் இரக்கமும் கிருபையும் நீடிய சாந்தமும் மகா தயையுமுள்ளவர். ஆயிரம் தலை முறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர் (யாத்.34:6-7). அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை (புலம்.3:22)

இரக்கம் என்பது துயருறுவோர், அல்லல்படுவோரின் இக்கட்டுகளின் பொருட்டு வெளிப்படுத்தப்படும் உணர்வாகும். பரிதாபம் அனுதாபம் காருண்யம், தயை என்பனவும் இதனுள் அடங்கும். Berkhof தேவனுடைய கிருபையானது, தண்டனைக்குட்பட்ட குற்றமுள்ள பாவிக்கு மன்னிப் பளிக்கப்படுகையில் கிட்டுவதாகும். ஆனால் அவருடைய இரக்கம் மனிதருடைய இக்கட்டான நிலையில் அவனுக்கு தேவ உதவி தேவைப் படுகையில் அருளப்படுவதாகும். இக்கட்டுகளில் சிக்கித் தவிக்கும் மக்கள்மீது தேவன் பரிதாபப்படுவதனால். அத்தகு மக்களை ஆறுதல் படுத்துவதற்காக அவர் அவர்கள் மீது இரக்கமாயிருக்கிறார்.

நம் தேவன் ஷஷஇரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதல்களின் தேவனுமாயிருப்பதனால் (2கொரி.1:3) நாம் எத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டாலும், நமக்காக பரிதாபப்பட்டு தயைகூரும் தேவன் இருப்பது எவ்வளவு மன ஆறுதல், ஷஷஉருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொள்வேன் (ஏசாயா.54:7). என நம்மை ஆறுதல்படுத்துகிறார்.

## 6. இறைவனின் பொறுமை - *Patience of God*

*இறைவன் வெறுமனே பொறுமையுள்ளவர் அல்ல அவர் நீடிய பொறுமையுள்ளவர் (சங்.86:15) தயவு பொறுமை நீடிய சாந்தமுடையவர் (ரோமர்.2:4).நீடிய சாந்ததோடே பொறுமையாயிருப்பவர் (ரோமர் 9:23). நீடிய பொறுமையோடே காத்திருப்பவர் (1பேதுரு 3:20). இரக்கத்தின் ஒரு பகுதியே பொறுமையென்றாலும் இரண்டும் ஒன்றல்ல. எனினும் இவ் விரண்டு தன்மைகளையும் வேறுபடுத்துவதும் இலகுவானதொன்றல்ல. Charnok இவ்விரண்டு தன்மைகளையும் பற்றி குறிப்பிடும் போது. இக்கட்டுகளில் சிக்கித் தடுமாறும் மனிதன்மீது பரிதாபப்பட்டு கருணை புரிவது இரக்கம். இறைவனுடைய பொறுமை, குற்றவாளிகளான, தண்டனைக்குப் பாத்திரமான பாவிகள் மீது காட்டப்படுவதாகும். அதாவது அக்கிரமக்காரரை உடனடியாக தண்டியாமல் அவர்கள் மீது பொறுமையா யிருக்கிறார். 'அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங் களின் மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே அவர் பொறுமையாயிருக்கிறார் (ரோமர். 9:23).தன்னுடைய கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு அவர் பொறுமையுள்ளவராயிருக்கிறார். Berkhof கீழ்ப்படியாத தீயவர்கள் மீதும் அவர் நன்மைகளை அருள்பவர். அவர்களுடைய அக்கிரம செய்கை களுக்குத்தக்க பலனை உடனடியாக அளிக்காமல் அவர் பொறுமையுள்ள வராயிருக்கிறார் என்கிறார் Arthur W. Pink அக்கிரமக்காரருடைய பாவங்களுக்கு தக்கதாக அவர்களை நடத்தாமல் அவர்கள் மீதும் அவர் அன்பாயிருப்பது அவருடைய பொறுமையின் மகிமையை புலப்படுத்துவ தாயுள்ளது (அப். 14:16,17 பார்க்கவும்) (1பேதுரு 3:20 ஒப்பிடவும்).*

## 7. இறைவனின் உண்மை - *Veracity of God*

*இறைவனின் தன்மை "உண்மை" என்று கூறும்போது, இது அவர் சத்தியமுள்ள தேவன் (யாத்.34:6) உண்மையுள்ளவர் (உபா.7:9) நேர்மையானவர் (எண்.23:19) என்பவைகளைக் குறிக்கும்.*

*மற்றைய தெய்வங்கள் எல்லாம் போலியானவையும் பொய்யான வையுமாய் இருக்கையில் (சங்.ீ96:5, 97:7,115:4-8, ஏசா.44:9-10) இறைவன் இவைகளுக்கு எதிராக நிஜமானவராக, சத்திய தேவனாக இருக்கிறார். அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன் (ஏசா.65:10) மெய்யான தெய்வம் (எரே.10:10, யோ.17:3) அவரே சத்தியம் (யோ.14:6)*

பொய்யுரையாத தேவன் (தீத்து 1:3, எபி.6:18) சத்தியமுள்ளவர் (1யோ.5:20).

தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். தன் உடன்படிக்கைகள் வாக்குத்தத்தங்களை மறுதலியாதவராக அவர் இன்றும் உண்மையுள்ள வராய், தன் வார்த்தையின்படி செயற்படுபவராய் இருக்கிறார். "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ அவர் நிறைவேற்றா திருப்பரோ (எண்.23:19) ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் (உபா.7:9) என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன் (சங்.89:33) என்று கூறியுள்ளார். “நம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1கொரி.1:9)அவர் உண்மையுள்ளவரா யிருக்கிறார். அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார் (2தீமோ.2:13). வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் (எபி.10:23)

## 8. இறைவனின் வல்லமை - *Power of God*

இறைவன் சர்வவல்லமையுள்ளவர் (Omnipotence) (ஆதி.17:1) அவர் சகலத்தையும் செய்யவல்லவர், அவர் செய்ய நினைத்தது தடைபடாது (யோபு. 42:2). அவராகவே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை (எரே.32:17). நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ (எரே.32:27) என அவரே கேட்கிறார். தேவனாலே எல்லாம் கூடும் என்று இயேசுவும் தெரிவித்துள்ளார்

(மத்.19:26). தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக்.1:37). அல்லேலூயா. சர்வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார் (வெளி.19:6).

A..W. Pink தான் நினைத்தவைகளை செய்ய வல்லமையற்றவர் கடவுளாக இருக்கமுடியாது. தன் சித்தத்தை நிறைவேற்ற முடியாதவர் கடவுளே அல்ல "நம் தேவனே." தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார் (தானி.4:35).

தேவனுக்கு எல்லாவற்றையும் செய்யக்கூடிய வல்லமையுண்டு என்பது உண்மையாயினும், அவருடைய சித்தம் அவருடைய தன்மையினால்

கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது. தன்னுடைய தன்மைக்கு முரணான காரியங்களை அவரால் செய்ய முடியாது. அவர் பரிசுத்தமானவர் என்பதினால் அவரால் பாவம் செய்ய முடியாது (யாக்.1:13).பொய் சொல்ல முடியாது (எபி.6:18). அவர் உண்மையுள்ளவர் என்பதனால் தன்னை மறுதலிக்க முடியாது (2தீமோ.2:13) தீமையைப் பார்க்கமாட்டாதவர் (ஆப.1:13).

H.C. Thiessen தேவன் சர்வவல்லமையுள்ளவர் என்று கூறும்போது அவர் உபயோகிக்கும் வல்லமையைக் குறிப்பதல்ல அதாவது அவர் தன்னுடைய முழுவல்லமையையும் பாவிப்பவர் அல்ல. மாறாக தன்னுடைய வல்லமையைத் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கக் கூடிய வல்லமை அவருக்கு உண்டு.

தேவன் தன்னுடைய வல்லமையை தன் சித்தத்தின் தேர்வின் அடிப்படையில் ஒரு வரையறைக்குட்படுத்தியுள்ளார் இதனால்தான் உலகின் அக்கிரமங்கள் பாவங்களையெல்லாம் (அனுமதித்தவராய்) நீக்கிவிடாமல் இருக்கிறார். அவரால் செய்ய முடியாததென்று ஒன்றுமேயில்லை. எனினும் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் எனும் சித்தம் கொண்டிருப்பவரல்ல அவர்.

இறையியலாளர்கள் சில சமயங்களில் தேவனுடைய வல்ல மையை இரண்டாகப் பிரிப்பதுண்டு. ஒன்று தனித்துவமான வல்லமை. மற்றது. சாதாரணமான வல்லமை hodge இன் வரைவிலக்கணத்தின்படி, முதலாவது இரண்டாந்தர ஏதுக்களின் துணையின்றி அவராலேயே செயற்படும் வல்லமை, மற்றது, இரண்டாந்தர ஏதுக்களினூடாக வெளிப்படும் வல்லமையாகும்.

எல்லாவற்றையும் செய்யக்கூடிய சர்வவல்லமை பொருந்திய கடவுளை தெய்வமாகக் கொண்டிருப்பதால், நம்மால் முடியாத காரியங்களை அவருடைய உதவியினால் பெற்றுக்கொள்ளக் கூடியதாயுள்ளது (ஏசா.45:11-13, 46:4, எரே.32:16-44, அப்.4:24-31).

தேவனுடைய வல்லமையை நாம் பலவற்றில் காணலாம். சங்.8:9:11:12 சிருஷ்டிப்பில் அவருடைய வல்லமை விளங்குகிறது. அவரே அதை சிருஷ்டித்தார். மனிதர்கள் எதையாவது உருவாக்குவதாயின் அதற்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் அவர்களுக்கு தேவை. ஆனால்

தேவனே ஒன்றுமே இல்லாதிருந்தும் தன்னுடைய வார்த்தையின் வல்லமையினால் இப்பிரபஞ்சத்தையும் அதிலுள்ள அனைத்தும் சிருஷ்டித்துள்ளார். "அவர் சொல்ல ஆகும். கட்டளையிட நிற்கும் (சங்.33:9) மட்டுமல்ல தான் படைத்த அனைத்தையும் தன்னுடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராயிருக்கிறார் (எபி.1:3). அவர் மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறவராயிருக்கிறார் (சங்.36:6).

## இறைவனின் பரிசுத்தம் - Holiness of God

தேவன் பரிசுத்தமானவர் எனும் போது நாம் அதன் இரண்டு அம்சங்களையும் நோக்க வேண்டும். எபிரேய கிரேக்க பதங்கள், "வித்தியாசமான', 'தனித்துவமான," "வேறுபிரிக்கப்பட்ட" எனும் அர்த்தம் தருபவை எனவே, அவர் மற்ற உயிரினங்களை விட வேறானவர் அவற்றிலும் மேலானவர். அவர் அனைத்தையும் கடந்த, சகலவற்றிற்கும் அப்பாற்பட்ட அநாதித்தனி முதல் அவர் மாசற்றவர், தூய்மையானவர், எனும் கருத்தும் இதில் அடங்கியிருக்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. (யாத்.15:11, 1சாமு.2:2, ஏசா.57:15, ஓசி.11:9, அவர் பரிசுத்தமானவர் என்பதனால் பாவத்தோடு சம்பந்தமற்றவர் யோபு.34:10, ஆப. 1:13, ஏசா.6:5 இதனாலேயே அவர் பாவத்தை வெறுப்பவராயிருக்கிறார்.

பரிசுத்தம் தேவனுடைய அதிமுக்கிய குணமாகக் கருதப்பட்டது. இத்தன்மையுடையவராகவே தன்னை மக்கள் அறிந்திட வேண்டும் என தேவன் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சித்தங்கொண்டிருந்தார் (லேவி.11:44- 45. யோசு.24:19, 1சாமு.6:20, சங்.22:3, ஏசா.40:33, எசே.39:7, ஆப.1:12). கடவுள் சீனாய் மலையில் விதித்த வரையறைகள் இக்குணாதிசயத்தின் முக்கியத்துவத்தை மேலும் புலப்படுத்துவதாயுள்ளன (யாத். 19:12, 13, 21-25). மேலும் ஆசரிப்பு கூடாரம் ஆலயம் என்பவற்றில் பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்த ஸ்தலம் எனும் பிரிவுகள் (யாத்.26:33, 1இராஜா.6:16) நியமிக்கப்பட்ட பலிகள், (லேவி. 1-7) ஆசாரியப்பணி, (லேவி.8:10) கற்பனைகள். (லேவி.11:14) பண்டிகைகள், (லேவி.23)போன்றவையும் இதை வலியுறுத்துவதாயுள்ளன. புதிய ஏற்பாட்டிலும் பரிசுத்தத்துக்கு முக்கியத்து வம் கொடுக்கப்பட்டுள்ளது (யோ.17:11, எபி.12:10. 1பேது.1:15- 16.வெளி.4:8).சுருங்கச் சொல்லின்

இத்தன்மையே அவருடைய மற்றைய குணாதிசயங் களுக்கான அடிப்படையாயும், அவற்றை கட்டுப்படுத்துவ தாகவும் உள்ளது (சங்.47:8, 89:14, 97:2).

தேவன் மட்டுமே பரிசுத்தர் (வெளி.15:4) பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர் (யாத்.15:11) இதனாலேயே சேராபீன்கள் "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என சொல்லிக் கொண்டிருக்கின்றனர் (ஏசா.6:3). தேவனுடைய பரிசுத்தத்தை அவருடைய கிரியைகளில் நாம் காணலாம் (சங்.145:17). *A.W.Pink* சுட்டிக்காட்டியது போல, "பரிசுத்தமே அவருடைய சட்டம்" அவரது கிரியை அனைத்தும் நல்லவைகள் (ஆதி.1:31). அதே போல அவருடைய பரிசுத்தம் அவருடைய நியாயப் பிரமாணத்தில் வெளிப்பட்டுள்ளது. அவர் பாவத்தை வெறுக்கிறவராக இருப்பதனால் அவருடைய கற்பனைகள் பாவச் செயலை எதிர்க்கின்றன. அவருடைய பரிசுத்தம் சிலுவையிலும் வெளிப்பட்டது. அவர் பாவத்தை வெறுப்பவராதலால் சிலுவையில் அதை தண்டித்தார்.

தேவன் பரிசுத்தராயிருக்கின்றபடியால், பாவிகளுக்கும் அவருக்கு மிடையே பாரிய பிளவொன்றுள்ளது (ஏசா.59:1-2,ஆப.1:13). பாவி தேவனை விட்டுப் பிரிந்து சென்றது மட்டுமல்ல, தேவனும் அவனை விட்டு பிரிந்து சென்றார். பாவத்தின் முன் இருந்த ஐக்கியம் பாவத்தினால் முறிவடைந்த தோடு சாத்தியப்படாமலும் போனது. எனவே மனிதன் மற்றொருவருடைய பரிசுத்தத்தின் அடிப்படையிலேயே தேவனை அணுக முடியும். கிறிஸ்து வினால் இச்சிலாக்கியம் நமக்கு கிடைத்துள்ளது (ரோமர் 5:2, எபே.2:18, எபி.10:19-20).மட்டுமல்ல பயத்தோடும் பக்தியோடும் அவருடைய பிரசன்னத் திற்கு வரவேண்டும் (எபி.12:28-29). தேவனுடைய பரிசுத்த தன்மையைப் பற்றிய சரியான அறிவு பாவத்தை விட்டுவிட நமக்கு உதவி புரியும். *Berkhof* அவர் பாவத்தை வெறுப்பவர் மட்டுமல்ல, தன்னுடைய மக்களிடம் பரிசுத்தத்தை எதிர்பார்ப்பவரும் கூட இதற்காகவே நம்மைத் தெரிந்து கொண்டுள்ளார் (எபே.1:4) என்கிறார்.

## இறைவனுடைய நியாயம் நீதி - *Righteousness and Justice of God*

இத்தன்மை அவருடைய பரிசுத்தத்துடன் சம்பந்தப்பட்டது. (Thiessen) சுட்டிக் காட்டியதுபோல, தன்னுடைய சிருஷ்டிகள் மீதான அவருடைய பரிசுத்த நடவடிக்கையே அவருடைய நீதியும் நியாயமுமாகும். இக்குணம் பலமுறை வேதத்தில் தேவனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது (2நாளா.12:6, எஸ்ரா.9:15, நெகே.9:33, சங்.89:14, ஏசா. 45:21, தானி. 9:14, யோ.17:25, 26LDIT.4:8, வெளி.16:5). நியாயமுள்ளவராயிருக்கின்ற படியால் தன்னுடைய உலகுக்கு சட்ட அவர் திட்டங்களையும் ஒழுங்குமுறை களையும் விதித்துள்ளார். அவர் நீதியுள்ளவராயிருப்பதனால், தன்னுடைய சட்டதிட்டங்களை மீறி நடப்பவர்களைத் தண்டிக்கிறார் (உபா.7:9, 12,13, 2நாளா. 6:15, சங். 58:11, மத்.25:22, ரோமர்.2:7, எபி.11:26, ஆதி.2:17, யாத்.34:7, எசே.18:4, ரோமர். 1:32, 2:8-9, 2தெச.1:8).

பொதுவாக நியாயம் என்பது சட்டத்தின்படி செயற்படுவது. மனிதர்களை பொறுத்தவரையில் 'இருக்கும் சட்டத்தின்படி நடப்பது என வரையறுக்கலாம் ஆனால் தேவனுக்கு எவ்வித சட்டங்களும் இல்லை. அவர் எல்லா சட்டங்களையும் விட மேலானவர் என்பதால் அவர் நியாயமுள்ளவர் என இதனடிப்படையில் சொல்வது முறையாகாது என வாதிடுவர். எனினும் அவரில் ஒரு சட்டம் இருப்பதால், அவர் அந்த சட்டத்தின்படி செயற்படும் அவர் நியாயமுள்ள தேவன் என நாம் அழைப்பது தவறல்ல.

அவர் நீதியும் நியாயமுள்ளவராக இருக்கின்றபடியால் அவரே பூமியனைத்திற்குமான நியாயாதிபதியாக இருக்கிறார் (ஆதி.18:25, நியாய. 11:27, சங். 75:7, சங்.82:8, எபி.12:23). வேதாகம சரித்திரம் அவர் நியாயாதிபதி என்பதை நமக்கறியத் தருகின்றது (ஆதி 3:6-8, 18-19, 15:14, யாத்.7-12, 32:26-35, லேவி.10:1, யோசு.7, நியா.2:11,3:5,4:1, 2இராஜா. 17, 22:15, 23:26, மத்.21:23, 1தெச.2:14, தானி. 4:5, அப்.5, 12:21, 13:8, 1கொரி.11:29-32).எல்லா காரியங்களையும் தேவன் நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் (பிர.11:9). ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமை யானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார் (பிர.12:14)

நியாயாதிபதியாகிய தேவன் உலகை நியாயந்தீர்க்கும் நாள் வரப்போகிறார். அதற்கென அவர் ஒரு நாளை நியமித்திருக்கிறது

(அப்.17:31). அவர் நீதியுள்ள நியாயாதிபதி (2தீமோ.4:8) வரவிருக்கும் அவர் வாசற்படியிலே நிற்கிறார் (யாக்.5:9). உயிரோடிக்கிறவர்களையும் மரித்தோரையும் அவர் நியாயந்தீர்ப்பார் (1பேது.4:5). அவர் மனுஷனுடைய அந்தரங்கங்களையும் நியாயந்தீர்ப்பார் (ரோமர்.2:16).யோவான்.5:22,26,28 பார்க்கவும்.

## இறைவனின் பொறாமை - *Jealousy of God*

இக்குணம் இறைவனுக்கு பொருந்துமா என நம்முள் கேள்வி எழலாம். எனினும் சீனாய் மலையில் கற்பனைகளை இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்தபோது தேவன் தன்னைப்பற்றி வெளிப்படுத்திய முதலாவது குணம் பொறாமையேயாகும் (யாத். 20:5). தமிழ் வேதாக மத்தில் எரிச்சல் என உள்ளது. பொறாமை என்றே இருக்க வேண்டும் யாத்.34:14 இல் "கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது. அவர் எரிச்சலுள்ள தேவனே என்பதிலும் அவர் பொறாமையுள்ள தேவன் என்பதே சரி. இக்குணம் அவருடைய பெயராகவும் இருக்கின்றபடியால் அவரைப்பற்றி அறிந்து கொள்ள இது உதவுகின்றது. எண்.25:11,உபா.4:24, 6:15, 29:20, 32:16.21, யோசு.24:19, 1இராஜா.14:22, எசே.8:3-5, 16:38,42, 23:25, 36:5, 38:19, 39:25, யோவேல்.2:18. நாகூம் 1:2, செப்பனியா. 1:18. 3:8, சகரியா.1:14. 8:2, சங்.75:58, 79:5) அவரின் இக்குணம் அவருடைய செயற்பாட்டின் காரணமாயமைகிறது (எசே..39:25, சகரி.1:14. நாகூம்.1:2). பவுலும் 1கொரி.10:22 இல் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார் யாக்கோபு இக்குணத்தை வைராக்கிய வாஞ்சை என எழுதியுள்ளார் (யாக்.4:5).

மனிதர்களைப் பொறுத்தவரையில் இருவகையான பொறாமைகள் உள்ளன. மற்றவனுக்கு கிடைத்தது தனக்கு கிடைக்கவில்லையே என அவன் மீது பொறாமைப்படுவது பிழையானது. ஆனால் அன்புறவை பாதுகாத்துக் கொள்வதற்கான பொறாமை பிழையற்றது. Tasker குறிப்பிட்ட போது, தன்னுடைய தாம்பத்திய வாழ்வில் மாற்றான் ஒருவனின் தலை யிட்டைப் பற்றிக் கொள்ளாதவன் ஒழுக்கநெறியை அறியாதவனே. "ஸ்திரீயைப் பற்றிய எரிச்சல் புருஷனுக்கு மூர்க்கத்தை உண்டு பண்ணும் என திருமறையும் இச்சத்தியத்தை விளக்குகிறது (நீதி.6:34). அதாவது தனக்குரியதை மற்றவன் அபகரிக்கையில் அவன் மீது பொறாமைப்படுவது பிழையல்ல. இம்முறையிலேயே தேவனுடைய பொறாமையும் உள்ளது.

தன்னுடைய மக்கள், தான் நேசித்த மக்கள், மற்ற தேவர்களிடம் செல்வதை விரும்பாத அவர் பொறாமைப்படுகிறார் (யோசு.24:19. 1இராஜா.14:22, சங். 78:58, 1கொரி.10:22).விக்கிரகத்தின் ஸ்தானம் தேவனுக்கு பொறாமையை ஏற்படுத்துவதாயிருக்கிறது (எசே.8:3). தேவனுக்கும் மக்களுக்குமிடையேயுள்ள உறவு கணவனுக்கும் மனைவிக்குமிடையேயுள்ள உறவுக்கு உவமிக்கப்பட்டுள்ளமையினால். அந்நிய தேவர்களை நாடிச்செல்வது விபச்சாரமாகக் கருதப்பட்டது. *Colvins* குறிப்பிட்டதுபோல கர்த்தர் தன் மக்களுடைய உண்மையான கணவனா யிருக்கின்றபடியால், நாம் சாத்தானுடன் விபச்சாரத்தில் ஈடுபடுவது அவருக்கு பொறாமையையும் எரிச்சலையும் ஏற்படுத்துகிறது.

கற்புள்ள மனைவியர் தங்கள் கணவனுக்கு உண்மையாயும் விசுவாசமாகவும் இருப்பதுபோல, நாமும் நம் தேவனுக்கு பொறாமை ஏற்படும் வண்ணம் அவரை விட்டு வேறு தேவர்களிடம் போகக்கூடாது. *J.1. Packer* சுட்டிக்காட்டியது போல அவருடைய பொறாமை, அவருடைய உடன்படிக்கை, அன்பின் அடிப்படையில் ஏற்படுவதாகும். இவ்வன்பு தற்செயலாக ஏற்பட்டதே அன்றி வெறும் கவர்ச்சியினாலோ பரிதாபத்தினாலோ ஏற்பட்டதல்ல, மாறாக அவருடைய சுயாதிபத்திய திட்டத்தின் அனாதித்தீர்மானத்தின் வெளிப்பாடாகும். தனக்கென, தன்னுடைய மகிமைக்கென தனக்குத் தேவையான மக்கள் மீது அவர் கொண்ட நேசமாகும். எனவே இம் மக்கள் தேவனை விட்டு மற்ற தெய்வங்களிடம் போகும்போது அவருக்கு பொறாமை ஏற்படுகின்றது. எனினும் இவை மறுவுருவக மொழியின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

## இறைவனின் கோபம் - *Wrath of God*

அன்புள்ள தேவன் எப்படி கோபத்தின் தேவனாகவும் இருக்க முடியும் என நாம் வினவலாம். ஆனால் அவர் பாவியை நேசிக்கையில், அவன் செய்யும் பாவத்தை வெறுப்பவராயிருக்கிறார். *A.W. Pink* சுட்டிக் காட்டியதுபோல, வேதத்தில் தேவனுடைய அன்பைவிட கோபத்தைப்பற்றிய குறிப்புகள் அதிகமாக இருக்கின்றன. (சில உதாரணங்கள்: ரோமர்:.1:18,2:5, 5:9, 12:19, 13:4, 1தெச.1:10, 2:16, 5:9, வெளி.6:16,16:19லூக்.21:22-24).

தேவனுடைய கோபம் மனிதர்களுடையதைப் போன்றதல்ல. சடுதியாய் ஏற்படும் ஆத்திரம், கட்டுப்பாடற்ற உணர்ச்சி மூர்க்கம் போன்றதல்ல. அது தேவனுடைய கோபம் நியாயத்தின் அடிப்படையில் அமைவது, அவருடைய நீதி தவறாத நிர்வாகத்தில் அவர் நியாயாதிபதி யாய் செயற்படுவதனால் ஏற்படுவது. மட்டுமல்ல தேவ கோபம் மனிதன் தானாகவே தன் மீது வருவித்துக் கொள்வதொன்று (ரோமர்.2:5) மக்களே அந்தகாரத்தில் வாழ விரும்பி விசுவாசியாதவர்களாக ஆக்கினைக்குள்ளா கின்றனர் (யோ.3:18-19).

தேவன் பரிசுத்தமுள்ளவராயிருக்கின்றபடியால் அவர் எல்லா பாவங் களையுமே வெறுக்கிறார். அவர் எல்லா பாவங்களையுமே வெறுப்பதனால் அவருடைய கோபம் பாவிகளுக்கெதிராக பற்றி எரிகிறது (சங்.7:11). கடவுளுடைய தன்மையே நரகத்தை அவசியமாக்குகின்றது.

தேவனுடைய கோபம் என்பது சகல விதமான அநீதிகளுக்கும்

மேலுள்ள அவருடைய நித்திய வெறுப்பாகும். அது தீமை மீதான தெய்வீக எதிர்ப்பு. அவருடைய பரிசுத்தமே பாவத்துக் கெதிராக கோபமாக பற்றி எரிய ஏதுவாகின்றது. சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்திற்கும் விரோதமாய் தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது (ரோமர் 1:18). இரட்சிப்படையாதவர் கோபாக்கினை யின் பிள்ளைகள யிருக்கின்றனர் (எபே.2:3). இக்கோபாக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒரே ஒரு மார்க்கம் மட்டுமேயுள்ளது. "இயேசுவே இனிவரும் கோபாக்கினையிலிருந்து நம்மை இரட்சிக்கிறவருமாயிருக்கிறார் (1தெச.1:10). தேவன் நீதியுள்ள நியாயாதிபதி. அவர் நாள் தோறும் பாவியின் மேல் சினங்கொள்கிற தேவன் (சங்.7:11) எனினும் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக் கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சய மாமே. (ரோமர். 5:8-9).

# 4. இறைவனின் சித்தத்தை அறிந்து கொள்ளுதல்

இறைவனின் தன்மையை அறிந்து கொள்ளும் நாம் அவருடைய குணாதிசயங்களை அறிந்து கொண்டபின், அவருடைய சித்தத்தையும் அறிந்திட வேண்டியது அவசியமாகும். ஏனெனில் அவருடைய சித்தமும் அவர் எப்படிபட்டவர் என்பதை நமக்கு அறியத் தருவதாயுள்ளது.

கடவுளுடைய சித்தத்தை அறிந்துகொள்ள முனைகையில் உபா.29:29 ஐ நாம் மறந்துவிடக்கூடாது *Calvin* குறிப்பிட்டது போல. தேவன் தன் வாயை எங்கு மூடியுள்ளாரோ அங்கு கேள்வி கேட்பதை நாம் விட்டு விட வேண்டும்.

மேலும் வேதாகமத்தில் சித்தம் எனும் வார்த்தை ஒன்றுக்கும் மேற்பட்ட அர்த்தங்களுடன் உபயோகிக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இரண்டு கிரேக்க வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன. அவை *bolue* உம் *thelama boule* எனும் பதங்களாகும். *bolue* பகுத்தறிவினடிப்படை யிலான உணர்வுள்ள வாஞ்சையாகும். *Thelama* உணர்வற்ற, தானாக எழும் ஆசையாகும். ஒன்று பகுத்தறிவைச் சார்ந்தது மற்றது மனவெழுச் சியைச் சார்ந்தது.

புதிய ஏற்பாட்டில் *Boule* எனும் பதம் கடவுளின் அனாதித் தீர்மானம், கருத்தான ஆலோசனையின் அடிப்படையில் அமைவதைக்குறிக்கிறது. இது உறுதியானதும் மாற்றப்பட முடியாததுமாகும் (உ-ம் அப்.2:23). ஆனால் மற்றைய பதம் சம்மதிக்கப்படக்கூடியது விரும் பத்தக்கது, கருதப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்டது என்பவைகளின் அடிப்படையில் அமையும் சித்தம். அதன் அர்த்தம் வசன அமைப்பின் அடிப்படையில் பெறப்படவேண்டியது.

கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ள நாம் முதலில் அதன் பல்வேறு அம்சங்களைப்பற்றி அறிந்திருக்கவேண்டும். ஏனெனில் வேதத்தில் தேவனுடைய சித்தம் எப்போதும் ஒரே அர்த்தத்தை நமக்கு தருவதில்லை.

## (அ) தீர்மானிக்கப்பட்ட சித்தம் - *Decretive will of God*

இது நிர்ணயிக்கப்பட்ட சித்தம் எனவும் அழைக்கப்படலாம். தேவன் தன்னுடைய உன்னத சுயாதிபத்தியத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப் பட்டவை இதில் அடங்கும். இவ்வாறு தேவனால் திட்டமிடப்பட்டவை

நிச்சயமாய் நிறைவேறியே தீரும். அதை எதிர்க்கவோ, மாற்றவோ திரிபடையச்செய்யவோ யாராலும் முடியாது (தானி 4:35 பார்க்க). அவர் தனக்கு சித்தமானதையெல்லாம் செய்பவர் (சங்.115:3). சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார். யார் அதை வியர்த்தியாக்குவான். அவருடைய கை நீட்டப்பட்டிருக்கின்றது. யார் அதைத் திருப்புவான் (ஏசா.14:27). அவரோவென்றால் ஒரே மனமாயிருக்கிறார் அவரைத் திருப்பத்தக்கவன் யார், அவருடைய சித்தத்தின்படியெல்லாம் செய்வார் (யோபு.23:13). அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற் கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வ காலமுதற் கொண்டும் அறிவிக்கிறேன். என் ஆலோசனை நிலைநிற்கும் எனக்கு சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்.... அதைச் சொன்னேன் அதை நிறைவேற்றுவேன் அதைத் திட்டம் பண்ணினேன் அதை நிறைவேற்றி முடிப்பேன் என்று அவரே சொல்கிறார் (ஏசா.46:10-11) (அப்.17:26, ரோமர்.8:29).

இத்தீர்மானிக்கப்பட்ட சித்தம் நேரடியாக அவரால் நிறைவேற்றப படலாம் அல்லது அவர் அனுமதிக்கும் சம்பவங்கள் மூலமாக நிறைவேறலாம். எது எவ்வாறு இருப்பினும் அந்த ஞானமிகுந்த கர்த்தரின் ஆழ்ந்த ஆலோசனையில் உருவாகிய திட்டங்கள், அவர் நியமித்திருக்கும் காலத்தில் நிச்சயமாய் நிறைவேறியே தீரும்.

## (ஆ) பிரமாணிக்கப்பட்ட சித்தம் - *Preceptive will of God*

வேதம் கர்த்தருடைய சித்தத்தைப்பற்றி கூறும்போது எப்போதும் அது தீர்மானிக்கப்பட்ட சித்தம் என குறிப்பிடவில்லை. இச்சித்தத்தை மீறிநடக்க முடியாது. மட்டுமல்ல இச்சித்தம் வியர்த்தமாவதுமில்லை. மக்களால் கீழ்ப்படியாமலும் இருக்க முடியாது. எனினும் பிரமாணத்தின் சித்தம் மக்களால் மீறப்படுகிறது. மக்கள் இச்சித்தத்திற்கு கீழ்படியா மலிருப்பதும் அதிசயமல்ல. இச்சித்தம் அவருடைய நியாயப்பிரமாணம், கற்பனைகள் கட்டளைகளில் உள்ளது. இவை நாம் செய்ய வேண்டியவை களை நமக்கு அறியத் தருகின்றது. இச்சித்தம் நம் வாழ்க்கைகான நியதியாயுள்ளது.

*R.C. Sproul:* குறிப்பிட்டது போல அநேக கிறிஸ்தவர்கள் வேதப்பிரமாணத்தின் சித்தத்தைப் பற்றி அலட்சியப்போக்குடன் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்களுடைய, வாழ்வில் கர்த்தருடைய தீர்மானிக்கப்பட்ட சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்ள ஆவலா

யுள்ளனர். இத்தகையோர், கீழ்ப்படிவைவிட கிரகப்பலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். தாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைவிட கிரகங்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றன என்பதையே அறிய முயற்சிக்கின்றனர்.

தீர்மானிக்கப்பட்ட சித்தத்தை நாம் அறிவதைவிட, அவருடைய பிரமாணத்தின் சித்தத்திற்கு கீழ்ப்படிவதையே தேவன் விரும்புகிறவரா யிருக்கிறார்.

## (இ) வாஞ்சிக்கும் சித்தம் - *God's will of Disposition*

இது தேவன் விரும்பும். அவர் சம்மதிக்கும் சித்தமாகும். சில காரியங்கள் அவர் மனதை திருப்புவதாயுள்ளன. மற்றவை அவர் வாஞ்சிப் பவைகளாக உள்ளன.

இச்சித்தம் 2பேதுரு 3:9 இல் உள்ளது. ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விருப்பமுடையவரா யிருக்கிறார். இவ்விருப்பம் சிலர் கூறுவது போல தீர்மானிக்கப்பட்ட சித்தமாயிருந்தால், நரகம் வெறுமையாகிவிடும். இவ்வசனம் கூறுவது யாதெனில் துன்மார்க்கருடைய அழிவில் அவர் மகிழ்வதில்லை. இதனாலேயே அவர்கள் மனந்திரும்பவேண்டுமென விரும்புகிறார். *R.C. Sproul* தான் விரும்பாததையும் தேவன் தீர்மானிக்கலாம். அதாவது துன்மார்க்கருக்கு நீதியின்படி தீர்ப்பளிப்பது அவருடைய தீர்மானம். நீதி பேணப்படுவதும், நியாயப்படி காரியங்கள் நடப்பதும் அவருக்கு விருப்பம் ஆனால் அத்தகு தண்டனைகள் விதிக்கப்படும்போது அதைக்கண்டு மகிழ்பவரல்ல.

ஒருவருமே கெட்டுப்போவது அவருக்கு விருப்பமில்லையென்றால். அவர் ஏன் எல்லாரும் இரட்சிக்கப்படும்படி தீர்மானித்திருக்கக்கூடாது என கேட்கலாம். பாவம் தேவ நீதியையும் பரிசுத்தத்தையும் மாசுபடுத்துவதா யுள்ளது. ஒருவரும் கெட்டுப்போவதை விரும்பாத தேவன் பாவம் தண்டிக்கப்படாமல் போவதையும் விரும்பாதவர். (இதனால் தேவனில் முரண்பாடுள்ளது எனும் முடிவுக்கு வந்துவிடக்கூடாது). தேவனுடைய பிரமாணத்தின் சித்தத்திற்கு கீழ்ப்படிபவர்கள் கெட்டுப்போவதில்லை. மற்றவர்கள் தேவ கட்டளையை அவமதித்து ஆக்கினைக்குள்ளாகின்றனர். *R.C.Sproul* நாம் அவருடைய கற்பனைக்கு கீழ்ப்படிய வேண்டும் என

அவர் எதிர்பார்க்கிறார். எனினும் நம்முடைய கீழ்ப்படியாமை அவருடைய சுயாதிபத்தியத்தை அழித்துவிடாது.

### (ஈ) இரகசிய சித்தம் - Secret will of God

இதுவரை மூவகைப்பட்ட தேவனுடைய சித்தங்களைப்பற்றி பார்த்தோம். தேவ சித்தத்தை இன்னும் இருவகையாக பிரித்து ஆராய்வது வழமை. ஒன்று வெளிப்படுத்தப்பட்ட சித்தம், மற்றது வெளிப்படுத்தப்படாத இரகசிய சித்தம். இத்தரப்படுத்தல் உபாகமம். 29:29 ஐ அடிப்படையாகக் கொண்டது. இரகசிய சித்தம் சங்.115:3, தானி.4:17,25, 32, 35 ரோமர்.9:19,19, 11:33,34, எபே.1:5.9,11,இலும் வெளிப்படுத்தப்பட்ட சித்தம் மத்.7:21. 12:50, யோ.4:34,7:17, ரோமர்.12:2, பிலி.2:13, 1பேதுரு 3:17, இலும் குறிப்பிடப் பட்டுள்ளது. Berkhof குறிப்பிட்டது போல இரகசிய சித்தம் வெளிப்படுத்தப் படாத அவருடைய தீர்மானிக்கப்பட்ட சித்தம். அது அவரால் நிறைவேற்றப் பட்டுக்கொண்டுவருபவை. வெளிப்படுத்தப்பட்ட சித்தம் அவருடைய பிரமாணத்தின் சித்தத்திற்குள் அடக்கப்படலாம்.

வெளிப்படுத்தப்பட்ட, வெளிப்படுத்தப்படாத இரகசிய சித்தம் இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவையல்ல. எனினும் மக்களுக்கு சில கேள்விகள் மனதில் எழுகின்றன அவையாவன:-

கர்த்தருடைய மறைமுக சித்தத்தின்படி நடக்கும் ஒருவனால் அவருடைய பிரமாண சித்தத்திற்கு விரோதமாக செயற்பட முடியுமா? சில சமயங்களில் இவ்வாறு நடக்கலாம். உதாரணமாக இயேசுவின் சிலுவை மரணத்தை எடுத்துக்கொள்வோம். இது தேவனுடைய தீர்மானிக்கப்பட்ட சித்தம் (அப்.2:23). எனினும் தேவனுடைய நோக்கம் தன்னுடைய மக்களின் மீட்பை உறுதிப்படுத்துவதேயாகும். எனினும் இந்த நோக்கம் இயேசுவுக்கு விரோதமாக கூடிய சட்டத்தினருக்கு மறைமுகமான சித்தமாகவே இருந்தது. பிலாத்து இயேசுவை சிலுவையில் அறைவதற்கு ஒப்புக்கொடுக்கையில் தேவனுடைய பிரமாண சித்தத்திற்கு

எதிராக செயற்பட்டாலும் அவருடைய தீர்மானிக்கப்பட்ட சித்தத்தின்படியே செயற்பட்டான். அப்படியானால் தேவனுடைய பிரமாண சித்தம் அர்த்த மற்றதா? அப்படி சொல்ல முடியாது. காரணம் இச்செயல், தீமையான மனிதர்களுடைய தீயச் செயல்களின் மூலமாக

தன்னுடைய அனாதித் தீர்மானத்தை நிறைவேற்றக்கூடிய தேவனுடைய சுயாதிபத்திய வல்லமை யையே நமக்கு புலப்படுத்துகின்றது. யோசேப்பின் கதையைப் பார்ப்போம். அவனுடைய சகோதரர் அவனுக்கு விரோதமாக தீங்கிழைத்து தேவனுடைய பிரமாணத்தின் சித்தத்தை மீறி செயற்பட்டனர். எனினும் தேவன் அவையனைத்தையும் நன்மைக்கேதுவான தன்னுடைய இரகசிய சித்தத்தின்படி நிறைவேற்றினார். இம்மானிட தீமைகள் மூலமாக. யோசேப்பின் வாழ்வில் தன்னுடைய சித்தத்தை தேவன் நிறைவேற்றினார் (ஆதி.45:5-9 பார்க்க). எனினும் அவர்களுடைய பாவம் பாவமே. தேவன் செய்தது என்னவென்றால் தீமையிலிருந்து நன்மையைக் கொண்டு வந்தார். இது அவருடைய இரகசிய சித்தம் நிறைவேற்றப்பட்ட விதமாகும்.

கர்த்தருடைய பிரமாண சித்தத்தின்படி நடப்பவன் அவருடைய மறைமுக சித்தத்திற்கு விரோதமாக நடக்க முடியுமா?ஆம் உதாரணமாக. மற்றொரு நாட்டைக்கொண்டு, நம்முடைய நாட்டை நம்முடைய பாவத்திற்காய் தண்டிப்பது தேவனுடைய மறைமுக சித்தம் என வைத்துக் கொள்வோம். இது நம்மை சிட்சிக்க தேவன் கையாளும் முறை, இப்போது தேவன் நம் எதிரி நாட்டின் பக்கம் இருக்கிறார். எனினும் நம்முடைய கடமை என்ன? நம் நாட்டை ஆக்கிரமிக்கும் அந்நிய நாட்டை எதிர்த்து போர்புரிவது. பாபிலோனிய இராணுவத்தைக் கொண்டு தேவன் இஸ்ரவேலை சிட்சித்ததும் இதற்கொப்பானதுதான். இஸ்ரவேலர் பாபிலோன் ராச்சியத்தை எதிர்த்துப் போர் புரிந்தது தேவனுடைய தீர்மானிக்கப்பட்ட இரகசிய சித்தத்திற்கு எதிரான செயலாயினும், அவருடைய பிரமாண சித்தத்தின்படியானது.

இத்தகைய முரண்பாடுகள் நமக்கு தென்பட்டாலும் தேவனுக்கு அதில் எவ்வித முரண்பாடும் இல்லை. அவர் தன்னுடைய சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிறவர் (எபே.1:12). நம் அறிவு குறுகியதாயிருப்பதனாலும் தேவனுடைய முழு சித்தமும் நமக்கு தெரியாமல் இருப்பதினாலுமே நமக்கு இவைகள் முரண்பாடுகள் போல தென்படுகின்றது.

## (உ) அனுமதிக்கும் சித்தம் - *Permissive will of God*

கடவுளுடைய சித்தத்தைப்பற்றி நாம் அறிந்து கொள்ளவேண்டிய

மற்றுமொரு அம்சம் அவருடைய அனுமதிக்கும் சித்தமாகும். தனக்கு விருப்பமற்ற பல காரியங்கள் நடைபெற அவர் அனுமதியளிக்கின்றார். எனினும் இத்தகு அனுமதி மூலம் அவர் அவைகளை அங்கீகரிக்கிறார் (Sorctior) என்பதாக நாம் எண்ணிவிடக் கூடாது.

சவுல் அரசனாகிய சம்பவம் கர்த்தருடைய அனுமதிக்கும் சித்தத்திற்கு நல்லதோர் உதாரணமாய் உள்ளது. 1 சாமுவேல் 8ஆம் அதிகாரத்தை வாசிக்கும்போது, இஸ்ரவேல் மக்கள் அரசனின் ஆட்சியின் கீழ் அக்குறிப்பிட்ட கால கட்டத்தில் இருப்பது கர்த்தரின் சித்தமாயிருக்க வில்லை என்பதை அறிந்துகொள்ளலாம். மக்களின் கோரிக்கையின் விளைவு எத்தகையதாயிருக்கும் என்பதை கர்த்தர் விளக்கமாக சாமுவேலி னூடாகத் தெரிவித்தார். எனினும் மக்கள் தொடர்ந்தும் தங்களுக்கு ராஜா வேண்டுமென கேட்டமையால் கர்த்தர் அவர்களுக்கு சவுலை ராஜாவாகக் கொடுத்தார். சவுல் அரசனாக வருவதற்கு கர்த்தர் அனுமதித்தார். ஆனால் அங்கீகரிக்கவில்லை. காரணம் தாவீது அரசனாக வரவேண்டுமென்பதே கர்த்தருடைய சித்தம். நான் கோபத்திலே உனக்கு ராஜாவைக் கொடுத்தேன் (ஓசியா.13:11). என்று கர்த்தரே இதைப்பற்றி கூறியுள்ளார். கர்த்தருக்கு சித்தமில்லாதவைகளை கேட்டு நாம் அவரை வற்புறுத்தி வந்தால் அவர் சிலசமயம் அவைகளை நம் வற்புறுத்தல் காரணமாக தரலாம். ஆனால் அது அவர் அங்கீகரிக்காமல் அனுமதிப்ப தனாலாகும். அதனால் வரும் விளைவுகளை நாம்தான் அனுபவித்துத் தீர வேண்டும். எனினும் இவ்வாறு, தான் ஒரு காரியத்தை அனுமதிக்க வேண்டுமென்பதை அவர் ஏற்கனவே அறியாதிருந்தார் என்றோ, இல்லை யென்றால், அவருடைய அனாதி தீர்மானத்தையே இது மாற்றியமைத்து விட்டது, அதை நிறைவேற்ற அவரால் முடியாமல் போய்விட்டது என்றே நாம் கருதலாகாது அவர் நமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையுமே நடப்பிக்கின்றவர் (எபே.1:12).

தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்திற்கு பிலேயாம் கதையும் சிறந்த உதாரணமாயுள்ளது (எண்.22:24). அவன் தேவனுடைய சித்தத்தைப் பற்றி அறிந்திருக்கும் பண ஆசை காரணமாக, இஸ்ரவேலை சபிக்கச் சென்றான். முதன்முறை இது கர்த்தருக்கு சித்தமல்ல என்பதை அறிந்து தன் பயணத்தை நிறுத்திக் கொண்டான் (எண்.22:9-12).தன்னுடைய பண ஆசை காரணமாக, கர்த்தர்போக வேண்டாம் என்று கூறியதை ஏற்றுக் கொள்ளாமல், இரண்டாம் முறையும் போவதற்கு அனுமதி கேட்டான்

.ஆனால் இம்முறை கர்த்தர் அவனைப் போகச் சொன்னார். இது கடவுள் தன்னுடைய சித்தத்தை மாற்றி விட்டதுபோல தென்படு கிறதல்லவா? கடவுளுடைய சித்தம் அவன் இஸ்ரவேலை சபிக்க

கூடாதென்பது. முதல் முறை போகவேண்டாமென கூறினார். இரண்டாம் முறை அவனை போக அனுமதித்தார். எனினும் அவனுடைய வழி தேவனுக்கு மாறுபாடாயிருந்ததினால், கர்த்தருடைய தூதானவர் அவனுக்கு எதிரியாக புறப்பட்டு வந்தார் (வசனம் 32). இது கர்த்தர் அவனது பயணத்தை அங்கீகரிக்கவில்லை என்பதை நமக்கு புலப்படுத்துகிறது. மட்டுமல்ல அவனால் இஸ்ரவேலை சபிக்கவும் முடியவில்லை (23:16-24, 24:1-9).எனவே நம்முடைய இச்சை காரணமாக நாம் வற்புறுத்திக் கேட்பதைக் கர்த்தர் தந்தால் அவை அவருடைய அங்கீகாரம் பெறாதவை யாயிருப்பதனால், அது அவருடைய சித்தத்திற்கு எதிரானதாகவே இருக்கும்.

## முடிவுரை:

கர்த்தருடைய தன்மை (Nature) குணயில்புகள் (Attributes) சித்தம் (will) என்பன அவர் எப்படிப்பட்டவர் என்பதை நமக்கு அறியத் தருகின்றன. கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் வளர்வதற்கு இவை உதவினால் மட்டுமே நாம் ஆவிக்குரிய பிரகாரம் வளர்ச்சியடையலாம்.

# 5. இறைவனின் திரித்துவத்தை அறிந்து கொள்ளுதல்

திரித்துவம் மனிதனுடைய பகுத்தறிவுக்குத் தடங்கலாயிருக்கிற தென்பது ஒரு வெளிப்படையான உண்மையாகும். ஏனெனில் தேவன் ஒருவரே என்று வேதவாக்கியங்கள் நன்றாகத் தெளிவுபடுத்துகின்றன (உபா.4.35,6:4, 2இராஜா.19:15, ஏசா. 44:6, சக.14:9, யோ.17:3, 1கொரி.8:4, கலா.3:20, யாக்.2:19). ஆயினும் நித்தியமாக இருக்கும் தன்மை, இறைமை நிலை.எல்லாம் வல்ல தன்மை, யாவற்றையும் அறியும் அறிவு. மாறாநிலை. நீதியுடைமை, பரிசுத்தம் ஆகிய தெய்வீகத் தன்மைகளையுடைய மூன்று ஆள்கள் அல்லது ஆள்தத்துவங்கள் இருக்கின்றன. தேவனால் அவர்கள் ஒவ்வொருவரும் நான் என்றும், ஏனைய இருவரையும் அழைக்குமிடத்து நீர் என்றும் சொல்லுதல் கூடும்.

ஒவ்வொருவரும் தேவன் என்று அழைக்கப்படுகின்றனர். பிதா - ரோமர் 1:3. குமாரன் மத்.1:23, ரோமர்.9:5, எபி.1:8, தூயாவி -அப்.5:34, எபே.2:22. ஒவ்வொருவரும் கர்த்தர் அல்லது ஆண்டவர் என்று அழைக்கப் படுகின்றனர். பிதா - மத்.11:25 குமாரன் அப்.2:36. ரோமர். 10:9, தூயாவி 2கொரி.2:17 ஒவ்வொருவரும் சிருஷ்டிகர் என்று அழைக்கப்படுகின்றனர் பிதா - ஏசா.42:5, 45:18, 1கொரி.8:6, தூயாவி ஆதி.1:1-2, யோபு 26:13, 33:4 ஒவ்வொருவரும் தேற்றரவாளன் (ஆறுதலிப்பவர்) என்று அழைக்கப் படுகின்றனர். பிதா ஏசா.51:3,12 2கொரி.1:3-4, 7:6, 2தெச.2:16-17, குமாரன் யோவான். 14:18. பிலி.2:1, 2தெச.2:16-17, தூயாவி யோ.14:16-17,26, அப்.9:31

ஆகையால் வேதாகமத்தில் வெளிப்படையாக முரண்படுத்துகிற இருவகையான சத்தியங்கள் காட்சியளிக்கின்றன. தேவன் ஒருவரே. ஆயினும் தெளிவாகத் தேவனாய்க் காண்பிக்கப்படுகிற நிலையில் அவர் மூன்று ஆள்தத்துவர்களாயிருக்கிறார்கள் (1யோவான் 5:7 பார்க்கவும்).

## திரித்துவ உபதேசத்தின் சரித்திரம்

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் ஒரு தெய்வக் கொள்கையுடையோராய் (Nonotheistic) இருந்தமையினால், கிறிஸ்தவ சபைக்குள்ளும் இக்கருத்தின் முக்கியத்துவத்தைக் கொண்டுவந்தனர். இதன்

காரணமாக, தேவனின் பன்மை நிலையை முற்றிலும் மறுதலிப்ப வர்களாகவும், குமாரனினதும் தூயாவியினதும் தேவத்துவத்தை சரியான விதத்தில் ஏற்றுக் கொள்ளாதவர்களுமாகவே இருந்தனர்.

ஆதிச்சபைப் பிதாக்கள் திரித்துவத்தைப் பற்றிய சரியான கருத்தினைக் கொண்டிருக்கவில்லை. சிலர் ஆள்தன்மையற்றிருந்த தெய்வீக வார்த்தை (Logos) சிருஷ்டிப்பின் போதே ஆள்தத்துவமுடைய நபராகியது என கருதினர். வேறு சிலர் குமாரன் ஆள்தத்துவம் உடையவராகவும், பிதாவைப் போலவே நித்தியராகவும் தெய்வீகத் தன்மையுடையவராகவும் இருந்தார் என கருதிய போதிலும் பிதாவைவிட சற்று தாழ்வானவராகவே அவரைக் கருதினர். அக்கால கட்டத்தில் தூயாவி யானவரைப் பற்றிய எண்ணம் இறையியல் கருத்துப் பரிமாறல்களில் இடம் பெறவில்லை. தூயாவியானவர் விசுவாசிகளின் இருதயத்தில் இரட்சிப்பு சம்பந்தமாக கிரியை செய்பவர் என்று மட்டுமே கருதினர். சிலர் தூயாவியை, பிதாவுக்கு மட்டுமல்ல, குமாரனுக்கும்கூட தாழ்வான தொன்றாகவே கருதினர்.

"மூவொருமை" எனும் பொருளுடைய திரித்துவம் எனும் சொல்லை இறையியலில் புகுத்தி திரித்துவ உபதேசத்தை நெறிப்படுத்த ஓரளவு முயன்றவர் *Tertulian* என்பர்கூட, திரித்துவ உபதேசத்தை சரியான முறையில் விளக்கவில்லை. இவரே முதன் முதலில் தேவனில் மூன்று ஆள்தத்துவங்கள் உள்ளதென்றும் அவர்களின் ஐக்கியத்தைப் பற்றியும் வாதிட்டவர்.

*Tertulian* உடைய காலத்தில், *Monarchianism* எனும் உபதேசம். தேவனின் ஒருமைத்தன்மையை வலியுறுத்தியதோடு, குமாரனுக்கும் உண்மையான தேவத்துவத்தைக் கொடுத்தது. எனினும், மூவொருமை என அர்த்தந்தரும் திரித்துவத்தின் உண்மையான கருத்தை இவ்வுபதேசம் மறுதலிப்பதாயிருந்தது. *Tertulian* உம் *Hippalytus* உம் இவ்வுப கீழைத்தேய சபைகளில் இவ்வுபதேசத்திற்கெதிராக வாதிட்டார். இவர்கள் அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தில் குறிப்பிட்டபடி திரித்துவ உபதேசத்தைப் போதித்தனர்.

*Origen* உடைய திரித்துவ உபதேசம் திருப்திகரமானதொன்றா யில்லை. பிதாவும் குமாரனும் தேவத்தன்மை பொருந்திய சமமானவர்கள் என்பதை அவர் சரியாக விளக்கவில்லை. எனினும் நித்திய பரம்பரை *Eternal*

*generation)* எனும் கருத்தினடைப்படையில் பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையேயுள்ள உறவை முதன் முதலில் விளக்கியவர் இவரே. தெய்வச்சாரத்தைப் பொருத்தவரை *(Divine essence)* பிதாவைவிட குமாரன் தாழ்வானவர் என்பதையே அவர் நித்திய ஜனனம். என்பதன் மூலம் விளக்கினர். இரண்டாந்தர தெய்வீக உயிர் அணுவையே பிதா குமாரனுக்கு கொடுத்தார். இதனால் குமாரன் ஒரு கடவுள் *(a God)* என கூறப்படலாமே தவிர கடவுள் *(The God)* என கூறமுடியாது. அவர் சில சமயங்களில் குமாரனை இரண்டாம் கடவுள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதுவே *Origen* இன் உபதேசத்தின் மிகப்பெரிய பிழையாகவும், பிற்கால கள்ளப்போதகமான *Arianism* தோன்ற காரணமாயுமமைந்தது. மேலும் துூயாவியை குமாரனிலும் தாழ்வானதாக கருதியது மட்டுமல்ல குமாரனால் சிருஷ்டிக்கப்பட்டதொன்றாகவும் கருதினர்.

திரித்துவ உபதேசத்தைப்பற்றிய மிகப்பெரிய தர்க்கம் கி.பி. நாலாம் நூற்றாண்டில் வாழ்ந்த *Arius* உடன் சம்பந்தப்பட்டது இவர் ஒரு தெய்வ கொள்கையை *(Monotheism)* ஆதரித்தவராதலால் தேவத்துவம் ஒரு நித்திய ஆளில் தான் அடங்கியிருக்கிறது என்று வாதிட்டார். தேவனோடிருந்த வார்த்தை *(Logos)* தெய்வீக வல்லமையே *(Divire energy)* என தெரிவித்தார். இவ்வல்லமையே கடைசியில் மாம்சமாகியது *(Incorrated)* என போதித்தார். இவரது கருத்துப்படி குமாரனுக்கு ஆரம்பம் ஒன்றுண்டு. அவர் பிதாவினால் ஜெனிப்பிக்கப்பட்டவர் என்று *Arius* கூறினாலும் அதன் அர்த்தம் குமாரன் சிருஷ்டிக்கப்பட்டவர் என்பதேயாகும். குமாரன் உலக சிருஷ்டிப்புக்கு முன் ஒன்றுமில்லாததில் இருந்து சிருஷ்டிக்கப்பட்டவர் *(Created out of nothing)* எனவே அவர் நித்தியராகவும் தெய்வீக தன்மை உடையவராகவும் இருக்க முடியாது என வாதிட்டார். குமாரனே முதலாவதாக சிருஷ்டிக்கப்பட்ட மிகப்பெரிய வஸ்து *(being)* இவர் சிருஷ்டிக்கப்பட்டதன் காரணம் இவரினூடாக உலகம் சிருஷ்டிக்கப் படுவதற்காகவே. எனவே அவர் மாற்றமடைபவர் *(Mu- table)* எனினும் அவருடைய புண்ணியங்களை தேவன் முன்னறிந்தமையால் *(foreseen Merits)* தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு. எதிர்கால மகிமையின் அடிப்படையில் தேவனுடைய குமாரன் என அழைக்கப்படுகிறார். குமாரனாக சுவீகரிக்கப்பட்டமையினால் *(adopted)* அவர் வணக்கத்திற்குரியவராக நியமிக்கப்பட்டுள்ளார் பிதாவை விட குமாரன் தாழ்வானவர் என்பது போல தென்படும் வேதவசனங்களை

*Arive* தன்னுடைய உபதேசத்துக்கு ஆதரவாக உபயோகித்தார் (நீதி.8:22. மத்.28:18, மாற்.13:32, லூக்.18:19, யோ.5:19, 14:28, 1கொரி.15:28).

*Arius* இனுடைய உபதேசம் அவரது சபைத் தலைவரான *Alexander* என்பவரின் கண்டனத்திற்குள்ளாகியது. இவர் குமாரனுடைய உண்மையான தெய்வத்துவத்தையும் நித்திய ஜனனத்தையும் (*Eternal Generation*) வலியுறுத்தியவர். எனினும் அலெக்சாந்தரியாவின் *Arch-deacon_Athanasiue* என்பவரே *Arius* இன் கொள்கைகளின் எதிரியாக திகழ்ந்தார். இவர் உறுதியான, எதற்கும் வளைந்து கொடுக்காத. சத்தியத்திற்காக போராடிய இறையியலாளர். கிறிஸ்து சிருஷ்டிக்கப்பட்டவர் என்று கூறுவது, தேவனுடன் உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்பதை மறுதலிப்பதாக உள்ளது என வாதிட்டார். இவர் தேவத்தத்துவத்தின் ஒருமைத்தத்துவத்தை வலியுறுத்திய அதேசமயம் அதன் மூலொருமையான (*Tri-unity*) திரித்துவத் திற்கு எவ்வித முரண்பாடும் ஏற்படாவண்ணம் தனது இறையியல் கருத்தை வெளியிட்டார். பிதாவும் குமாரனும் தெய்வீக தன்மையுடையவர்கள். எனினும் தேவனில் பிரிவுகளோ அல்லது வேறுபாடுகளோ இல்லை. இதனால் இரண்டாம் கடவுள் (*Theos Devteros*) என்று குமாரனைக் குறிப்பிடுவது தவறு என தெரிவித்தார். தேவனுடைய ஒருமைத் தன்மையை முக்கியப்படுத்திய அதே வேளையில், அவரில் மூன்று நபர்கள் (*Three hypostases*) இருப்பதையும் கண்டுகொண்டார். குமாரன் சிருஷ்டிக்கப்பட்ட ஆரம்பமொன்றையுடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளாத அவர், குமாரனும் ஆரம்பங்களற்ற. நித்தியமானவர் என தெரிவித்தார். குமாரன் எதையும் சார்ந்திராதவரும் தாமாகவே இருப்பவரும் என போதித்தார். மூன்று ஆள்கள் அல்லது ஆள்தத்துவங்கள் தேவனில் இருப்பதென்பது எவ்விதத்திலும் தேவனில் பிரிவுகள் இருப்பதாக கருதப்படக்கூடாதென வாதிட்ட அவர், மூன்று கடவுள்கள் தேவத்துவத்தில் இல்லை என்றும் வாதிட்டார். மூவரும் சாரத்தில் *Essence* ஒன்றானவர்கள் என அவர் கூறினார். *Athanosiue* இன் இறையியலின் அடிப்படையான நம்பிக்கையே திரித்துவத்தின் உபதேசத்திற்காக போராட அவரை ஏவியது. தேவனுடனான உறவை அல்லது ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்வதே இரட்சிப்பின் அத்திவாரம் என அவர் நம்பினார். எனவே எந்தவொரு உயிரினமும் அல்ல. தேவனால் மட்டுமே. நமக்கு இந்த உறவை

ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என விசுவாசித்தார். எனவே கிறிஸ்து தேவனாக இருந்தால் மட்டுமே இது *Arius* இற்கும் *Athanasiue* இற்கும் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையும் வாக்குவாதத்தையும் நீக்குமுகமாக கி.பி. *325* இல் நைசீய ஆலோசனைச் சங்கம் *(Council of Ncaea)* கூட்டப்பட்டது. இச்சங்கத்தில், குமாரன் நித்தியமானவர் ஆரம்பங்களுமேயன்றி அநாதியாய் இருப்பவர் எனும் கருத்தை *Arius* எதிர்த்தார். ஆனால் *Athanasiue* அதற்காக வாதிட்டார். குமாரன் ஒன்றுமில்லாதலில் இருந்து சிருஷ்டிக்கப் பட்டவர் என *Arius* வாதிட அதை மறுத்து *Athanasiue* பிதாவினுடைய தெய்வீகத் தன்மையிலிருந்து ஜெனிப்பிக்கப்பட்டவர் *(Generated from the essence of the Father)* என தெரிவித்தார். பிதாவை விட குமாரன் வேறான தன்மை பொருந்தியவர் என *Arius* கூற, அதை மறுத்து *Athanasiue,* இருவரும் ஒரே தன்மையுடையவர்கள் என வாதிட்டார்.

*Arius* இனதும் *Athanasiue* இனதும் குழுவினருக்குமிடையே வாக்குவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், *Caesavea* எனுமிடத் தைச் சேர்ந்த *Evsetive* எனும் சபை சரித்திர ஆசிரியரின் தலைமையில் மூன்றாவது குழுவொன்று இரண்டிற்கும் நடுவில் வந்தது. இக்குழுவே பெரும்பான்மையினரைக் கொண்டிருந்தது. இது *Origenistic Porty* என்று அழைக்கப்பட்டது. காரணம் *Origen* உடைய நியதிகளினால் இக்குழு ஊக்கப்படுத்தப்பட்டிருந்தது. இக்குழு *Arive* இன் கொள்கைச் சார்புடைதாய் இருந்தமையினால் குமாரனும் பிதாவினுடைய சாரத்தையும் தன்மையையும் உடையவர் என்ற கருத்தை *(Homoousios)* எதிர்த்தது. எனினும் இக்குழு *Eusebiue* இனால் முன்பு எழுதப்பட்ட பிரமாணத்தை இச்சங்கத்தில் சமர்ப்பித்தது. இப்பிரமாணம் *Athanasiue* இனுடைய மற்றெல்லா கருத்துக் களையும் ஏற்றுக்கொண்ட போதிலும் மேற்சொன்ன *Homoousios* உபதேசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு பதிலாக *Homoousios* எனும் பதத்தை உபயோகித்தது. அதாவது பிதாவும் குமாரனும் ஒரே தன்மையுடையவர்கள் அல்ல. மாறாக பிதாவைப் போன்ற தன்மை யுடையவரே *(Simllar)* குமாரன் என கூறினார் *(Homoousios).* வாக்குவாதங் கள் முடிவின்றி தொடர்ந்தமையினால், அரசன் இவ்விவதாரத்தில் தலையிட்டு, தனக்கிருந்த அதிகாரத்தைக் கொண்டு சமத்துவத்தை உருவாக்க எத்தனித்தான். எனினும் அரசனுடைய முடிவு *Athanasius* பக்கத்திற்கு வெற்றியாக

இருந்தது. இதனால் இச்சங்கம் "குமாரன் உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர், பிதாவோடே ஒரே தன்மை பொருந்தியவர்" எனும் முடிவுரையைக் கொடுத்தது. நைசீய சங்கத்தின் முடிவு அரசனுடைய தலையீட்டினாலும், அவனுடைய வல்லமையினாலும் ஏற்பட்டமையினால் அது சபையினரிடையே பூரண திருப்தியை ஏற்படுத்த வில்லை. இம்முடிவு அரசனால் பலாத்காரமாக சபையினுள் திணிக்கப்

பட்டதென்று கருதினர். *Athanasiue L* தனக்கு வெற்றியடைந்தாலும், சபையின் விவகாரங்கள் அரசாங்கத்தின் தலையீட்டினால் தீர்க்கப்படுவதை விரும்பவில்லை. தன்னுடைய வாக்குவாதத்தினாலும் தர்க்கரீதியான விவாதத்தினாலும் வேதாகம சத்தியத்தினடிப்படையில் *Arius* இனுடைய குழுவினருக்கு தன் நிலையை உறுதிப்படுத்தியிருக்கலாம் என எண்ணினான். அரசின் மாற்றம், இல்லையென்றால் அரசுக்கு லஞ்சம் கொடுத்தல் போன்றன சபையின் முடிவை மாற்றிவிடலாம் என எண்ணினான். பிற்காலத்தில் இத்தகு நிலைமை ஏற்பட்டதையும் நாம் சரித்திரத்தில் அவதானிக்கலாம்.

பிற்காலத்தில் சபை *Arius* இன் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளத்தொடங்கியது எனினும் *Arius* இன் முழுக்கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்கள் *Semi-Arians* என அழைக்கப்பட்டனர். அரசர்களும் பெரும்பான்மையினர் பக்கமே சார்ந்தனர். இதனால் *Athanasiue* உலகத்திற்கு எதிரானவனாகவே கருதப்பட்டான். ஐந்து முறை நாடுகடத்தப்பட்ட இவன் சுயபுகழுக்காக பதவியிலிருப்பவர்களினால், தன்னுடைய பதவியை இழந்துவிட்டான்.

நைசீய சங்கத்தினது முடிவுரையின் எதிர்ப்பு இருவகைப்பட்டது. *Arive* குழுவில் துணிகரமிக்கவர்கள் குமாரன் பிதாவைவிட வேறான தன்மையுடையவர் (*Heteroousios*) என கூறினார். இன்னும் சிலர் அதாவது *Semi-Arians* என அழைக்கப்படுவோர் பிதாவைப் போன்ற தன்மை யுடையவர். ஆனால் அதே தன்மையல்ல (*Homoousios*) என வாதிட்டனர். எனினும் அனைவருமே நைசீய சங்கத்தினது முடிவான ஒரே தன்மை யுடையவர் (*Homoousios*) என்பதை ஏகமனதாக எதிர்த்தனர். குமாரனு டைய முழுமையானதும் உண்மையானதுமான தேவத்துவத்தை இவர்கள் எதிர்த்தமையினால் நைசிய சங்க முடிவை எதிர்த்தனர்.

*Semi-Arians* கீழைத்தேய சபைகளிலேயே வெற்றியாளர்களாக இருந்தனர். மேலைத்தேய சபை நைசீய சங்க முடிவுக்கு விசுவாசமா யிருந்தது. இதற்கு காரணம் கீழைத்தேய சபைகள் *Origen* உடைய செல்வாக்கிற்குட்பட்டிருந்தமையும் மேலைத்தேய சபைகள் *Tertullian* இன் செல்வாக்கிற்குட்பட்டிருந்தமையுமேயாகும்.

எனவே மேலைத்தேய சபைகள் *Tertullian* இடைய உபதேசத்தின் அடிப்படையில் அமைந்த இறையியலைக் கொண்டிருந்தது. இது *Athanasius* உடைய இறையியலைப் போலவே அமைந்திருந்தது. மேலும் ரோமுக்கும் *Constantinople* இற்கும் இடையே ஏற்பட்ட போட்டியும் இவ்விடத்தில் நாம் கருத்திற்கொள்ளப்பட வேண்டியதொன்று. கீழைத்தேய சபைகளில் இருந்து *Athanasiue* துரத்தப்பட்ட பின், மேலைத்தேய சபைகள் அவனை ஏற்றுக்கொண்டது. கி.பி.341 இல் கூடிய ரோம எனினும் நைசீய இறையியலின் வெற்றியாளராக்கப்பட்ட *Ancyra* ஐச் சேர்ந்த *Marcellus* அதிகாரத்திற்கு வந்தமை *Athanasiue* இன் இறையியல் நிலையை பலவீனமடையச் செய்தது. இவன் தேவனோடிருந்த வார்த்தையின் நித்தியம் ஆள்தத்துவமற்ற தன்மை எனும் வேறுபடுத்தப் பட்ட பழைய இறையியலாளர்களின் கருத்தைத் தழுவினான். இதனால் வார்த்தை மாம்சமாகியபோதே ஆள்தத்துவமுடையதாக மாறியது எனும் கருத்துடையவனாகினான். மேலும் ஜெனிப்பிக்கப்படுதல் எனும் பதம் *(Generation)* வார்த்தை மாம்சமாவதற்கும் முன் இருந்தது என்பதைக் குறிப்பதை மறுதலித்து மாம்சமாகிய வார்த்தைக்கு தேவனுடைய குமாரன் எனும் நாமத்தைக் கொடுப்பதை மட்டுப்படுத்தி மானிட வாழ்வின் முடிவிலேயே வார்த்தையானது, உலகுக்கு முன்பான பிதாவுடனான உறவுக்கு திரும்பியது. இவ்வுபதேசம் உடைய கொள்கையை நியாயப் படுத்துவதாக அமைந்ததோடு கீழைத்தேய மேலைத்தேய சபைகளுக் கிடையேயிருந்த இடைவெளியை மேலும் பெரிதுபடுத்தும் காரணியாயும் அமைந்தது.

கீழைத்தேய, மேலைத்தேய சபை இடைவெளியை நீக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தியோகியாவில் கூடிய சங்கம் நைசீய முடிவை அங்கீகரித்தாலும் இரண்டு முக்கிய அம்சங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. குமாரன் பிதாவைப்போன்ற தன்மையுடையவர் *(Homoiouios)* என்பதையும் அவருடைய ஜெனிப்பிக்கப்படுதலையும் *(Gen- eration)* பிதாவினுடைய சித்தத்திற்கான செயல் என கூறினர். இது

மேலைத்தேய சபைகளைத் திருப்திப்படுத்துவதாய் அமையவில்லை. இதனைத் தொடர்ந்து பல அங்கங்கள் கூடின. இவைகளின் கொள்கையை பின்பற்றியவர்கள் *Athanasiue* இன் இடத்தை மேலைத்தேய சபைகளில் இருந்து அகற்றுவதன் மூலமாக, தம் கொள்கையை நிலைநிறுத்த எடுத்த முயற்சிகள் யாவும் வியர்த்தமாகின. எனினும் *Constantive* சக்கர வர்த்தியாகும்வரை இவர்களுடைய முயற்சிகள் யாவும் வெற்றி யளிக்கவில்லை. ஆனால் *Constantive* சர்வவல்லமை பொருந்திய சக்கரவர்த்தியாகிய பின், மேலைத்தேய சபைத்தலைவர்கள் அனைவரை யும் *Eusebions* இன் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வைத்தான். இம்முயற்சி கி.பி. 355 இல் கூடிய *Arles* சங்கத்திலும் *Milan* சங்கத்திலும் நடைபெற்றது.

பிழையான காரணத்திற்காக ஏற்பட்ட வெற்றி அபாயகரமானது என்பது மறுபடியும் நிருபணமாகியது. உண்மையில் நைசீய குழுவின் எதிர்ப்புக்குழு பிரிவடையும் நிலைக்கான அறிவிப்பாகவே அது அமைந்தது. காரணம் நைசீய குழுவை எதிர்ப்பதற்காக மட்டுமே, வேறுபட்ட கருத்துக் களைக் கொண்ட குழுக்கள் யாவும் ஒன்றிணைந்தன. வெளிப்புற அழுத்தங் கள் *(Eternal pressure)* குறைவடைந்த பின், உள்ளக ஒன்றுமையின்மை வெளிப்படையாகத் தென்படத்தொடங்கியது. *Arians* க்கு *Semi-Arians* க்கு சில விடயங்களில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

கி.பி. 357 இல் கூடிய *Sirmium* சங்கம் சகல குழுவினரையம் இணைக்கமுற்பட்டு, *Ousia, Homoousios, Homoiousios* போன்ற பதங்கள் மானிட அறிவுக்கு அப்பாற்பட்டவைகள் என கூறி அவைகளை இறையியல் கலந்துரையாடல்களில் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்தது.

எனினும் இத்தகு முறையில் ஐக்கியத்தைக் ஏற்படுத்தக்கூடிய நிலையில் குழுக்கள் இருக்கவில்லை. உண்மையான *Arians* தாம் யார் என்பதைக் காட்டத்தொடங்கியதோடு. பழைமை *Semi-Arians* அனை வரையும் நைசீயன் குழுவினர் பக்கம் துரத்தி விட்டனர்.

இக்காலக்கட்டத்தில் *Origen* உடைய கல்லூரியின் மாணவரினால் உருவாக்கப்பட்ட புதியதோர் நைசீயக்குழு தோன்றியது. உண்மையில் இவர்கள் தேவவார்த்தையை சரியான விதத்தில் வியாக்கியானம் செய்யக் கற்றதற்கு *Athanasiue* இற்கும் நைசீய விசுவாசப்பிரமாணத்திற்கும்

கடன்பட்டவர்கள். இவர்களுள் *Basil the great, Gregary of Nyssa, Gregary of Naziamze* எனும் மூன்று *Coppadocians* முக்கியமானவர்கள் இவர்கள், மூவரும் *OUSIA* என்பதற்கும் (சாரம் - *Essence) PRESOPON* என்பதற்கும் (நபர் *Perdon) hypostasis* எனும் பதத்தை உபயோகிப்பதால் ஏற்படும் தவறை புரிந்து கொள்ளுதலைக் கண்டு கொண்டனர். இதனால் இப்பதத் தின் உபயோகத்தை குறைத்துக் கொண்டனர். தங்களுடைய இறையியலை *Athanasive* ஐப்போல. தேவனுடைய தெய்வீகக் சாரத்திலிருந்து ஆரம்பிக் காமல், தேவனில் மூன்று நபர்கள் *(Hypostasis)* இருப்பதில் தொடங்கி இம்மூன்றையும் தெய்வீக சாரத்தின் கீழ் கொண்டுவர எத்தனித்தனர். தேவத்துவத்தின் நபர்களுக்கிடையேயுள்ள உறவை, மூன்று மனிதர்களுக் கிடையே அவர்களுடைய மனிதத்துவத்தின் அடிப்படையிலான உறவுடன் இவர்கள் ஒப்பிட்டனர். தேவத்துவத்தில் மூன்று நபர்கள் இருப்பதற்கு இவர்கள் கொடுத்த முக்கியத்துவம் நைசீய உபதேசம் வலிமை பெறவும். கள்ளப்போதனைகளின் பிழைகள் புலப்படவும் காரணமாயமைந்தது. மட்டுமல்ல வார்த்தையின் *(Logos)* ஆள்தத்துவமும் பேணப்பட்டது. அதே சமயத்தில் இவர்கள் தேவத்துவத்தின் ஒற்றுமையையும் வலியுறுத்தினர்.

இக்காலகட்டம்வரை தூயாவியைப் பற்றிய கருத்துக்கள் இறையியல் வட்டங்களில் முக்கியத்துவம் பெறவில்லை. முரண்பாடான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. குமாரனால் சிருஷ்டிக்கப்பட முதல் வஸ்துவே *(Being)* தூயாவி என *Ariue* போதித்தார். *Origen* உம் இதே கருத்துடையவராகவே இருந்தார். *Athanasiue* இவைகளை மறுத்து தூயாவியும் பிதாவினுடைய தன்மையுடையவர் என வலியுறுத்தினார். எனினும் நைசீய விசுவாசப்பிரமாணம் பரிசுத்த ஆவியையும் விசுவாசிக் கிறேன்.எனும் பிரமாணத்தை மட்டுமே சேர்த்துக் கொண்டது. *Cappa docians* உம் *Athanasiue* இன் அடிச்சுவட்டைப் பின்பற்றி. தூயாவியின் *Homoousis* ஐ (பிதாவினுடைய அதே தன்மையுடையவர்) வலியுறுத்தினர். மேலைத்தேய *Poitiers* ஐச் சேர்ந்த *Hilary* தூயாவியானவர் தேவனுடைய ஆழங்களை ஆராய்கிறவரானபடியால், தெய்வீக தன்மைக்கு அந்நியராய் இருக்க முடியாது என வாதிட்டார். *Constantinople* இன் சபைத்தலைவரான *Nacedoniue* தூயாவியானவர், குமாரனைவிடவும் தாழ்வான சிருஷ்டி என கருதினார். எனினும் இவருடைய உபதேசம் பிழையானது என பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு. இவரது

கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் தூயாவியைப் பற்றி தீமையானவைகளைப் பேசுபவர்கள் என அழைக்கப் பட்டனர்.

கி.பி.381 இல் Constantinople இன் பொதுவான சங்கம் கூடிய போது Gregory of Nazianzue இன் வழிநடத்துதலின் கீழ் நைசீய விசுவாசப் பிரமாணத்திற்கு அனுமதியளித்து. பரிசுத்தாவியைப் பற்றி பின்வருமாறு விசுவாசப்பிரமாணத்தில் எழுதப்பட்டது. கர்த்தரும், ஜீவனைக் கொடுக்கிற வரும். பிதாவினின்று புறப்பட்டவரும் பிதாவுடனும் குமாரனோடும் கூடத் தொழுது ஸ்தோத்தரிக்கப்பட வேண்டியவரும் தீர்க்கதரிகளினூடாகப் பேசுகிறவருமான பரிசுத்தாவியையும் விசுவாசிக்கிறேன்.

இரு காரணங்களின் நிமித்தமாக Constantinople சங்கத்தின் பிரமாணம் திருப்தியற்றதாயிருந்தது. Homoousios எனும் வார்த்தை உபயோகிக்கப்படாதமையினால், தூயாவியானவர் பிதாவோடே ஒரே தன்மை பொருந்தியவர் என்பது வலியுறுத்தப்படவில்லை. தூயாவிக்கும் மற்ற இருவருக்குமிடையேயுள்ள உறவுமுறை விளக்கப்படவில்லை. தூயாவியானவர் பிதாவிலிருந்து புறப்படுகிறவர் என குறிப்பிடப் பட்டிருப்பினும். அவர் குமாரனிலிருந்து புறப்படுவதைப் பற்றி, வலியுறுத்தவோ அன்றி மறுத்துரைக்கவோ இல்லை. இவ்விடயம் எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறியமுடியாமலுமுள்ளது. தூயாவியானவர் பிதாவிலிருந்து மட்டும் புறப்படுகிறவர் என கூறுவதானது, குமாரனுக்கும் பிதாவுக்கும் இடையேயுள்ள ஒருமைத்தன்மையை மறுதலிப்பதாயுள்ளது. தூயாவி குமாரனிலுமிருந்து வந்தவர் என கூறும்போது, சார்ந்திருக்கும் நிலையை அவருக்கு கொடுப்பதைப் போன்றும், அவருடைய தேவத்து வத்திற்கு களங்கம் விளைவிப்பதாயும் உள்ளது. Athanasiue, Basil, Gregory of Nussa என்போர் தூயாவியானவர் குமாரனிலிருந்தும் புறப்பட்டவர் என்பதை எவ்விதத்திலும் எதிர்க்காத முறையில் அவர் பிதாவிலிருந்து புறப்பட்டனர் என வலியுறுத்தினர் ஆனால் Opiptionius உம் Morcullus உம் இவ்வுபதேசத்தை நேரடியாக வலியுறுத்தினர்.

மேலைத்தேய இறையியலாளர்கள், பிதாவிலும் குமாரனிலுமிருந்து புறப்பட்டவரே தூயாவியானவர் என்பதை ஏற்றுக் கொண்டனர். கி.பி. 589 இல் கூடிய Toled சங்கம் இவ்வுபதேசத்திற்கு முக்கியமானது.

கீழைத்தேய சபைகளைப் பொறுத்தவரையில், திரித்துவ உபதேசத்தின் இறுதியான கருத்தமைப்பு தமஸ்குவிலிருந்த *John* என்பவரால் கொடுக்கப்பட்டது. இவருடைய கருத்துப்படி ஒரு தெய்வீக சாரமே உள்ளது. ஆனால் மூன்று நபர்கள் இருக்கிறார்கள். இவை தெய்வ வஸ்துவில் உள்ள நிஜங்களாக கருதப்படவேண்டும். ஆனால் மூன்று மனிதர்களுக்கிடையேயான உறவு முறையின் சம்பந்த முறையைப் போன்றதாகக் கருதப்படக் கூடாது. அவர்கள் சகலவற்றிலும் ஒன்றானவர்களாக இருக்கும் நிலையில் மட்டுமே வேறுபட்டவர்கள். (பிதா ஜெனிப்பிக்கப்பட்டவர், குமாரன் ஜெனிப் பிக்கப்பட்டவர், தூயாவி புறப்பட்டவர்). மூவரும் ஒருவரை விட மற்றவர் தாழ்வானவர் அல்ல என வாதிட்டாலும், பிதாவினால் குமாரன் மூலமாக புறப்பட்டவரே தூயாவினானவர் என கருதினர். இக்கருத்து இன்றும் கூட ஒருவரைவிட மற்றவர் தாழ்ந்தவர் எனும் எண்ணத்தை மக்களுக்கு ஏற்படுத்துவதாயுள்ளது.

*Augastine* இனுடைய பிரமாண்டமான படைப்பான "*De Tuinitate*" இலேயே மேலைத்தேய திரித்துவ உபதேசம் தனது பூரணத்துவத்தைப் பெற்றது. அவர் தெய்வீகச்சாரம் தன்மை என்பவைகளின் ஒருமைத் தன்மையையும் நபர்களின் பன்மைத்தன்மையும் வலியுறுத்தினார். மூன்று நபர்களும் முழுமையான தெய்வத்துவத்தை உடையவர்களாயிருந்தமை, மூவரும் ஒரே தன்மையுடையவர்களாய் இருப்பதை அறிந்து கொள்ளக் கூடியதாயுள்ளது. இவர்கள் மூன்று மானிட நபர்களைப் போன்றவர்கள் அல்ல (அதாவது பொதுவான மானிட தன்மையின் பகுதிகளைக் கொண்டிருத்தல்) மாறாக தெய்வீக நபர்களுக்கிடையான உறவுமுறை ஒருவரில்லாமல் மற்றவர் இருக்கமுடியாத நிலையாகும். அவர்களுக் கிடையேயான சம்பந்தம் அந்நியோன்யமானது *Augastine* ஐப் பொறுத்த வரையில், தூயாவியானவர் பிதாவிலிருந்து மட்டுமல்ல, குமாரனிலிருந்தும் புறப்படுகிறவர். ஆனால் மூவரும் சமமானவர்கள். ஒருவரை விட மற்றவர் எந்தவிதத்திலும் தாழ்வானவர் அல்ல என்பதையும் வலியுறுத்தினர்.

இதன் பின் திரித்துவ உபதேசத்திற்கு மேலதிகமாக எதுவும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. எனினும் இந்நிலையில் இருந்து பிழையான உபதேசத்துக்கு இறையியலாளர் செல்வதும், மற்றவர்கள் சரியான சத்தியத்தை மறுபடியும் நிருபிப்பதாயுமிருந்தது. சிலர் மூன்று கடவுள்கள் இருப்பதாக கருதினர். சிலர் தேவனின் மூவகைக் குணவியல் புகளாக

நபர்களைக் கருதினர். இன்னும் சிலர் தேவனின் மூவகை நிலை களைப் குறிப்பதாக எண்ணினர். *Thomas acquinas* இன் எழுத்துக்களில் நாம் திரித்துவ உபதேசத்தின் வழமையான விளக்கத்தைக்காணலாம். சபை சீரத்திருத்துக் காலத்தில் *John Calvin* திருமறையின் அடிப்படையில் திரித்துவ உபதேசத்தை நெறிப்படுத்தினார்.

சீர்திருத்த காலத்திற்கு பின் திரித்துவ உபதேசத்தின் மேலதிக மான அபிவிருத்தியொன்றையும் நம்மால் காணமுடியாது. எனினும் பழைய கள்ளப் போதகங்கள் மறுபடியும் புதிய போர்வைகளின் கீழ் வந்தமையும் அவற்றை எதிர்த்து சரியான உபதேசத்தை நிலைநாட்ட எடுக்கப்பட்ட முயற்சிகளையும் நாம் சபைச் சரித்திரத்தில் காணலாம்.

## திருமறையின் அடிப்படையிலான திரித்துவ உபதேசம்

திரித்துவ உபதேசம் தேவனுடைய வெளிப்படுத்தலை அடிப்படை யாய்க் கொண்டது. இதை தத்துவ ரீதியாகவோ *(Philosophical)* தர்க்க ரீதியாகவோ *(Logical)* கற்பது இயலாததாகும். தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து ஏற்றுக் கொள்வதன் மூலமே இவ்வுபதேசத்தைக் கற்கமுடியும்.

திரித்துவ சத்தியமானது:- மெய்யான தேவன் ஒருவரே ஆயினும் தேவத்துவத்தின் ஒருமைப்பாட்டில் பிதா குமாரன், பரிசுத்த ஆவி எனும் மூன்று ஆள்கள் அல்லது ஆள்தத்துவங்கள் உண்டு. அவர்கள் ஒவ்வொரு வரும் சரிசம நித்தியமும் ஒத்த தகுதியும், ஒரே மெய்யான நிலையு முடையவர்களாய், அதே சமயத்தில் தங்களுடைய கடமைகளில் வேறுபட்டவர்களாயுமிருக்கின்றனர். (அவர்கள் முத்தேவர்கள் அல்லர்). தேவன் ஒருவரேயாயினும் ஆள்தத்துவத்தில் அவர் திரித்துவராயிருக்கிறார்.

தெய்வீகமான இக்கருத்தை விளக்குமாறு மனு மக்களின் மொழிகளில் தகுதியான அல்லது பொருத்தமான சொற்கள் இல்லாமையால் தான் 'ஆள்' அல்லது ஆள்தத்துவம் எனும் பதங்களைப் பயன்படுத்து கிறோம். நம்முடைய மானிட முறைமையின்படியுள்ள இக்கருத்துப் படிவத்தில் அடங்குமாறு தேவத்துவத்திலுள்ள மூன்று ஆள்களை வேதாகமம் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. ஆயினும் திரித்துவத் திலுள்ள மூவரும் முறையே அறிவு, உணர்ச்சி, வேகம், சித்தம் ஆகியவை களை உடையவர்களாயிருக்கின்றனர் இவ்வாறு நோக்குமிடத்து அவர்கள்

தனிப்பட்ட நிலையில் ஆள்கள் தான். இச்சொற்களைப் பயன்படுத்தும் முறைமையில், திரித்துவத்தின் முதலாம் ஆள் பிதா,இரண்டாம் ஆள் குமாரன், மூன்றாம் ஆள் தூயாவி என கூறுமிடத்து, இங்கு முன்னுரி மைக்கோ ஒருவரைக் காட்டிலும் மற்றவர் மேலானவர் என்ற நிலைக்கோ நிச்சயமாக இடமில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் தேவனே இத்திரித்துவ மாகிய மூவொருமைப்பாட்டினைக் குறித்துள்ள ஆராய்ச்சியில் திருமறை வெளிப்பாட்டின் நிலையான நடைமுறை, கீழ்காணும் அடிப்படைக் கோட்பாட்டினைக் கொண்டுள்ளது.

(அ) பிதாவானவர் இன்றியமையா நிலையில் தெய்வீகத் தன்மையின் மூலகாரணராயிருக்கிற தேவன் (அனுப்பியவர் என்ற பொருளின் படி யோ.1:18, 3:34, 12:44-45).

(ஆ) குமாரன் இன்றியமையா நிலையில் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்துகிறவராகிய தேவன் (மத்.1:23, யோ.1:14, 18, 2கொரி.5:19. பிலி.5-11, கொலோ.2:9, 1தீமோ.3:16).

(இ) தூயாவியானவர் இன்றியமையா நிலையில் தெய்வீகத்

தன்மையின் வல்லமையாயிருக்கிறவராகிய தேவன் (ஆதி.1:1-2, ரோமர்.8:10-11,15:18,1கொரி.2:5,1தெச.1:5),

*Donald and Ronald Horris* "தேவன் நமக்குக் கொடுக்குமாறு தெரிந்து கொண்டுள்ள செய்தியை ஏற்றுக்கொள்வதற்கு நாம் ஆயத்தமா யிருக்க வேண்டுமேயல்லாமல், ஆய்வுகூட ஆராய்ச்சியில் அவரை வைக்க முயல்வதும் எல்லையில்லாப் பரம்பொருளாகிய அவரை ஒரு வாய்ப்பாடு அல்லது ஆத்திரத்துக்குள் அடக்கமுற்படுவதும், மானிட ஒப்புவமை களினால் அவரை அறியற்படுவதும் கூடாது" இது திரித்துவத்தைப்பற்றி அறிந்துகொள்ள முற்படும் நாம் மனதில் வைத்திருக்க வேண்டிய சத்தியமாகும்.

**(அ) பழைய ஏற்பாட்டில் திரித்துவம்**

திரித்துவ உபதேசம் பழைய ஏற்பாட்டில் முழுமையாக வெளிப் படுத்தப்பட வில்லையானும் தேவனின் பன்மை நிலையினை ஓரளவுக்கு அறிந்து கொள்ளக் கூடியதாகவேயுள்ளது. பழைய ஏற்பாடு தேவனுடைய ஒருமைப்பாட்டின் நிலையினையே வலியுறுத்திக் கூறுகின்றன

(உபா.4:35,39, 1இராஜா.8:60, ஏசா. 45:5-6, சக.14:9, உபா. 6:4) எனினும் அந்த ஒரு தேவனின் பன்மைத்தன்மையையும் நாம் அவதானிக்கலாம்.

வேதாகமத்தின் முதல் வசனத்தில், 'எலோகிம்' (Elohim) எனும் பெயரினூடாக தேவன் தன்னை வெளிப்படுத்தியுள்ளார். இது ஒரு பன்மைப் பெயராகும். எபிரேய மொழியில் ஒருமை, இருமை, பன்மை என்று எண்ணில் மூவகைப் பாகுபாடுகள் உள்ளன. எலோகிம் ஒருமைப் பெயருமல்ல. இருமைப் பெயருமல்ல. அது பன்மைப் பெயராகும். இவ்வாறாக வேதாகமம் ஒருமையில் வல்லமையான திருமறை விளக்கத்துடன் ஆரம்பமாகின்றது. "ஆதியிலே தேவன் (எலோகிம் பன்மைப் பெயர்) வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஒருமை வினைமுற்று).

மொழிபெயர்ப்பின்றி யெகோவா, எலோகிம் என்னும் பெயர்கள் முதலிலுள்ளபடியே நம்முடைய வேதாகமப் பதிப்புகளில் மாற்றப் பட்டிருக்குமாயின் அது மிகவும் உதவியாயிருந்திருக்கும். தனியொருமைக் கோட்பாட்டினை வலியுறுத்தும் திருச்சபைப் பிரிவினரின் (Unitarians) பெருவிருப்பத்திற்குரிய உபா.6:4 ஒரே தேவனாகிய யெகோவாவின், ஆள்தத்துவங்களின் பன்மையை காண்பிக்கின்றது. இதில் எலோகிம், கர்த்தர் யெகோவா,மேலும் 'ஒருவரே' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள 'இச்சாட்' (ECHAD) எனும் எபிரேயச் சொல் கூட்டொருமைப்பொருளில் வந்துள்ளது (ஆதி.11:6 ஐப் போல) ஒன்று மட்டும்' என பொருள்படும் யாச்சிட் (YACHID) எனும் வேறோர் எபிரேயச் சொல்லும் உண்டு. அது உபா.6:4 இல் உபயோகிக்கப்படவில்லை.

ஆதி.1:26-27 இல் தேவன் (ஒருமை) நமது (பன்மை) சாயலாக வும்,நமது (பன்மை) ரூபத்தின்படியேயும் உண்டாக்குவோமாக (பன்மை) தேவன் தம்முடைய சாயலாகவே மனிதனைச் சிருஷ்டித்தார் (ஒருமை). இவ்வசனத்திலுள்ள பன்மையானது, மரியாதைப்பன்மையாகிய பதிப்பாசிரியர்கள் எனும் பொருளில் 'நாம்' என்றோ, அல்லது தேவனும் அவருடைய தூதர்களுமாகிய ஆலோசனை சங்கமொன்றும் பொருளில் நாம் என்றே பயன்படுத்தப்படவில்லை. "நமது","உண்டாக்குவோமாக' எனும் சொற்கள் பன்மைப் பொருளையே உணர்த்துகின்றன. கிழக்காசிய நாட்டு மொழிகளில் தம்மையொருமைப்பெயருக்குரிய இடத்தில்

தன்மைப் பன்மைப் பெயரைப் பயன்படுத்தும் வழக்கம் எங்குமில்லை. எனவே நமது எனும் சொல் ஒரே தேவனையே குறிக்கின்றதென்றாலும் இது பன்மைப் பெயராகவே சொல்லப்பட வேண்டும். (ஆதி.11:6-7, ஏசா.6:8).

சில இடங்களில் கர்த்தர் கர்த்தரிலிருந்து வேறுபடுத்தப் பட்டுள்ளார் ஆதி.19:24 இல் "அப்பொழுது கர்த்தர், சோதோமின் மேலும் கொமோராவின் மேலும் கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி ...ஓசியா.1:7இல. "யூதாவின் வம்சத்தாருக்கோ நான் இரக்கம் செய்வேன் என தெரிவித்த கர்த்தர். வில்லினாலும் பட்டயத்தினாலும் இரட்சியாமல், அவர்களுடைய தேவனாகிய கர்த்தராலே இரட்சிப்பேன் என்றார்.'

யெகோவுக்கு குமாரன் இருப்பதாக சில இடங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது (சங்.2:7 இதில் 'இன்று' எனும் பதம் நித்திய நிகழ்காலத்தைக் (Eternal present) குறிக்கும் இது குமாரன் நித்தியத்தில் பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர் என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது. இயேசு தேவனுடைய குமாரன் என்பதுமட்டுமல்ல (யோ.9:35, ரோமர்.1:4) அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன் (யோ.3:16,18) என்பதும் நம் கருத்திற்கொள்ளப்பட வேண்டியதொன்று. அவர் முதற்பேறானவர் (எபி.1:6) நமக்கு கொடுக்கப்படுவதற்கும் முன்பே அவர் குமாரன் (ஏசாயா 9:6) ஏனெனில், அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா.5:2). அவர் 'வல்லமையுள்ள தேவன்" என்றும் அழைக்கப்பட்டுள்ளார். (ஏசா.9:6) - (நீதி.30:4, யோபு.26:13 உம் பார்க்க).

தூயாவியும் தேவனும் வேறுபிரிக்கப்பட்டுள்ளனர். ஆதி.1:1இல் ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்றும் 1:2 இல் தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் 'என்றும் வாசிக்கின்றோம். ஆதி.6:3 இல் கர்த்தர்" என் ஆவி என்றைக்கும் மனுஷரோடே போராடப் போவதில்லை" என்றார். (எண்.27:18,சங்.51:11, ஏசா.40:13, 48:16, ஆகாய்.2:4,5).

தேவத்துவத்துக்குரிய பட்டங்களையும் பண்பியல்புகளையும் ஒன்றுக்கு மேட்பட்டவர்கள் பெற்றுக்கொள்வதை, கர்த்தருடைய தூதனானவர் வரும் இடங்களில் நாம் காணலாம். இதை குமாரன் தன்னுடைய மானிட

அவதாரத்திற்கு முன்பு காட்சியளித்த தரிசனங்கள் அவர் தேவனாகவே கருதப்பட்டுள்ளார். யாத்.3:2-4, ஆதி.16:3 இல் கர்த்தருடைய தூதானானவர் பின்னர் தேவன் என்று அழைக்கப்படுகிறார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் பரிசுத்தவான்களில் சிலர் நித்திய குமாரனை அறிந்திருந்தார்கள் (யோ.8:56, எபி.11:26, 1கொரி.10:4). கர்த்தருடைய தூதனானவரை நாம் ஆதி.16:7-14, 22:11-18, 31:11-13, யாத்.3:2-5, 14:19. 23:20,32:34, எண்.22:22-35, நியா.6:11-23.13:2-25, 1நாளா.21:15-17, 1இராஜா.19:5:7, 2இராஜா.19:35, சகரி.1:11, 3:1, ஆதி.18:13,17,20,22-23). வசனங்களின் காணலாம். இவர் சில இடங்களில் தேவனாகவும் சில இடங்களில் கர்த்தருடைய தூதனாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது தேவனின் பன்மை நிலையை புலப்படுத்துவதாயுள்ளது.

### (ஆ) புதிய ஏற்பாட்டின் திரித்துவம்

தேவத்துவத்தின் பன்மை நிலையையும் மூவரும் ஒருவரிலிருந்து மற்றவர் வேறுபட்டிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாயுள்ளது. பழைய ஏற்பாட்டில் தேவனே (யெகோவாவோ) தன்னுடைய மக்களின் மீட்பராகவும் இரட்சகராகவும் சித்தரிக்கப்பட்டுள்ளார் (யோபு.19:25, சங்.19:14,78:35, 106:21.681.41:14, 43:3, 11,14, 47:4, 49:7,26, 60:16.6181.14:3, 50:14, ஓசி,13:3), ஆனால் புதிய ஏற்பாட்டில் குமாரன் அவ்விடத்திற்குரியவரா யிருக்கிறார் (மத்.1:21, லூக்.1:76-79, 2:17, யோ.4:42, அப்.5:3, கலா.3:13, 4:5. பிலி.3:30, தீத்.2:13-14).

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் மத்தியிலும் அவருக்குப் பயப்படுகிறவர்களின் இதயத்திலும் வாசம் செய்பவர் யெகோவா சங்.74:2, 135:21, ஏசா.8:18, 57:15, எசே 43:7-9. யோ.3:17.21.சக.2:10,11, புதிய ஏற்பாட்டில் தூயாவியானவரே இவ்வாறு வாசம் செய்பவராயிருக்கிறார் (அப்.2:4, ரோமர்.8:9,11, 1கொரி.3:16, கலா.4:6, எபே.2:22, யாக் 45). பிதா குமாரனை உலகுக்கு அனுப்புகிறதைப்பற்றி புதிய ஏற்பாடு கூறுகிறது (யோ.3:16.கலா.4:4. எபி.1:6, 1யோ.4:9). பிதாவும் குமாரனும் தூயாவியை அனுப்புகிறதைப்பற்றியும் அரியத்தருகிறது.யோ.14:26. 16:7, கலா. 6:4, பிதா குமாரனுடன் பேசுவது போலவும் மாற்.1:11, லூக்.3:22, குமாரன் பிதாவுடன் பேசுவது போலவும் மத்.11:25-26, 26:39, யோ.11:41, 12:27- 28 தூயாவியானவர் விசுவாசிகளின் இதயத்திலிருந்து பிதாவிடம் வேண்டுதல் செய்வது போலவும் ரோமர்.8:26.

குறிப்பிடப்பட்டிருப்பது தேவனின் பன்மை நிலையை சுட்டிக்காட்டுவதாகவேயுள்ளது.

கிறிஸ்துவின் பிறப்பிலும் (லூக்.1:35, மத்.1:20-23) அவரின் ஞானஸ் நானத்தின் போதும் (லூக்.3:21-22) தேவனுடைய மீட்பின் செயலிலும் முதலாவது கர்த்தருடைய நாளிலும் (பிதா-அப்.2:24, 13:30, ரோமர்.6:4, குமாரன் -யோவா.10:17-18, தூயாவி- ரோமர்.8:11, 1பேது.3:18) பெந்தே கொஸ்தே நாளிலும் (பிதா-யோ.14:16, 14:26, குமாரன் 15:26,16:7) திருச் சபையின் கட்டளையிலும் (மத்.28:19) வரங்கள் அதன் ஊழியர்களிலும் (1கொரி.12:4-6) வாழ்த்துதல்களிலும் 1தெச.1:2-5, வெளி.1:4-6) துதிகளிலும் (யூதா.20-21, 2கொரி.13:14) கிறிஸ்தவ வாழ்விலும் (எபே.2:18,19) பரிசுத்த மாக்குதலிலும் பிதா-யூதா 1, 1தெச.4:3.5:23 குமாரன்-எபே.5:26. தூயாவி 2கொரி.3:18) நம்முடைய புத்திரசுவிகாரத்திலும் (பிதா -எ:பே 3-6 குமாரன் கலா.4:4-5. தூயாவி ரோமர்.8:15-16 திரித்துவ தேவனை அறிந்து கொள்ளக்கூடியதாயுள்ளது.

பிதா தேவனாகவும் (யோ.6:27. ரோமர்.1:7, கலா.1:1.3) குமாரன் தேவனாகவும் இருக்கிறார். குமாரனுக்கு தெய்வீகத் தன்மைகள் உள்ளன. அவர் நித்தியர் யோவானுக்கு முன்பு மட்டுமல்ல (யோ.1:15) ஆபிரகாமுக்கு முன்பு மட்டுமல்ல (8:58) உலகம் உருவாவதற்கும் முன்பே இருந்தவர் (17:5,24) எப்போதும் இருப்பவர் எபி.1:11, ஏசா.9:6, வெளி.1:11, ஜீவனுள்ளவர் (யோ.5:26,1:4) எங்குமிருப்பவர் (யோ.3:13.மத்.18:20, 28:20, எபே.1:2,3) எல்லாமறிந்தவர் (யோ.16:30, 21:17, 2:24,25, 1:49, 4:29, லூக்.6:8, 11:17. மத்.16:21. யோ.12:33, 13:1, யோ.6:66, மத்.24:25).

சர்வவல்லமையுள்ளவர் (வெளி.1:8, யோ.5:19.எபி.1:3) சகல அதிகாரமுமுள்ளவர் மத்.28:18.மாற்.5:11-15. லூக்.4:38-41, மத்.9:25, லூக்.7:14-15, யோ.11:43-44, மத்.8:26-27, யோ.2:11, மத்.21:19, மத்.28:18. வெளி.1:8) மாறாதவர் (எபி.13:8,1:12) தெய்வீக செயல்களை ஆற்றுபவர் எபி.1:10. யோ.1:3, கொலோ.1:16, 1:17,எபி.1:3, பாவங்களை மன்னிக்கக் கூடியவர் மத்.9:2,6, லூக்.7:47-48,மாற்.2:7) மரித்தோரை உயிர்ப்பிக்கக் கூடியவர் யோ.20:25, 28, 6:39,40,54, 11:25) நியாயாதிபதி யோ.5:22, 2கொரி.5:10, ரோமர்.14:10, வெளி.19:15, அப்.17:31, மத்.25:31,32, அப்.10:42, 2தீமோ.4:1, 1பேதுரு4:5) பழைய ஏற்பாட்டு

யெகோவாவாகக் குறிப்பிடப் பட்டுள்ளார் (சங்.102:24-27, எபி.1:10-12, ஏசா.6:1, யோ.12:41 - ஏசா.40:3, மத்.3:3-எண்.21:6-7, 1கொரி.10:9 - ஏசா.8:12, 1பேதுரு 3:15 - சங்.68:18. எபே.4:7,8). அவருடைய பெயர்களும் அவர் தேவனென்பதை அறியத் தருகின்றது. (யோ.6:41, 50,10:9, 14:6, 15:5,வெளி.22:13,3:14, மத்.1:22,23, யோ.1:11:14.வெளி.19:13) மனுஷகுமாரன் என தம்மையழைத்து அவர் யூதர்கள் எதிர்பார்த்த மேசியா என்பதை நமக்கறிவிக்கிறது. (அப்.7:56, மத்.12:32, மத்.9:6, 12:8, யோ.5:27, மத்.20:28, 13:41, 19:28, 25:12, 24:44, 26:64). அவர் கர்த்தர் (மத்.7:21-22, 22:43-44, லூக்.1:43, 2:11, யோ.20:28, அப்.16:31, 1கொரி.12:3, பிலி.2:11, அப்.16:34, ரோமர்.10:9 பிலி 2:11) அவர் தேவனுடைய குமாரன் (யோ.10:36,33, 5:18,10:33,36, 3:16, 18, 5:22. 21,26, யோ.10:10, 5:23) அவர் தேவனென்று அழைக்கப்பட்டுள்ளார் (யோ.1:1,1:18, 20:28, தீத்.2:13,எபி.1:8, 2பேதுரு.1:1, 1யோ.5:20, 1தீமோ.3:16). தேவத்துவத்திற்கான மேலதிக ஆதராங்கள் (மத்.28:19, அப்.2:38, ரோமர்.6:3, 2கொரி.13:14, 1கொரி.1:3, எபே.1:2 எபி.1:3, கொலோ.1:15 - கொலோஃ2:9 - யோ.10:31, 17:11,14:9, யோ.14:23, 2தெச.2:16-17.எபே.5:5, வெளி. 20:6, யோ.16:15,17:10) அவர் வழிபாட்டுக் குரியவர் (லூக்.5:8,மத்.14:33, 15:25, 28:9, 1கொரி.1:2, யோ.5:23, எபி.1:6).

குமாரன் மட்டுமல்ல பரிசுத்தாவியானவரும் கடவுளே அவர் ஒரு நபர் (யோ.14:17, 16:13) நபருக்குரிய செயல்களை செய்பவரும் தன்மை களைக் கொண்டவரும் அவர் (1கொரி.2:11. ரோமர்.8:27, 15:30, 1கொரி.12:11, 1கொரி.2:10, அப்.13:2, வெளி.2:7, யோ.15:26, 14:26, 16:8- 11, 3:15, ரோமர்.8:26, யோ.16:13, 16:14, அப்.13:2, 16:6-7) மற்ற இருவருக்கும் சமமமானவர் (மத்.28:19, 2கொரி.13:14) அவர் நித்தியர் (எபி.9:14.1 கொரி.2:10.11. யோ.14:26, 16:12-13) சர்வவல்லைமை பொருந்தியவர் (லூக்.1:35) எங்குமிருப்பவர் (சங்.139:7-9) சிருஷ்டிகர் (சங்.104:30. ஆதி.1:2, யோ.33:41) மறுப்பிறப்படையச் செய்பவர் (2பேதுரு 1:21, 2தீமோ.3:16) அவரது வார்த்தை தேவனுடைய வார்த்தைகளே (ஏசா.6:8-10, அப்.28:25-27, யாத்.16:7, சங்.95:8-11.எபி.3:7- 9. ஆதி.1:27, யோபு.33:4) அவர் தேவனென்று அழைக்கப்பட்டுள்ளார் (அப்.5:3-4, 2கொரி.3:17-18).

*Wifred H. Kuhrt* சுட்டிக் காட்டியதுபோல திரித்துவத்தை நிலை நாட்டப் பின்வரும் நான்கு கருத்துரைகளை மெய்யெனக் காட்டல் வேண்டும்.

கடவுள் ஒரே ஒருவர் (1இராஜா.8:60, 1கொரி.8:6,1தீமோ. 2:5

உபா.4:35,39,சங்.86:10).

நசரேயனாகிய இயேசு மெய்க்கடவுள் அதே சமயத்தில் அவர்

பிதாவுக்கு வேறுபட்டவர்.

ஆவியானவர் மெய்க்கடவுள் அதே சமயத்தில் அவர் பிதாவுக்கும் குமாரனுக்கும் வேறுபட்டவர்.

மேற்கண்ட மூவர் ஒரே ஏக கடவுள் நாம் மூன்று தெய்வங்களையல்ல.மூவராயிருக்கிற ஒரே ஏகக் கடவுளையே ஒப்புக் கொண்டு வழிபடுகிறோம்.

# 6. இறைவனின் சிருஷ்டிப்பை அறிந்து கொள்ளுதல்

தேவ நியமங்களை அறிந்து கொண்ட நாம் அதன்முதல் நிறைவேற்றும் செயற்பாடான சிருஷ்டிப்பைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

*Berkhof*உலக தோற்றத்தைப் பற்றிய சர்ச்சைக்கான தத்துவ விளக்கத்தையல்ல. மாறாக தேவன் மனிதனுக்கு வெளிப்படுத்திய உண்மையையே வேதாகமம் கொண்டுள்ளது. தேவனே அனைத்திற்கும் மூலம், அவரே அனைத்திற்கும் காரணர். அனைத்தும் அவருக்குரியதும் அவருக்கு கீழ்ப்படிவதுமாயிருக்கிறது என்றே தேவவார்த்தை நமக்கு அறியத்தருகின்றது.

சகலவிதமான தத்துவ விளக்கங்களுக்கும் எதிராக, சிருஷ்டிப் பானது தேவனுடைய சுயாதீன செயல் என்றும், ஒன்றுமில்லாததில் இருந்து உலகம் உருவாக்கப்பட்டது என்றும் *(Ex Nihilo)* ஆதிசபை போதித்தது *Theophilus* எனும் சபைப்பிதாவே சிருஷ்டிப்பின் நாட்கள் சொல்லர்த்தமான நாட்கள் *(Literal days)* என்பதை வலியுறுத்தியவர். அக்காலத்தில் சபையின் நம்பிக்கை இத்தகையதாகவே இருந்தது.

*Clement* உம் *Origen* உம், சிருஷ்டிப்பு பகுக்கப்பட முடியாத நொடிப்பொழுதில் நடைபெற்ற செயல் என்றும், அது பல நாட்களின் வேலை என வேதம் கூறுவது. சிருஷ்டிக்கப்பட்டவைகளை அவைகளின் பெறுமதியின் அடிப்படையில் அல்லது தர்க்க ரீதியான தொடர் பினடிப்படையில் விளக்கும் மொழிநடையாகும் என கருதினர். *Origen* ஆல் போதிக்கப்பட்ட நித்திய சிருஷ்டி *(Eternal Creation)* எனும் கருத்து சபையினால் பிழையென நிராகரிக்கப்பட்டது. சபைப்பிதாக்கள் தேவன் எப்போதுமே சிருஷ்டிகர் எனினும் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சம் குறிப்பிட்ட கால ஆரம்பத்தையுடையது என போதித்தனர்.

திரித்துவ உபதேச தர்க்க காலத்தில், சிலர். குமாரனின் ஜெனிப்பிக்கப்படுதல் *(Generation of the son)* தேவனின் அத்தியாவசியமான செயலாகவும், சிருஷ்டிப்பை இதிலிருந்து வேறுபடுத்தி, சிருஷ்டிப்பானது திரித்துவ தேவனின் சுயாதீன செயல் என போதித்தனர்.

எல்லோரையும் விட *Augastine* சிருஷ்டிப்பைப் பற்றி அதிகமாக எழுதியுள்ளார். சிருஷ்டிப்பு நித்தியத்திலேயே தேவனுடைய சித்தமாயிருந்தமையினால், சிருஷ்டிப்பு அவரில் எவ்வித மாற்றங்களையும் கொண்டுவரவில்லை. சிருஷ்டிப்புக்கு முன்பு காலம் இருந்ததில்லை. சிருஷ்டிப்பே அதை ஆரம்பித்தது. சிருஷ்டிப்புக்கு முன் தேவன் என்ன செய்து கொண்டிருந்தார் என கேட்பது நித்தியத்தைப் பற்றி தவறாக புரிந்து கொண்டிருப்பதையே புலப்படுத்தும்.

சபையானது ஆறு நாட்களில் தேவன் உலகைப் படைத்தார் என நம்பிய போதிலும் *Augastine* சற்று வித்தியாசமான கருத்தையுடையவராயிருந்தார். அவர் *Ex NIHILO* உபதேசத்தை (அதாவது ஒன்றுமில்லாததில் இருந்து தேவன் உலகைப்படைத்தார்) உறுதியாக பிரசங்கித்தாலும் சிருஷ்டிப்பின் இரு பொழுதுகளை அவர் வேறுபடுத்திக்காட்டினார். சடப்பொருளும் ஆவிகளும் ஒன்றுமில்லாததில் இருந்து படைக்கப்பட்டது முதற்பொழுது. இரண்டாவது அவர் சடப்பொருள் பிரபஞ்சத்தை ஒழுங்கு படுத்தியது. ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்கள் எத்தகைய நாட்கள் என்பதை அறிந்துகொள்ள சிரமப்பட்டதோடு ஒரு சணப்பொழுதில் தேவன் சகலத்தையும் சிருஷ்டித்தார் என்று போதித்த அவர், குறுகிய அறிவு படைத்த மனிதர்கள் புரிந்து கொள்வதற்காகவே நாட்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என கருதினார்.

நித்திய சிருஷ்டிப்பைப் பற்றி இறையியலாளர் பலமாக வாதிட்டு வந்தனர். சிலர் இதை மறுதலிக்கவும் செய்தனர். சிலர் வலியுறுத்தினர். சீர்திருத்தவாதிகள், *Exnihilo* உபதேசத்தை வலியுறுத்தியதோடு. சிருஷ்டிப்பு தேவனுடைய சுயாதீன செயல் என்றும் அது குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்றதென்றும் போதித்ததோடு ஆறுநாள் சிருஷ்டிப்பை வலியுறுத் தினர். ஒரு சிலரைத் தவிர 18ம் நூற்றாண்டுவரை இவ்வுபதேசமே அநேக ரால் பின்பற்றப்பட்டது. எனினும் 18ஆம் நூற்றாண்டில் பரிணாமக்கொள்கை இறையியலாளர்களை கவரத்தொடங்கியது. சிலர் வேத உபதேசத்தையும் விஞ்ஞான கல்வியையும் ஒன்றிணைக்க முயன்றனர். ஆதியாகமத்தின் முதலிரு அதிகாரங்களும் புராணத்தின் அடிப்படையில் *(Mythically)* அல்லது உருவமொழியினடிப்படையிலோ ஆவிக்குரிய அர்த்தத்தின் அடிப்படையிலோ விளக்கப்பட வேண்டியதொன்று என கருதினர். இன்னும் சிலர் ஆதியாகமம் முதலிரு வசனங்களுக்குமிடையே நீண்ட

கால இடைவெளி உண்டென்றும், நாட்கள் நீண்ட காலப்பகுதியைக் குறிக்கின்ற தென்றும் வாதிடுகின்றனர்.

தேவன் உலகைப்படைத்ததைப்பற்றி அநேக குறிப்புகள் வேதத்தில் உள்ளன *Berkhof* இவைகளை பின்வருமாறு நிரற்படுத்தியுள்ளார்.

சிருஷ்டிப்பில் தேவனுடைய சர்வவல்லமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகள் ஏசா.40:26, 28, ஆமோஸ்.4:13.

சிருஷ்டிப்பைவிட அவர் உயர்வானவர் என்பதைக் காட்டும் பகுதிகள் சங்.90:2, 102:26-27, அப்.17:24. சிருஷ்டிப்பில் அவருடைய ஞானம் செயற்படுவதை விளக்கும் பகுதிகள் ஏசா.40:12-14, எரே.10:12-16, யோ.1:3

சிருஷ்டிப்பில் அவருடைய சுயாதிபத்திய நோக்கம் இருப்பதைக் காட்டும் பகுதிகள் ஏசா.43:7. ரோமர் 1:25

சிருஷ்டிப்பை அவருடைய அடிப்படையான செயலாக கருதும் பகுதிகள் கொரி.11:9, கொலோ.1:16, அருமையான விவரணம் நெகே.9:6 இல் உள்ளது. இன்னும் அநேக பகுதிகள் தேவனே சிருஷ்டிகர் என்பதை அறியத்தருகின்றது. (ஏசா.42:5 45:18, கொலோ.1:16, வெளி.4:11, 10:6)

சிருஷ்டிப்பு எனும் பதம் ஒன்றுமில்லாததில் இருந்து சிருஷ்டிக்கப் படுதல்" எனும் அர்த்தத்திலேயே ஆதிசபையினரால் கருதப்பட்டது. எனும் எபிரேய பதமும் *Kizein* எனும் கிரேக்க பதமும் எப்போதும் இதே அர்த்தத்துடன் உபயோகிக்கப்பட வில்லை என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும். சில சமயங்களில் இரண்டாந்தர சிருஷ்டிப்புக்கும் இப்பதமே உபயோகிக்கப்பட்டது. அதாவது ஏற்கனவே சிருஷ்டிக்கப் பட்டதொன்றிலிருந்து வேறொன்று சிருஷ்டிக்கப்படுதல். எனினும் தேவனுடைய ஆரம்ப சிருஷ்டிப்பு ஒன்றுமில்லாததில் இருந்து சிருஷ்டிக்கப் பட்டதே.

சிருஷ்டிப்பு திரித்துவ தேவனின் செயலாகும் (ஆதி.1:11,ஏசா.40:12. 44:24.45:12). இது விக்கிரகங்களில் இருந்து அவரை வேறுபடுத்துவதாகும் (சங்.96:5,ஏசா.37:16.எரே.10:11-12) பிதாவே சிருஷ்டிப்பின் மூல காரணராயினும் (1கொரி.8:6) அது குமாரனினதும் (யோ.1:3.1கொரி.8:6, கொலோ.1:15-17) தூயாவியினதும் (ஆதி.1:2.யோபு:26:13, 34:4, சங்

104:30. ஏசா.40:12,13) செயலாகும். Berkhof திரித்துவத்தின் இரண்டாம் மூன்றாம் நபர்கள் சார்ந்திருக்கும் வல்லமைகளோ அல்லது வெறுமனே மத்தியஸ் தர்களோ அல்ல. மாறாக பிதாவைப் போலவே அவருடன் சுயாதீன கர்த்தாக்கள் எனினும் சிருஷ்டிப்புச் செயல் மூவரிடையேயும் பங்கிடப் படவில்லை. அது முழுமையான செயல், சகலமும் பிதாவினால் குமாரன் மூலமாக ஆவியினால் சிருஷ்டிக்கப்பட்டன.

சிருஷ்டிப்பு சுயாதீனமான செயலாகும். எதுவுமே சிருஷ்டிப்பை அலட்சியமானதாக்கவில்லை. தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக அவர் எல்லாவற்றையும் படைத்தார். எபே.1:11, வெளி4:11, அவர் தாமாகவே இருப்பவர். தம்முடைய சிருஷ்டிப்பில் எவ்விதத்திலும் சார்ந்திருப்பவர் அல்ல.

சிருஷ்டிப்பு தேவனுடைய தற்காலிக செயலாகும். அதாவது உலகம் குறிப்பிட்ட ஆரம்பத்தையுடையது அது நித்தியத்திலிருந்தே இருப்பதல்ல ஆதியிலே என்பது ஆதி.1:1 இல் காலத்தினதும் மற்ற அனைத்தினதும் ஆரம்பத்தையே குறிக்கின்றது. அது நித்தியத்தையல்ல. உலகுக்கு ஆரம்பம் என்றென்று உண்டு. உலகம் இல்லாத காலமு மிருந்தது சங்.90:2, 102:25, உலக ஆரம்பத்திற்கு முன் ஆரம்பங்களற்ற நித்தியம் இருந்தது. எனினும் சிருஷ்டிப்பு குறிப்பிட்ட ஆரம்பத்தையுடையது.

சிருஷ்டிப்பு தேவனல்ல, அவரால் சிருஷ்டிக்கப்பட்டதொன்று. தேவன் தாமாகவே இருக்கின்றவர் சிருஷ்டிப்பு அவரைச்சார்ந்திருப்பது எனினும் சிருஷ்டிப்பு தேவனல்ல (ஏசா.42:5, அப்.17:24, சங்.102:27, மல்.3:6, யாக். 1:17, சங்.90:2, 102:25-27, 103:15-17, ஏசா.2:21, 22:17, ரோமர்.1:18- 32. 18UT.2:15-17).

சிருஷ்டிப்பின் நோக்கம் தேவமகிமையை பிரகடனப்படுத்துதலே (ஏசா.43:7,60:21, 61:3, எசே.36:21, 22, 39:7, லூக்.2:14, ரோமர்.9:17, 11:36, 1கொரி.15:28, எபே.1:5, 6,9,12,14, 3:9-10, கொலோ.1:16) மனிதனுக்கான நன்மையைவிட கடவுளின் மகிமையே முக்கியமானது ஏசா.40:15-16 சிருஷ்டிப்பின் இறுதி இலக்கு தேவ மகிமையின் பிரசித்தமே.

## ஆவிக்குரிய உலகின் சிருஷ்டிப்பு

தேவதூதர்களைப் பற்றிய நம்பிக்கை ஆதிமுதலே கிறிஸ்தவ உலகில் பிரபல்யம் பெற்று விளங்கியது. நன்மையானதும் தீமையானது மான தேவதூதர்கள் இருப்பதாக சபை நம்பி வந்தது.நன்மையானவை தனிப்பட்டவைகளாக, சுயாதீனமுடைய சிருஷ்டிகளாக. மகிழ்வுடன் தேவனை சேவிக்கவும், மனிதனுக்கு பணிபுரிய தேவனால் உபயோகிக்கப் படுகின்றன என நம்பினர். தேவதூதர்கள் நல்லவையாகவே சிருஷ்டிக்கப் பட்டன எனினும் சிலர் தம் சுயாதீனத்தை தவறாக உபயோகித்து விழுந்துவிட்டன. இவ்வாறு வீழ்ந்துபோன தேவதூதர்களுக்கு தலைவனாக உயர் அந்தஸ்தில் முன்பிருந்து இப்போது விழுந்துவிட்ட பிசாசு இருக்கிறான். பிசாசினது வீழ்ச்சி அவனுடைய பெருமையும் பாவமான நோக்குமுகமாகக் கருதப்படுகையில் மற்றைய தேவதூதர்களின் வீழ்ச்சி அவர்கள் மனுஷகுமாரத்திகளை இச்சித்தமையேயாகும் என ஆதி.6:2 ஐ ஆதாரமாக வைத்து நம்புகின்றர். நல்ல தேவதூதர்களுக்கு விசுவாசிகளுக்கு பணி புரிவதே கடமை என சபை நம்பியதுமட்டுமல்ல, தனிப்பட்ட நபர்களுக்கும் சபைகளுக்கும் பாதுகாவலான தேவதூதன் ஒருவன் இருப்பதாகவும் கருதினர். வாழ்வின் இடர்கள் யாவும் தீமையான தேவதூதர்களின் செல்வாக்கினால் ஏற்படுபவை என்றும் நம்பினர்.

18ஆம் நூற்றாண்டுவரை, பொதுவாக தேவதூர்களைப்பற்றி பலவிதமான கருத்துகள் நிலவி வந்தன. ஆனால் இப்போது தேவதூதர்கள் என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டவைகள் தேவனுடைய செயல்களை விளக்க உருவக உவமானங்களாக உபயோகிக்கப்பட்டவையே என கருதுகின்றனர். எனினும் தேவ தூதர்களைப் பற்றி திருமறை கூறுவதே நாம் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய சத்தியமாகும்.

முதலில் தேவதூதர்களின் தன்மைகளைப்பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். இவை சிருஷ்டிக்கப்பட்டவையாதலால் தேவனிலிருந்து வேறுபடுகின்றது (சங்.14:2,5, கொலோ.1:16, 1இராஜா.22:19, சங்.103:20-21).எனினும் இவை எப்போது சிருஷ்டிக்கப்பட்டவை என உறுதியாக கூறமுடியாது. யோபு.38:7 இன் படி அவை மற்ற அனைத்தும் படைக்கப்படும் முன் சிருஷ்டிக்கப்பட்டவை என வாதிட்டாலும் இதை உறுதிப்படுத்த வேதத்தில் ஆதாரங்கள் எதுவுமில்லை. வானமும் பூமியும் படைக்கப்படு வதற்கு முன் தேவன் வேறு எதையும் சிருஷ்டிக்கவில்லை என்பதை நாமறிவோம் (Berkhof). யோபு. 38:7 கவிதை நடையில், உலகம் படைக்கப்படும்போது. நட்சத்திரங்கள் இருந்ததுபோல

அவைகளும் இருந்தன என்று கூறுகின்றதே. தவிர அவை வானமும், பூமியும் படைக்கப் படுவதற்கு முன்பு இருந்ததாக கூறவில்லை. சிலர் கூறுவதுபோல. வானங்களின் சிருஷ்டிப்பு முதல் நாளில் பூர்த்தியடைந்தது தூதர்களின் சிருஷ்டிப்பும் அந்நாளின் செயல் என்பதும் ஆதாரமற்ற வாதமே. ஆதி.1:2 குறிப்பிடுவது பூமியை மட்டுமே உண்மையில் வானங்களின் சிருஷ்டிப்பும் அதேபோல ஒருகனப்பொழுதில் நடைபெற்றதொன்றல்ல. ஏழாம் நாளுக்கு முன் அவை சிருஷ்டிக்கப்பட்டன. என்று கூறுவதே பொருத்தமானது (ஆதி.2:1,யாத்.20:11,யோபு.38:7, நெகே.9:6).

தேவதூதர்கள் சரீரங்களற்ற ஆவிக்குரிய சிருஷ்டிகள் (மத்.8:16,12:45, லூக்.7:21, 8:2,11:26, அப்.19:12, எபே.6:12, எபி.1:14 அவைகளுக்கு மாம்சமும் எலும்பும் இல்லை. (லூக்.24:39) திருமணம் செய்வதில்லை (மத்.22:30). சிறிய இடத்திலும் அநேக தூதர்கள் ஒருமித்திருக்க முடியும் (லூக்.8:30). மானிட கண்களுக்கு புலப்படாதவை (கொலோ.1:16) மேலும் சங்.104:4, மத்.22:30, 1கொரி.11:10 வசனங்கள். அவை சரீரமுடையவை என்பதற்கான ஆதாரமல்ல சில சமயங்களில் உருவெடுத்து வந்த தூதர்களுடைய சரீரங்கள் எத்தகையவை என்பதை நம்மால் உறுதியாக கூறமுடியாது. தேவதூதர்கள் சிருஷ்டிகளாயிருப்பதால் வரையறைகளுக்குட்பட்டவை.

தேவதூதர்கள் பகுத்தறிவுடைய, ஜீவன்கள். நெறிவுடைய ஜீவன்கள், அழியாமையுடைய ஜீவிகள், அதாவது அறிவும் சித்தமும் உடைய தனிப்பட ஜீவிகள் (2சாமு.14:20, மத்.24:36, எபே.3:10, 1பேது.1:12, 2பேதுரு.2:11) மனிதனுடைய அறிவைவிட இவைகளின் அறிவு உயர்வானது (மத்.24:36) அவை ஒழுக்க நெறியுடையவை. எனவே ஒழுக்க முடன் நடக்க கடமைப்பட்டவைகள். கீழ்ப்படியாமை தண்டனைக்குரிய குற்றமாகும். உண்மையுள்ளவைகளை பரிசுத்தமான தூதர்கள் (மத்.25:31,மாற்.8:38, லூக்.9:26, அப்.10:22, வெளி.14:10) என்றும், விழுந்து போனவை களை பாவம் செய்பவை என்றும் கூறுகின்றது (யோவா.8:44, 1யோ.3:8-10).நல்ல தூதர்கள் அழியாமையுடையவை எனும் போது அவை மரிப்ப தில்லை என்பதாகும். பரலோகத்தில் இருக்கும் பரிசுத்தவான்களுக்கு ஒப்பானவை (லூக்.20:35-35). மட்டுமல்ல பராக்கிரமும் வல்லமையு முடையவையாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன (சங்.103:20, கொலோ.1:16, எபே. 1:21, 3:10, எபே.1:14). இவை

தேவனுடைய பணிகளை செய்கையில் தீய தூதர்கள் தேவனுடைய காரியங்களை அழிக்க முயலும் பிசாசின் சேனைகளாயுள்ளன (லூக்.11:21,2தெச.2:9, 1பேதுரு 5:8)

தேவதூதர்களின் ஆரம்பநிலை எத்தகையது என்பதுபற்றி வேதம் போதிய விளக்கம் தரவில்லை. எனினும் சிருஷ்டிப்பின் முடிவில் தேவன் தான் சிருஷ்டித்தவைகளெல்லாம் நல்லவை என கண்டார். அத்தோடு யோ.8:44, 2பேது.2:4, யூதா 6 என்பன ஆதியில் தேவதூதர்கள் நல்ல நிலையில் இருந்தனர் என்பதை ஓரளவுக்கு அறியத்தருகின்றது. நல்ல தூதர்கள் 1தீமோ.5:21 இல் தெரிந்து கொள்ளப்பட்ட தூதர்கள் என அழைக்கப்பட்டுள்ளனர். அவை பரிசுத்த தூதர்கள் என்று மட்டுமல்ல. ஒளியின் தூதர்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். 2கொரி.11:14 எப்போதும் தேவ சமூகத்தைத் தரிசிப்பவர்கள் மத்.18:10 தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு நமக்கு முன் மாதிரிகளாய் இருப்பவர்கள் (மத். 6:10) அழியாமையுடையவர்கள் லூக்.20:36.

எத்தனை தேவதூதர் இருக்கின்றார்கள் என வேதம் எதுவும் கூறாவிட்டாலும் ஆயிரக்கணக்கில் இருப்பதை நாம் அறிந்திடலாம். உபா.33:2, சங்.68:17, மாற்.5:9, 15 லேகியோன் 3000 முதல் 6000 வரையிலானது (மத்.26:53, வெளி.5:11 எது எவ்வாறியிருந்த போதும் எண்ணிறைந்த தூதர்கள் உளர் என்பது உண்மையே. அவை திருமணம் செய்து இனவிருத்தியடையும் ஜீவிகள் அல்ல என்பதனால் எப்போதும் ஒரே எண்ணிக்கையளவிலான தூதர்களே உள்ளனர். தூதர்கள் பலதரப்பட்ட பெயர்களுடன் அழைக்கப்பகின்றனர். சில செய்தி யோபு.1:14. 1சாமு.11:3, ஆகாய்.1:13, மல்.2:7, 3:1 சில சமயங்களில் தேவனுடைய குமாரரர் என்றும். (யோபு.1:6, 2:1, சங்.29:1, 89:6) ஆவிகள் என்றும் எபி.1:14 பரிசுத்தவான்கள் என்றும் சங்.89:5,7, சங்.14:5, தானி. 8:13, காவலாளர் என்றும் தானி.4:13, 17,24 அழைக்கப்படுகின்றனர்.

சில தூதர்களுக்கு கொடுக்கப்பட்ட சில பெயர்கள் அவர்களின் தராதரங்களை சுட்டிக்காட்டுவனவாய் உள்ளன. கேராபீன்கள் (ஆதி.3:24. யாத்.25:18, சங்.80:1, 99:1, ஏசா.37:16, எபி.9:5, 2சாமு.22:11, சங்.18:10. எசே.. வெளி.4 கேராபீன்கள் ஏசா.6:2,6 அதிகாரங்கள் (எபே.3:10. கொலோ.2:10,1:16 எபே. 1:21, கொலோ.1:16, 1பேதுரு.3:32) காபிரியேல் மீகாவேல் எனும் இருதூதர்கள் மட்டும் பெயரிட்டு

அழைக்கப்பட்டுள்ளனர் (தானி.8:16,9:21, லூக்.1:19, 26 வெளி.8:2, 1:19). (தானி.10:13.21. யூதா 9.வெளி.12:7) தூதர்களுக்குள் இவர்கள் பிரதானமானவர்கள்.

தூதர்களின் முக்கிய பணி இரவும், பகலும் தேவனைத் துதிப்பதே யோ.38:7, ஏசா.6, சங்.103:20, 148:2, வெளி.5:11, இத்துதி மௌனமானதல்ல பாவத்தின் பின் இரட்சிப்பின் சுதந்திரத்திற்கு பணிபுரிகின்றது (எபி.1:14). பாவி மனந்திரும்புகையில் மகிழ்கிறது (லூக்.15:10). விசுவாசிகளைக் கவனித்துக்கொள்கிறது. சங்.34:7, 91:1, சிறியோரை பாதுகாக்கிறது மத்.18:10 சபையில் உள்ளது 1கொரி.11:10, 1தீமோ.5:21 சபையிலிருந்து தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தை அறிந்துகொள்கிறது (எபே.3:10, பேதுரு 1:12) விசுவாசிகளை ஆபிரகாமுடைய மடிக்கு கொண்டு செல்கிறது (லூக்.16:22). தனிப்பட்ட மக்களுக்கு பாதுகாவலாக தேவ தூதர்கள் இருப்பதாக,போதிப்பதற்கு வேதத்தில் போதுமான ஆதாரங்கள் இல்லை (மத்.18:10). இதை நிருபிப்பதாயில்லை அப்.12:15 உம் மக்களது அபிப்பிராயமேயன்றி உண்மையானதல்ல.

தூதர்களின் சிறப்பான பணி தேவ வெளிப்படுத்தலுடன் சம்பந்தப் பட்டது. இரட்சிப்பின் வெளிப்படுத்தலின் திருப்பு முனைகளில் இவர்களது பணி முக்கியத்துவம் பெற்றுள்ளது (ஆதிப்பிதாக்களின் காலம், நியாயப்பிரமாணம் கொடுக்கப்படல். சிறையிருப்பு, மீளல், கிறிஸ்துவின் பிறப்பு உயிர்த்தெழுதல், பரமேறுதல்)சிறப்பான வெளிப்படுத்தல் பூர்த்தியடைந்துள்ளமையால் இத்தகைய சிறப்பான பணி தேவதூதர் களுக்கு இப்போது இல்லை கிறிஸ்துவின் மறுவருகையின்போதே இனிமேல் இத்தகைய சிறப்புப்பணி உண்டு.

நல்ல தூதர்கள்போல தீயதூதர்களும் இருக்கின்றார்கள். இவர்கள் தேவனுடைய செயல்களை எதிர்ப்பதில் மகிழ்பவர்கள் இவர்களும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்றாலும் தேவன் தீமையாக இவைகளைப் படைக்கவில்லை. (ஆதி.1:31) தங்கள் ஆரம்ப நிலையில் இருந்து விழுந்த தூதர்களே தீய தூதர்கள் (2பேதுரு.2:4,யூதா 6). இவர்கள் செய்த பாவம் யாதென நமக்கு வெளிப்படுத்தப்படா விட்டாலும், தேவனைவிட உயர்வான இடத்தை அடைய முயற்சித்து அதிகாரத்தைப் பெற எத்தனித்த பாவம் என பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

(பிசாசு விழுந்ததும் மனிதனை விழவைக்க அவன் முயற்சித்ததும் இப்பா வத்தினாலேயே. மத்திய காலம் வரை தூதர்களின் வீழ்ச்சிக்கு ஆதி.6:2

காரணமாய்க் இதை ஏற்றுக்கொள்ளமுடியாது. (அதாவது பாலியல் வாழ்வு தேவ தூதர்களுக்கு இல்லை). மட்டுமல்ல இரண்டு வீழ்ச்சிகள் இதனடிப் படையில் உள்ளது. பிசாசு, தான் விழத்தள்ளப்படும்போது இத்தூதர் களையும் தன்னுடன் இழுத்துக் கொண்டு வந்தான் என்றே கருதவேண்டும்.

## (ஆ) சடப்பொருளுலகின் சிருஷ்டிப்பு

மற்றைய புராதன இனத்தினரைப் போலவே யூதர்களும் சிருஷ்டிப்பைப்பற்றி நம்பிக்கையுடையவராயிருந்தனர். ஆதியாகமச் சிருஷ்டிப்பு விளக்கத்தின் சில அம்சங்கள் மற்றைய புராணக்கதைகளில் இருப்பினும் பாரிய பல வேறுபாடுகளும் இருக்கின்றன என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

ஆதியாகம குறிப்புகள் சடப்பொருலுலகின் சிருஷ்டிப்பு விவரத்தையே நமக்கு தருகின்றன. ஆதியுலக சிருஷ்டிப்பு அதனது நோக்கமல்ல. தத்துவங்கள். காரண காரியங்களைக் கண்டறிவதனடிப் படையில் உலக தோற்றத்தைப் பற்றி சிந்திக்கையில் திருமறை தேவனில் இருந்து சிருஷ்டிப்பை ஆரம்பிக்கின்றது. அவருடன் சகலமும் தொடர் புடையதாக அவருடைய சுய வெளிப்பாட்டைச் சார்ந்ததாக அது உள்ளது.

ஆதியாகம சிருஷ்டிப்பு விவரணம், பாபிலோனிய சிருஷ்டிப்பு கதையின் தழுவல் என கருதுவோரும் உளர். இவற்றில் காணப்படும் ஒற்றுமைகள்.

ஒழுங்கற்ற பூமி ஒழுங்குபடுத்தப்படல்.

ஆகாய விரிவுக்கு மேலும் கீழும் உள்ள தண்ணீர வேறுபடுத்தப்படுதல்.

நான்காம் ஆறாம் நாட்களின் சிருஷ்டிப்பு.

ஏழு நாட்களின் எனினும் இவைகளை விட, இரண்டுக்குமிடையேயுள்ள வேறுபாடே முக்கியமானது.

பாபிலோனிய கதை புராணக்கதை மட்டுமல்ல அது பல தெய்வக் கொள்கையினடிப்படையிலானது. தெய்வங்கள் உயர்வானவைகளாக அல்ல போட்டியும் பொறாமையும் கொண்ட சண்டை சச்சரவுகளுடனானவை

களாகும். ஒழுங்கற்ற புவியை ஒழுங்கு படுத்துமாறு தெய்வம் நீண்டகால மாக ட்யமட் (Tiamat) எனும் வேதாளத்துடன் போராட வேண்டியுமிருந்தது. எனினும் ஆதியாகம சம்பவம் ஒரு கணப்பொழுதில் தேவ வார்த்தை வல்லமையுடன் சிருஷ்டித்ததைக் காணலாம்.

ஆதியாகமம் 1:1 சிருஷ்டிப்பு கதைக்கான தலைப்பு என சிலர் கருதுகின்றனர். எனினும் இது பின்வரும் காரணங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது. இது தலைப்பானால் ஒன்றுமில்லாததில் இருந்து கடவுள் ஒன்றையும் சிருஷ்டிக்கவில்லை. ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்த பூமியை ஒழுங்குபடுத்தியது மட்டுமே தேவனுடைய சிருஷ்டிப்பு செயல் என அர்த்தந்தந்துவிடும்.

முதல் வசனமும் இரண்டாம் வசனமும் எபிரேய புணரிடைச் சொல்லான Waw(and) இனால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. முதல் வசனம் தலைப்பானால் இது இவ்வாறு இருக்க முடியாது.

ஆரம்ப சிருஷ்டிப்பைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லாமல் போய்

விடும்.

மற்றைய வசனங்கள் வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்டதைப் பற்றி எதுவுமே கூறவில்லை.

ஆதி.1:1 பிரபஞ்சத்தின் சிருஷ்டிப்பைப் பற்றியே நமக்கு கூறுகிறது. 'வானம்' காணப்படாத உலகை குறிக்கின்றது. வெளியிலுள்ளவைகளின் சிருஷ்டிப்பாக இதை கருதமுடியாது. காரணம் இவைகளின் சிருஷ்டிப்பைப் பற்றி மற்றைய வசனங்கள் கூறுகின்றன. ஆதி.1:1 சிருஷ்டிப்பின் பின்னால் பூமியின் நிலையைக் குறிக்கின்றது.

ஒன்றுமில்லாததிலிருந்து இப்பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்ட பின்

அதனையடுத்த ஆறு நாட்களிலும் ஒழுங்கற்றிருந்த உலகம் உயிரினங்கள் வாழும் வண்ணம் ஒழுங்குபடுத்தப்பட்டன.

ஆதிகாமத்தின் நாட்கள் 24 மணிநேரம் கொண்ட நாட்கள் அல்ல மிக நீண்ட காலத்தை உள்ளடக்கிய யுகங்கள் என கருதுவதும் உண்டு. ஆதிசபை பிதாக்கள். சிலர் சிருஷ்டிப்பு செயல் ஒரு கணப்பொழுதின் செயல் என்றும், நாட்கள் உருவக மொழியில் குறுகிய அறிவுபடைத்த

மனிதன் புரிந்துகொள்ளும் வண்ணம் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும் கருதினர். இப்போது பரிணாமக் கொள்கைக்கு சார்பாக இக்கருத்து சொல்லர்த்தமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

ஆதியாகம நாட்கள் 24 மணிநேர நாட்கள் அல்ல என்பதற்கு அறிஞர்கள் கூறும் கருத்துகள்:

சூரியன் நான்காம் நாளே சிருஷ்டிக்கப்பட்டுள்ளமையினால், அதற்கு முந்திய நாட்களை சூரியனுக்கும் புவிக்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் கணிப்பிட முடியாது.

ஆதியாகம நாட்கள், தேவனுடைய நாட்கள் அவருக்கு

ஆயிரம் வருஷம் ஒருநாள் (சங்.90:4, 2பேது.3:8).

கர்த்தரின் ஓய்வு நாளான ஏழாம் நாள்

பூர்த்தியுறவில்லை.

**இன்னும் ஆதியாகம நாட்கள் 24 மணிநேர நாட்களே**

என்பதற்கான வாதங்கள்:-

எபிரேய பதமான yom (நாள்) இன் சாதாரண அர்த்தம் 24 மணித்தியால நாள் என்பதே. வசன அமைப்பில் அவசியமேற்பட்டாலொழிய சாதாரண மூல அர்த்தத்திற்கு அப்பால் செல்லாமலிருக்க வேண்டியதே வேதாகம அர்த்த விளக்க நியதியாகும்.

சாயங்காலமும் விடியற்காலமுமாகி அடுத்த நாள் ஆரம்பமாகியதென ஆதியாகம எழுத்தாளர் இரவு பகல் அமைப்பையே கருதி எழுதியிருக்க வேண்டும். ஒரு சாயங்காலமும் ஒரு விடியற்காலமும் நூற்றுக்கணக்காண ஆண்டுகாலப்பகுதிக்கு இருக்கமுடியாது. இருளும் ஒளியும் இல்லாது. நூற்றுக்கணக்கான ஆண்டுகாலத்திற்கு இருந்திருக்குமாயின் தாவரங் களுக்கு என்ன நடந்திருக்கும் என்பது கேள்விக்குரியதாகிவிடும்.

யாத்.20:9-11 சிருஷ்டிப்பின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. யாத்.20:9- 11 இல் நாட்கள் 24 மணித்தியால நாட்களே. எனவே ஆதியாகம நாட் களும் 24 மணித்தியால நாட்களாகவே இருக்க வேண்டும்.

கடைசி மூன்று நாட்களும் சாதாரணமான நாட்கள் என்பதில் எவ்வித மான சந்தேகமுமில்லை. சூரியனை சுற்றும் புவி 24 மணித்தியாலங்களில் சூரியனை சுற்றி இரவு பகலை ஏற்படுத்துமே தவிர கோடிக்கணக்கான ஆண்டு காலம் அதற்கு தேவையில்லை.

முதல் நாள் வெளிச்சம் சிருஷ்டிக்கப்பட்டது. வெளிச்சமும் இருளும் வெவ்வேறாக்கப்பட்டமை இரவும் பகலுமாக நாள் பிரிவுபட காரணமாய மைந்தது. சூரியன் இல்லாதபோது வெளிச்சம் எங்கிருந்து வரும் என கேட்போரும் உளர். ஆனால், வெளிச்சம் சூரியனிலிருந்து வரும் ஒன்றல்ல என்பது விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு. வெளிச்சம் சக்திமிகு இலத்திரன் களினால் உருவாகும் இலத்திரன் அலைகளில் உள்ளன. ஆதியாகமம் சூரியனை வெளிச்சம் (or) என கூறவில்லை மாறாக வெளிச்சத்தை தாங்கும் ஒன்றென்றே (Ma'or) கூறுகிறது. விஞ்ஞானக் கண்டு பிடிப்பும் இதுவே. சகல ஜீவன்களுக்கும் வெளிச்சமே அவசியமென்பதனால் முதலா வதாக தேவனால் வெளிச்சம் படைக்கப்பட்டது மட்டுமல்ல வெளிச்சத்தை பகல் என்றும் இருளை இரவு என்றும் பெயரிட்டு தேவன் நாளைப் படைத்தார்.

இரண்டாம் நாளின் சிருஷ்டிப்பும் வேறுபடுத்தும் ஒரு செயலாகும். ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் கீழே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினர். ஆகாய விரிவுக்கு மேலேயுள்ள ஜலம் மேகங்களாகும்.

பிரிவுண்டாக்கும் செயல் மூன்றாம் நாளிலும் தொடர்கிறது. ஜலமும் வெட்டாந்தரையும் வெவ்வேறாக்கப்பட்டன (சங்.104:8 ஒப்பிடவும்). தாவர இனங்களும் மூன்றாம் நாளிலேயே படைக்கப்பட்டன.

நான்காம் நாள் சுடர்களைப் படைத்தார். இவை இரவையும் பகலையும் பிரிக்கவும், அடையாளங்களுக்காகவும் அதாவது வேறுபட்ட கால நிலையின் ஆரம்பங்கள், முக்கிய காலங்கள் என்பவற்றை குறிக்கவும் காலங்கள், நாட்கள், வருஷங்களை குறிக்கவும். உலகுக்கு ஒளி கொடுக்கவும் படைக்கப்பட்டன.

ஐந்தாம் நாள் ஆகாயத்து பறவைகளும், நீர்வாழ் இனங்களும் படைக்கப்பட்டன.

முதல் மூன்று நாட்களுக்கும் இறுதி மூன்று நாட்களுக்குமிடையே ஒற்றுமை அற்புதமானது.

ஆதியாகமம் இரண்டாம் அதிகாரம் மானிடவரலாற்றின் ஆரம்பத்தை விவரிக்கின்றதே தவிர, அது முதலாம் அதிகாரத்தை முரண்படுத்தும் இன்னுமொரு சிருஷ்டிப்பு சம்பவத்தைக் கூறவில்லை. மானிட சரித்திர ஆரம்பத்திற்கு தேவையான காரியங்களை முதலாம் அதிகாரத்திலிருந்து எடுத்து இரண்டாம் அதிகாரம் எழுதப்பட்டுள்ளது. எழுத்தாளரின் நோக்கத்திற்கு இவை அவசியமாயிருந்துள்ளன.